விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 22 ஞாயிற்றுக்கிழமை (04.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-1475)

# அதிகாரப்பகிர்வு இன்றி உரிமையை பெறமுடியாது

## தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

*ஒரு முறையான சமஷ்டி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாரப்பகிர்வு பெற்றாலேயே அன்றி, பறிகொடுக்கப்பட்ட எமது உரிமைகளை மீண்டும் பெற முடியாது என தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*



## இலங்கை ரூபாய் மீண்டும் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை ரூபாயின் பெறுமதியில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கான டொலர் தேவை அதிகரித்துள்ளமை 15

## ராஜபக்ஷக்களை இனி சிறையில் தொடர்பு கொள்ளலாம் – ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

ஊழலில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்களை சிறையில் போடும் ஆண்டாக இவ்வாண்டு காணப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ குழுவுக்கு இவ்வருடம் ஒரேயொரு 15

## பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு பின்னர் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து தீர்மானித்துள்ளேன் - ஜனாதிபதி



(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு பின்னர் அரசாங்கத்தில் ஏற்படுத்தவேண்டிய பல்வேறு மாற்றங்கள் குறித்து தான் தற்போது தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால 15

## பெண் பொலிஸார் மீது புத்தூர்ச் சந்தியில் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது புத்தூர்ச் சந்திப் பகுதியில் வைத்து நேற்று இரவு வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் முகுந்தன் சர்ஜினி (வயது 24) என்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக மேற்குறித்த வாள்வெட்டு சம்ப 15

## பேரவையின் தேர்தல் பிரசார கூட்டத்தில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நக்கா வீதி மருதடிப் பிரதேசத்தில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மீது குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் நேற்று மாலை மக்கள் கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய் 16

## ஜனாதிபதி தலைமையில் இலங்கையின் 70ஆவது சுதந்திர தினம்

(கொழும்பு)

இலங்கையின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தலைவர்களும் 15

## ஜனாதிபதி மைத்திரியும் ரணிலும் அரசியல் மோதலை நிறுத்த வேண்டும்

### சபாநாயகர் இரு தலைவர்களுக்கும் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான அரசியல் மோதலை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

சபாநாயகரின் அழைப்பின் பேரில் கொழும்பில் இடம்பெற்ற சிறப்பு சந்திப்பொன்றின்போதே, சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு தலைவர்களுக்கும் இடையிலான இந்த அரசியல் மோதல்கள், நல்லாட்சி அரசாங்கத்தின் 15

## தங்க தகட்டுடன் இந்தியப் பிரஜை கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சுமார் 06 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஒரு தொகை தங்கத் தகடு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக அவற்றை நாட்டுக்கு கொண்டு வந்த 15

## விளக்குமாறு தும்புத்தடிகளை காட்டி ரவூப் ஹக்கீமுக்கு எதிராக போராட்டம்

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று சாய்ந்தமருது பிரதேசத்துக்கு வருகை தருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த பிரதேசம் முழுவதும் கடைகள் மூடப்பட்டும் கறுப்புக் கொடிகள் 16



## அதிகளவிலான பணத்தினை வேட்பாளர்கள் வாரியிறைக்கின்றனர்

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அதிகளவில் பணத்தை செலவிடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்கினை பணத்திற்கோ அல்லது பொருளுக்கோ விற்பனை செய்வது அடிமைத்துவத்தின் அடையாளமாகும்.

சில அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் சீமெந்து மூட்டைகள் முதல் பல் வேறு பொருட் 15

கிளிநொச்சியிலும் நாங்கள்..........

மகாராஜா பொதிகள் சேவை

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்ற நாங்கள் 07.02.2018 முதல் புதிய கிளையினை கிளிநொச்சியில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம் ..........

GTV Express SRI LANKA
ParcelLk
(C-1488)

## போர்க் குற்றங்களை மறந்து விடுங்கள் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே

(கொழும்பு)

போரின் போது இடம்பெற்ற குற்றங்களை அனைவரும் மறந்து விட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே வலியுறுத்தினார். அத்துடன், நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை. நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி வருவதில்லை என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவரின் வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படு 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி தேவை

நெல்லியடியிலிருந்து 5 கிலோ மீற்றருக்கு உட்பட்ட சுற்றாடலில் 10 பரப்பு அல்லது அதற்கு மேற்பட்ட விசாலமான காணி உடன் தேவை.

**தொடர்பு:-0779481922**

(2645)


## செவ்வாயில் விசேட பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)

விசேட பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு அமைய பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் கீழ் விசேட பாராளுமன்ற அமர்வை சபாநாயகர் கரு ஜயசூரிய எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடத்தவுள்ளார்.

இதில் பங்கேற்குமாறு சபாநாயகர் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரத்திற்குள் அலுவலக தேவைக்கு வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்புகளுக்கு:- 0774031931**

(2646)


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் ஞானசேகரன்



யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Trigஜே வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஞானசேகரன் அவர்கள் 27.01.2018 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், மயில்வாகனம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயரதி அவர்களின் அன்புக் கணவரும், பியாமிளா (றாமா), சர்மிளா, டனுசன் (டனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுவேந்தன் (அஜன்), றெமூன், யூலியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இராஜேந்திரம், இராசமலர், யோகமலர், பாலச்சந்திரன், தேவராசா (வவி), சிறி (சுவிஸ்) ஆகியோரின் நேசமிகு சகோதரரும், ஜெயசீலன் (ஜீவா-ஜேர்மனி), காலஞ்சென்ற றொபின் ஆகியோரின் நேசமிகு மைத்துனரும், டரீனா, சயாஷ், இஷானா, சமீறா, சஞ்யீத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று டென்மார்க்கில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-திருமதி கந்தசாமி இராசமலர் (சகோதரி)-0765621676**

**திருமதி குமாரவேல் நிலோ-0702297060**

(சி-1492)

## ஆண்டுத் திவச அழைப்பு



தோற்றம்:12.12.1942
மறைவு:16.12.1997

**அமரர் சின்னத்தம்பி சிவகுரு**



தோற்றம்:18.04.1943
மறைவு:17.01.2017

**அமரர் செல்வராணி சிவகுரு**

அமரர் சின்னத்தம்பி சிவகுரு, அமரர் செல்வராணி சிவகுரு ஆகியோரது ஆண்டுத் திவசம் நாளை திங்கட்கிழமை 05.02.2018 (சஷ்டித் திதியில்) காலை 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சுன்னாகம் கதிரமலைச் சிவுன் தேவஸ்தான குருக்களால் ஆத்ம சாந்திப் பூஜையும், பிரார்த்தனையும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (2644)

**இல.54, பண்டிதர் மாணிக்கத் தியாகராஜர் வீதி, சுன்னாகம்.**

**குடும்பத்தினர் 0775980079, 0718825127**

## மரண அறிவித்தல்

# மயில்வாகனம் திருவருட்செல்வம்

### (உரிமையாளர் செல்வசக்தி அரிசி ஆலை, வவுனியா)



**தோற்றம்:- 05.01.1939**

**மறைவு:- 02.02.2018**

உடுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வவுனியா கந்தசாமி கோவில் வீதியை வதி விடமாகவும் கொண்ட மயில்வாகனம் திருவருட்செல்வம் 02.02.2018 வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சிவஞானம்பிள்ளை ஆகியோரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினம் அவர்களின் மருமகனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தேம்ப[illegible]ின் ஏக சகோதரனும் நடராஜா (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் மைத்துனரும், நந்தகுமாரன் (நந்தா ரயர் ஹவுஸ், வவுனியா), செல்வகுமாரி (சுதுமலை), செல்வகுமாரன் (ஜேர்மனி), தவக்குமாரன் (இலண்டன்), புஸ்பகுமாரி (கொழும்பு), கிசோர்க்குமார் (கிசோ ரயர் ஹவுஸ், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயரஞ்சனி (வவுனியா), ஸ்ரீகணேசன் (சிரேஷ்ட ஆங்கிலத்துறை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), அருளினி (ஜேர்மனி), ரஞ்சனி (இலண்டன்), ஆரூரன் (மனோன் சினி கெம்பைன்ஸ், உரிமையாளர், கொழும்பு), சுதர்சினி (ஆசிரியை, யாழ்/மீசாலை விக்கினேஸ்வர ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரவின், தர்சாயின், கீசானி, சஸ்மீரா, நதிஸ்கர், கிசோபனா, அபிஷனா, பிரதீப், தீபனா, லதுர்சன், தீபிகா, அபிசிகா, தருண், அஸ்வினி, யுவன், யதார்த் ஆகியோரின் பாசமிகு பேரனும் தேவசேனா (ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா), தேவராஜன் (கனடா), தேவபாலன் (பிரான்ஸ்), தேவகுமாரன் (பிரான்ஸ்), தேவசீலன் (பிரான்ஸ்), தேவகிருஸ்ணன் (வவுனியா), தேவரஜனி (பிரான்ஸ்), தேவகௌரி (சுவிஸ்), தேவஇந்திரா (இலண்டன்) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.02.2018 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் கந்தசாமிகோவில் வீதி, வவுனியாவிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.61, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.**


**தகவல்:- குடும்பத்தினர்**

(சி-1492)

# கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் அதிருப்தி

## இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்குமாறு பிரித்தானியாவிடம் சுமந்திரன் கோரிக்கை





(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான உரிமைகள் தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டு வருகின்ற நிலையில், பிரித்தானியா இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசருடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் இராப்போசன நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாடிய போது, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.


காணி விடுவிப்பு, காணாமல் போதல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், புதிய அரசியல் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பிரித்தானிய இளவரசருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த விடயங்களில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தாமதிக்கப்பட்டு வருவதாகவும், இதனால் மக்கள் தம் மீது அதிருப்தி கொண்டு குற்றம்சாட்டி வருவதாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கான உரிமை விடயங்கள் இலங்கையில் தாமதிக்கப்பட்டு வருவதை தானும் ஏற்றுக் கொள்வதாக பிரித்தானிய இளவரசர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது பிரித்தானியா இலங்கைக்கு கூடுதல் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் சுமந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-10)

## சேறு பூசினாலும் அபிவிருத்தி பற்றி ஐ.தே.க.மட்டும்தான் பேசுகிறதாம் பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

குறிப்பிட்ட சில கட்சிகள் ஏனையோர் மீது சேறு பூசவே அரசியல் மேடைகளைப் பயன்படுத்துகின்றன. ஆனால், மக்களினதும் நாட்டினதும் அபிவிருத்தியைப் பற்றிப் பேசும் ஒரேயொரு கட்சி ஐ.தே.கவே!" என இரத்தினபுரியில் நேற்று முன்தினம்மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"நம்மை விமர்சிப்பவர்களிடம் நாட்டை அபிவிருத்திப் பாதையில் அழைத்துச் செல்வதற்குத் தேவையான திட்டம் எதுவும் இல்லை. அதனால்தான் அவர்கள் மற்றவர்களுடைய குறைகளைத் தேடிக் கொண்டு திரிகிறார்கள்.

"தற்போதைய அரசு நாட்டின் எதிர்காலத்தை பிரகாசமானதாக ஆக்கவேண்டும், ஆக்கும்! மத்திய அரசாக இருந்தாலும் உள்ளூராட்சி அரசாக இருந்தாலும் தங்களுக்காக அரசு ஏற்படுத்தித் தந்திருக்கும் சலுகைகளையும் நன்மைகளையும் மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்." இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## செய்யாத தவறுக்காக எனக்குத் தண்டனை

### முதலமைச்சர் சாமர கவலை



(கொழும்பு)

"அரசியல்வாதிகள் பொலிஸ் நிலையங்களுக்கு, நீதிமன்றங்களுக்கு செல்வதில்லையா? அது போலத்தான் இதுவும். செய்யாத தவறுக்குத் தண்டனையை நான் அனுபவிக்கிறேன்.

மனித உரிமைகள் ஆணைக்குழு எனக்கு நீதியை வழங்குமென நான் நம்புகிறேன். நம்பிக்கை தானே வாழ்க்கை" என ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

"ஆணைக்குழு முன்னிலையில் எல்லா விபரங்களையும் சொன்னேன். உண்மையை சொல்லப் போனால் எனக்கே அநீதி நடந்துள்ளது என்பதை அவர்களுக்கு விளக்கினேன்.

அவர்கள் எனக்கு நீதியைத் தரவேண்டும். தருவார்கள் என நம்புகிறேன். நம்பிக்கைதான் வாழ்க்கை அல்லவா? இவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் நான் வந்தது எதுவித தப்பும் செய்யவில்லை என்பதால் தான் என கொழும்பு ஊடகம்ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

## 70 ஆவது சுதந்திர தினத்தில் 70 பானைகளில் பொங்கல்

(கொழும்பு)

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று 70 பானைகளில் பொங்கல் வைக்கும் நிகழ்வு, கலஹாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வை, சிவ தெய்வீகத் தொண்டு மன்றமும் நவயுகம் நற்பணி மன்றமும் இணைந்து நடத்தவுள்ளது.

இந்த பொங்கல் நிகழ்வு தெல்தோட்டை குரூப், கலஹா மகா மாரியம்மன் ஆலய முன்றலில் காலை 8.30 மணியளவில் இடம்பெறும். (இ-7)


### எமது இலக்கு நோக்கிய பயணத்தில் இதுவரை நாம் ஆற்றிய மக்கள் பணிகளிலிருந்து சில...

பகுதி 02

உணவின்றி பட்டினிச்சாவில் வதைபட்ட மக்களின் பசி போக்க தன் தோள்களில் உணவு மூடைகளை சுமந்து சென்ற ஒரேயொரு தமிழ் தலைவர் டக்ளஸ் தேவானந்தா என்றால் அது மிகையாகாது. தீவக மக்கள் அந்த நன்றியை இன்னும் மறக்கவில்லை. ஆகையால்தான் தீவகத்தை இன்னும் ஈ.பி.டி.பியின் கோட்டை என்று சக சுயலாப தமிழ் அரசியல் கட்சிகள் எடுத்துச் சொல்கின்றார்கள்.

யுத்தம் நடந்த அக்காலத்திலும், தமிழ் மக்கள் இயல்புச் சூழலுக்குத் திரும்ப வேண்டும் என்று அரசுக்கு அறிவுறுத்தியவர். அதற்காக ஊரடங்கு சட்டங்களை நீக்க வேண்டும் என்றும், கடற்றொழிலுக்குச் செல்வதில் விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்க வேண்டும் என்றும், சீர் குலைக்கப்பட்டிருந்த அரச நிர்வாகங்களை மீண்டும் மக்களுக்கு சேவை செய்யும் நிர்வா-கங்களாக இயக்க வேண்டும் என்றும் தோழர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சிகளில் வெற்றி கண்டார்..

நீதி மன்ற செயற்பாடுகள் உள்ளிட்ட சிவில் நிர்வாகக் கட்டமைப்பினை யாழ் குடாநாட்டில் மீள ஏற்படுத்துவதிலும், முழுமையான பங்களிப்பினைச் செலுத்தினார். யாழ் மாவட்டத்திற்கென போக்குவரத்து பொலிஸாரை எமது இளைஞர்களைக் கொண்டு ஏற்படுத்தி அப் பணிகளில் ஈடுபடுத்தினார்.

அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு! அபிவிருத்திக்கான தீர்வு!!..அரசியல் உரிமைக்கான தீர்வு!!! ஆகிய மூன்றையும் வென்றெடுப்பதே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கையும், வேலைத்திட்டமுமாகும் என அகர வரிசையில் முக்கொள்கை வகுத்துச் செயற்பட்டார்.

1994ஆம் ஆண்டில் ஒன்பது ஆசனங்களுடன் நாடளுமன்றம் சென்றார். 1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் அவலப்பட்டு நின்ற மக்களை பாதுகாப்பதற்காக சந்திரிகா அரசுடன் வாதாடி ஆபத்தான சூழலிலும் யாழ் குடாநாட்டில் காலடி பதித்தார்.

1996ஆம் ஆண்டு ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி யாழ். குடாநாட்டில் கால் பத்திருக்காவிட்டால் யாழ். குடாநாடு அன்றே ஒரு முள்ளிவாய்க்கால் அவலத்தைச் சந்தித்திருக்கும்.

காணாமல் போதலும், கொலைகளும், கப்பம் பெறுதல்களும், வரி வசூலிப்புகளும், மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும் மனித சமூகத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்தபோதும், காணாமல் போனோர் சங்கம் அமைத்து மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தினார். சர்வதேச அளவில் அதை அம்பலப்படுத்தினார். அதன் மூலம் காணாமல் போதல்களை இயன்றளவு கட்டுப்படுத்தினார்.

இருப்பவர்களை பாதுகாத்தார்.. காணாமல் போனோரை கண்டு பிடிக்கவும், அதற்கு பரிகாரம் தேடவும் முயற்சிகள் எடுத்தார்.

யாழில் கிருசாந்தி, புங்குடுதீவில் சாரதாம்பாள், கிழக்கில் கோணேஸ்வரி என பாலியல் வதை செய்து கொல்லப்பட்ட-வர்களுக்காக குரல் கொடுத்தார். அவர்களுக்காக கட்சி நிதியில் வழக்குகள் நடத்தி, அந்தக் கொடுமைகளுக்கு நியாயம் கேட்டதுடன், அதுபோன்ற அவலங்கள் தொடராதிருப்பதற்காகவும் பாடுபட்டார்.

மிருசுவில் படுகொலையை கண்ணால் கண்ட சாட்சியாகிய பொது மகனுக்கு ஈ.பி.டி.பி அலுவலகத்தில் பாதுகாப்பு அளித்து, நீதிமன்றம் அழைத்துச் சென்று, சம்பவத்தில் ஈடுபட்ட படையினருக்கு மரணதண்டனை தீர்ப்பு வழங்க உறுதுணையாக உழைத்தார்.

தமிழர்களுக்கு எதிரான அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த எமது மக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்களின் சுவீகரிப்பையும், தமிழர்களை மேலும் சிறுபான்மையினராக்கும் குடிசன மதிப்பீட்டையும் தடுத்து நிறுத்தினார்.

போக்குவரத்து, வீதி புனரமைப்பு, மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், குடிநீர், கல்வி, மற்றும் தமிழர் தேச உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் முடிந்தளவு நிறைவேற்றினார்.

தொண்டர் ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியைகள், சுகாதாரத் தொண்டர்கள், உள்ளூராட்சி மன்ற பணியாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் போன்ற பல்துறைகள் சார்ந்தோருக்கு நிரந்தர நியமனங்கள், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகள் என சுமார் நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி, அவர்கள் வாழ்வில் நிரந்தர ஒளி ஏற்றினார்.

1998 இல் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். குடாநாட்டில் மொத்தம் பதினேழு சபைகளில் பத்து சபைகளின் ஆட்சி செய்யும் ஆணையை மக்கள் ஈ.பி.டி.பிக்கு வழங்கினார்கள். அதை ஒரு ஆரம்பமாகக் கொண்டு முழு யாழ். குடாநாட்டு மக்களுக்கும் பொது சேவைகளை முன்னெடுக்க வழிகாட்டினார். அக்காலத்தில்தான் பாழடைந்துகிடந்த யாழ். குடாநாடு மீண்டும் புதுப்பொளிவு பெறத் தொடங்கிய பொற்காலமாக அமைந்தது.

**வீணைக்கு ஆணை வழங்குங்கள்!**
**சாதித்த நம் கரங்கள் சரித்திரம் படைக்கும் நாளை!!**

**அன்றாடத்தீர்வு! அபிவிருத்தி தீர்வு!! அரசியல் தீர்வு!!!**
**மத்தியில் கூட்டாட்சி!**
**மாநிலத்தில் சுயாட்சி!!**

என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)





(சி-018) தொடரும்...

## மன்ஜோத் கல்ரா அசத்தல் சதம்

# 4ஆவது முறையாக மகுடம் தரித்தது இளம் இந்தியா





மன்ஜோத் கல்ரா சதம் கடந்து கைகொடுக்க, 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவை 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி கொண்ட இளம் இந்திய அணி வாகை சூடியது.

இதன்மூலம் 4ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தியது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி.,'உலக கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் நியூசிலாந்தில் நடந்தது.

இத்தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய - இந்திய அணிகள் நேற்று பலப் பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய 'அவுஸ்திரேலிய அணிக்கு ஜொனதன் மெர்லோ (76) ஆறுதல் கொடுத்தார். ஜாக் எட்வேர்ட்ஸ் (28), அணித் தலைவர் ஜேசன் சங்ஹா (13) உள்ளிட்ட மற்றைய வீரர்கள் சோபிக்கவில்லை.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி, 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் இஷான் போரல், ஷிவா சிங், கமலேஷ், அனுகுல் ராய் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**மன்ஜோத் அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணி, 4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி, 23 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழையால் போட்டி சிறிது நேரம் தடைப்பட்டது. பின் மீண்டும் போட்டி ஆரம்பித்ததும், அணித் தலைவர் பிரித்வி ஷா (29) ஓரளவு கைகொடுத்தார். சுப்மன் கில் (31) நம்பிக்கை கொடுத்தார்.

பின் இணைந்த மன்ஜோத் கல்ரா, ஹர்விக் தேசாய் ஜோடி பொறுப்பாக ஆடியது. அபாரமாக ஆடிய மன்ஜோத் கல்ரா, சதம் கடந்தார். சுந்தர்லாந் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹர்விக் தேசாய், வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி, 38.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றியிலக்கை (220 ஓட்.) 8 விக்கெட்டுக்களால் அடைந்து சம்பியனானது.

துடுப்பாட்டத்தில் மன்ஜோத் கல்ரா (101), ஹர்விக் தேசாய் (47) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் சுந்தர்லாந், உப்பால் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

**நான்காவது முறை**

இந்த வெற்றியின்மூலம் இளம் இந்திய அணி, 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிண்ணத் தொடரில் 4வது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதற்கு முன், 2000, 2008, 2012ல் கிண்ணம் வென்றிருந்தது. இதன்மூலம், அதிக முறை ஜூனியர் உலக கிண்ணம் வென்ற அணிகளுக்கான பட்டியலில் அவுஸ்திரேலியாவை (3 முறை) முந்தி முதலிடம் பிடித்தது இந்தியா.

# தடுமாறுகிறது பங்களாதேஷ்



இலங்கையின் சுழல் வீரர்கள் 4ஆம் நாளாட்டத்தின் நிறைவு தறுவாயில் அசத்தல ஆட்டத்தை வெளிப்படுத்த, விக்கெட்டுக்களை இழந்த பங்களாதேஷ் தடுமாற்றத்தை சந்தித்துள்ளது.

பங்களாதேசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் சிட்டகொங்கில் நடக்கிறது. முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் 513 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர நிறைவில், இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 504 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ரோஷன் சில்வா (87), அணித் தலைவர் சண்டிமல் (37) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ரோஷனின் சதம்**

நான்காம் நாள் ஆட்டத்தில் ரோஷன் சில்வா, சண்டிமல் ஜோடி தொடர்ந்து ஜொலித்தது. ரோஷன் டெஸ்டில் முதல் சதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்காக 135 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது, ரோஷன் (109) ஆட்டமிழந்தார். தயூல் 'சுழலில்' சண்டிமல் (87), ஹெரத் (24) சிக்கினர். டிக்வெல (62) அரை சதம் கடந்து கைகொடுத்தார்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 713 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன்மூலம் 200 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பில் அதிகபட்சமாக தையூல் 4, மெஹிடி ஹசன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**முஷ்பிகூர் ஏமாற்றம்**

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு, இம்ருல் கெய்ஸ் 19 ஓட்டங்கள் எடுத்தார். சண்டகன் 'சுழலில்' தமிம் இக்பால் (41) ஆட்டமிழந்தார். முஷ்பிகுர் ரகிம் (2) ஒற்றை இலக்கில் திரும்பினார்.

இந்நிலையில் நேற்றைய 4ஆம் நாளாட்டம் நிறைவுக்கு வந்தபோது, பங்களாதேஷ் அணி 2ஆவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்கள் எடுத்து, 119 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது.

மொமினுல் ஹக் (18) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்றைய இறுதி நாள் ஆட்டத்தில் மீதமுள்ள விக்கெட்டுக்களை இலங்கை பந்துவீச்சாளர்கள் விரைவில் வீழ்த்தினால், இலங்கை எளிய வெற்றி பெறலாம்.

ஒருவேளை, பங்களாதேஷின் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்து நின்றால், போட்டியை சமன் செய்யலாம்.


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

பாக்கியம் சின்னத்தம்பி

கடந்த (05.01.2018) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் சின்னத்தம்பி பாக்கியம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (04.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை முன்பாக
ஊற்றுப்புலம்,
கிளிநொச்சி

தகவல்:
குடும்பத்தினர்
077 4[illegible] 9565

(C-1494)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2018



## ஆதரிப்பீர் உதயசூரியனை

★ ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழப் புரட்சி அமைப்பு, ஜனநாயக தமிழரசுக் கட்சி, புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் என ஐந்து கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்னும் மாற்று அணியை உருவாக்கியுள்ளோம்.

★ தமிழ்த்தேசியக் விடுதலைக் கூட்டமைப்பை உருவாக்க சக அமைப்புக்களுடன் பேசினோம். பெரும்பான்மையானோர் உடன்பட்டார்கள். ஓரிருவர் பின்வாங்கினர். போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள முயற்சித்தோம். அதுவும் கைகூடாமல் போய்விட்டது. எனவே புதிய மாற்று அணியில் அவர்களை இணைத்துக்கொள்ள முடியவில்லை.

★ ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணிக்கான ஒரு அடித்தளம் இடப்பட்டுள்ளது.

★ உதயசூரியன் சின்னத்தை தமிழ் மக்களின் பொதுவான சின்னமாக நாம் ஏற்றுள்ளோம்.

★ அரசியல் தீர்மானங்களை ஒருமித்த கருத்துடன் எடுக்கும் பொருட்டு, உயர்மட்ட அரசியல் குழுவொன்றை நியமித்துள்ளோம்.

★ எதிர்காலத்தில் சகல தமிழர் தரப்பையும் இக்கூட்டமைப்பில் இணைத்துக்கொண்டு ஒரு வலுமிக்க தமிழர் தரப்பாக செயற்படுவோம்.

★ தேர்தலுக்குப் பின்னர் அனைவரும் ஒன்றிணைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ் மக்களின் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும், வடக்கு-கிழக்கை எவ்வாறு செல்வம் கொழிக்கும் பூமியாக அபிவீருத்தி செய்ய வேண்டும் என்ற கனவுகளுடன் களமாடியவர்கள் நாம்.


★ அந்தக் கனவுகளை நனவாக்க மாற்று அணி மிக முக்கியமானது என்பதை உணர்ந்து அதனை உருவாக்க விடாமுயற்சியுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.

★ 40ஆண்டுகால எமது அனுபவங்கள் இவைகளுக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கும் என்று நம்புகிறோம்.
நவீன உலகில் கிராமங்களின் வளர்ச்சிக்கேற்ப எமது கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம்.

★ கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டங்களை வகுத்து உற்பத்தியைப் பெருக்கி, உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்து நகர்ப்புற நெரிசலைக் குறைத்து கிராமங்களை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்ற எண்ணியுள்ளோம்.

★ எனவே தென்னிலங்கை ஆளும் கட்சிகள், அந்தக் கட்சிகளின் பங்காளிகள், சில சுயேட்சைகள், தனிவழி செல்வோர் என்பவர்களைப் புறந்தள்ளி புதிய மாற்றத்திற்கான எமது பொதுச்சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து வடக்கு-கிழக்கெங்கும் அவர்களை அதிகூடிய பெரும்பான்மையுடன் வெல்ல வைக்குமாறு அன்புடனும் உரிமையுடனும் தாழ்மையுடனும் வேண்டுகின்றேன்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**



X

அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளுங்கள்.
உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்

**தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு**

(சி-022)

# என்னை விமர்சிப்பவர்களின் கனவிலும் நான் வருகிறேனாம்

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

(கொழும்பு)

என்னையும், எமது கட்சியையும் கூட்டணி அமைத்து விமர்சிக்கின்றார்கள் என்றால், நாம் வெற்றி பெற்று விட்டோம் என்று அர்த்தம். விமர்சனம் மட்டுமல்ல, பலரது கனவுகளிலும் நான் வருகிறேன் என்று எனக்கு தகவல் வருகிறதென தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்மற்றும்அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மட்டக்குளி வட்டார வேட்பாளர்கள் ராஜேந்திரன், மஞ்சுளா, முப்தி ஆகியோரை ஆதரித்து மட்டக்குளி பாரம் வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே அமைச்சர் மனோகணேசன் இதனைத் தெரிவித்தார்.

பெரிய கட்சிகள், சிறிய கட்சிகள், சுயேச்சை குழுக்கள், சிறு குழுக்கள், வேட்பாளர்கள், இலஞ்சம் வாங்கியவர்கள் ஆகியோர் என்னையும் எமது கட்சியையும் எதிர்ப்பதில் மாத்திரம் கூட்டணி அமைத்து எம்மை விமர்சிக்கின்றார்கள் என்றால், நாம் வெற்றி பெற்று விட்டோம் என்று அர்த்தம். விமர்சனம் மட்டுமல்ல. பலரது கனவுகளிலும் நான் வருகிறேன் என்று எனக்கு தகவல் வருகிறது. எமது கட்சியை எதிர்க்கின்றதாக சொல்லி, மேடை போட்டு, நான்கு பேர், ஐந்து பேர் கூட கலந்துகொள்ளாத, கூட்டங்களை ஊடகங்களில் காட்டி, இவர்கள் நடத்தும் கூத்துகள் கொழும்பு, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, என சூறாவளி பிரசாரத்தில் பறந்து, களைத்து திரியும்எனக்கு சிரித்து மகிழும் சந்தர்ப்பங்களை தருகிறது. இதற்காக இவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னை பற்றி பேசுவதை விட்டு விட்டு போய் நான்கு நல்ல விடயங்களை, நீங்கள் தப்பித்தவறி வெற்றிபெற்று பதவிக்கு வந்தால்என்ன செய்ய போகிறீர்கள் என மக்களிடம் எடுத்து சொல்லுங்கள். எனக்கெதிராக பேசுவோருக்கு தெரியாத, விளங்காத, இவர்கள் பேசாத விடயங்களை நாம் பேசுகிறோம். எடுத்து கூறுகிறோம். ஆகவே மக்கள் எங்களுடன் இருக்கிறார்கள். என் அரசியல் அனுபவம் மூலம் இது எனக்கு புரிகிறது.

இலங்கையின் மிகப்பெரிய மாநகரம் கொழும்பு. கொழும்பு மாநகரில்தான் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகங்கள், அமைச்சுகள் மற்றும் சர்வதேச தூதரகங்கள் இருக்கின்றன. இங்கேதான் இந்நாட்டின் தேசிய அரசியல் மற்றும் வர்த்தக முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

ஆகவே கொழும்பில் நாம் பலமான சமூகமாக வாழ வேண்டும். இங்கு எம் அரசியல் பலம் காலத்தின் கட்டாயம். ஏணிக்கு கொழும்பில் வழங்கப்படும் ஒவ்வொரு வாக்கும் இந்த எதிர்பார்ப்பை சாத்தியமாக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**04.02.2018**

தை 22, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.54 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.06 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை
சண்டேசுரர் குருபூசை

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
சதயம், பூராட்டாதி

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி, புத, கேது, சுக் | | | ராகு |
| சனி | செல் | குரு | சந் |

**மீனம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்புண்டு, வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும்.

**மேடம்** மற்றவர்களின் மனநிலை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கலாம், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்** மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், குறைவாகப் பேசினாலும் குறைகூறாமல் இருப்பது நல்லது, குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**கடகம்** குடும்பத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்** பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, உங்களின் திறமைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள்.

**சிம்மம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**தனுசு** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கே யென நினைக்க வேண்டிய நாள், சயன சுகக்குறைவான நாள்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

# இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு நாட்டு மீனவ சங்கங்களும் கலந்துரையாட வேண்டும்

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் இரு நாட்டு அமைச்சுக்களும் பேசுவதில் பயன் இல்லை என தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச சம்மேளன தலைவர் க.தவச்செல்வம், இரு நாட்டு மீனவ சங்கங்கங்களும் கலந்துரையாடினால் மட்டுமே இப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இரு நாடுகளும் பேசித் தீர்க்க வேண்டும் என இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வகீஸ்வரா அண்மையில் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்ஸ்தானிகரின் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாக இல்லை. இந்திய- இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்ச்சியாக இருந்து வருகின்ற ஒரு பாரிய பிரச்சினை.

இது தொடர்பில் இரு அரசும் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்கள். ஆனால் இதுவரை எந்தக் காத்திரமான முடிவும் கிடைக்கவில்லை.

இரு அரசுகளின் அமைச்சுக்கள் மட்டும் பேசுவது என்பது தமது அரசியல் தேவைக்காக மட்டுமே அன்றி மீனவர்களின் நலன் கருதி பேசவில்லை. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது பிரச்சினைகள் தொடர்பாக நாம் தான் நேரடியாகப் பேச வேண்டும்.

எனவே குறித்த விடயம் தொடர்பாக இந்திய- இலங்கை மீனவ சங்கங்கள் நேரடியாகக் கலந்துரையாட வேண்டும். அந்தக் கலந்துரையாடலில் இரு நாட்டு அமைச்சர்களும் கலந்து கொள்ளலாம். அவ்வாறான ஒரு கலந்துரையாடலின் போது தான் இந்தப் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு வரும்.

துறைசார்ந்த அனுபவம் இல்லாதவர்கள் பேசி எந்தப் பயனும் இல்லை. அனுபவம் உள்ளவர்கள் தான் கலந்து கொள்ள வேண்டும். அதற்காக நடவடிக்கைகளை உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் விகாரைகள் அமைப்பது தொடர்பாக நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் குறித்த ஒரு கட்சி தெரிவித்துள்ளது. இந்தக் கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோவில்கள், தேவாலயங்கள் என்பன இதுவரை புனரமைக்கப்படவில்லை. மீள்குடியேற்றம் முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் பௌத்த விகாரைகள் அமைப்பது என்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# நல்லிணக்க செயற்றிட்டத்தின் கீழ் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு ரூ.70 மில்.செலவில் மருத்துவ உபகரணங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவு, மயக்க மருந்து நிபுணத்துவப் பிரிவு, புற்றுநோய்ப் பிரிவு, மகப்பேற்று பிரிவு, குழந்தைகள் பராமரிப்புபிரிவு ஆகியவற்றை சக்திப்படுத்தும் நோக்குடன் 70 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் தேசிய நல்லிணக்க செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உபகரணங்களைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திவாகர், வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்மூலம் வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களில் உள்ள நோயாளிகள் பயன்பெறுவர் எனவும் இது மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தும் எனவும் தென்மாகாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை மற்றும் மகப்பேற்று சேவைகளை நாடும் பலருக்கு யாழ். மாவட்டத்திலேயே இச்சேவைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும்மகப்பேற்றுசேவைக்காக பல மக்கள் இந்தியா போன்ற அயல் நாடுகளுக்கு சிகிச்சைக்கு செல்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு அவ்வாறான சேவைகளை இலவசமாகக் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டது.

Video Laparoscopy, Ultra Sound Scanner, Colonoscopy, hysteroscopy, high pressure steam sterilizer, electro surgical and patient warming, patient monitor, 630 AT YS system, incubator, warmer, intrusion pump, plus oxymeter, 300 KVA generator உள்ளடங்கலாக பல உபகரணங்கள் 70 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் புற்றுநோய் சிகிச்சைக்காக வெளிமாவட்டங்களிலிருந்து வரும் நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை நல்லிணக்க செயற் பாட்டின் கீழ் சமூக உட்கட்டமைப்பின் ஒரு அபிவிருத் தியாக நோக்கப்படுகின்றது. (இ-7)



யாழ்.மாவட்ட செயலகமும் கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்திய பொங்கல் விழா அண்மையில் சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்:-பாஷையூர் செய்தியாளர்)

## ஒப்பந்தகாரர்களுக்கான வரிகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாணக் கிளை, உள்நாட்டு இறை வரித் திணைக்கள வடபிராந்திய அலுவலகத்துடன் இணைந்து "ஒப்பந்தகாரர்களுக்கான வரி தொடர்பான பயிற்சிப்பட்டறை/ செயலமர்வு" ஒன்றினை நாளை மறுதினம் 06.02.2018 செவ்வாய்க்கிழமை மு.ப. 8.30- பி.ப. 4.30 வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளனர்.

எனவே அனைத்து நிர்மாணிகளும் இச்செயலமர்வில் கலந்து கொண்டு வருமான வரி, பெறுமதி சேர்வரி, தேச நிர்மாண வரி தொடர்பான அனைத்து தெளிவூட்டல்களையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு 021 221 7567 எனும் தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய அதிபர் ப.சுதர்சன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி பணிப் பாளர் த.தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் சன்.தயாளன், கௌரவ விருந்தினர்களாக தாதிய உத்தியோகத்தர் (பழைய மாணவன்) சி.பவன், கிராம சேவையாளர் சி.முருகவேள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்ஜேம்ஸ்பெண்கள்பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலய விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் ஏ.மரியதாசன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கிருபாலேணர்ஸ் சாரதி பயிற் சிப்பாடசாலை அதிபர் ஏ.கிருபாகரன் கலந்து கொள்வார். (இ-10-106)

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் இராமுபிள்ளை வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை பாடசாலை அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெறும். இந்நிழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஓய்வுநிலை பிரதி செயலாளர் வே.தி.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக எழுதுவினைஞர் க.மகாலிங்கம், ஓய்வு நிலை அதிபர் செ.கந்தசாமி, யாழ்.நீதிமன்ற சமுதாய சீர் திருத்த உத்தியோகத்தர் க.சாரங்கன், கௌரவ விருந்தினராக கூட்டு றவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.விமலராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன், சிறப்பு விருந்தினராக கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ச.அமிர்தகௌரி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.தேவராஜ் தலைமையில இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய செயற்பட்டு மகிழ்வோம் மெய்வல்லுநர் போட்டி நாளை 5ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ.துஸ்யந்தன், சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி சூரியகுமார் ஜெய வீரசிங்கம், ஓய்வு பெற்ற உப அதிபர் தி.கிருபாகரன், குறிஞ்சி மருந்தக உரிமையாளர் கே.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (7)


## மணவாளக்கோல பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சாமுண்டா தேவி சமேத ஞான வைரவர் ஆலய மணவாளக்கோல பெருவிழா நாளை மறுதினம் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி மாலை 5.30 மணியளவில் சுவாமி வெளிவீதியுலா இடம்பெறும். (இ

# மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஜனாதிபதியைப் பலப்படுத்த வேண்டும்

## சு.க. அமைச்சர் சுசில் வேண்டுகோள்



(கொழும்பு)

கருத்துக் கணிப்புகளின்படி தற்போதுள்ள முறையில் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதை பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை என தெரியவருவதாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

இந்த முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்படி மாற்றியமைக்கப்பட வேண்டுமாயின் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும்.

எனினும் நாடாளுமன்றத்தை சட்டத்தின் பிரகாரம் அப்படி கலைக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் யோசனை ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

அல்லது பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். மேலும் நிதி நிலை அறிக்கை ஒன்றை தோற்கடித்தால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய அப்படியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அதனை ஜனாதிபதியால் மாத்திரமே செய்ய முடியும்.

மாற்றம் செய்ய வேண்டுமாயின் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவரான ஜனாதிபதியையே வலுப்படுத்த வேண்டும். 2019, 2020, 2025ஆம் ஆண்டு வரை எம்மால் காத்திருக்க முடியாது.

சிலருக்கு அப்படியான நிகழ்ச்சி நிரல் இருக்கலாம். ஆனால் எங்களுடைய எதிர்பார்ப்பு அதுவல்ல. மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வுகளை வழங்க வேண்டும்.

தீர்வுகளை வழங்க முடியாதிருக்கும் இடங்களில் துரிதமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மக்கள் தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தும் தேர்தலாக மாறியுள்ளது.

மாற்றத்தை ஏற்படுத்த விரும்புவோர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கட்சிகளின் சின்னங்களுக்கே வாக்களிக்க வேண்டும்.

மேலும் எமது கருத்துக் கணிப்பின் படி இம்முறை தேர்தலில் ஊழல், மோசடியற்ற உள்ளூராட்சி சபைகளை உருவாக்க வேண்டும் என்பது குறித்தே மக்கள் கூடிய கவனத்தை செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# அடுத்த வருடம் மைத்திரி வீடு செல்ல வேண்டும்

## மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய ஆட்சிக் காலத்தை 6 வருடமாக்க முயற்சித்து இறுதியில் ஐந்து வருடமாக்கிக் கொண்டுள்ளதாகவும், இதனால், அடுத்த வருடம் அவர் வீடு செல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் தேர்தல் வரவேண்டும். இதுதான் யதார்த்தம் எனவும் அவர் தெரிவித்தார்.

எம்மை சிறையில் போட்டு எமது பிரஜாவுரிமையைப் பறிப்பதன் மூலம் எமது அரசியல் பயணத்தை தடுத்து நிறுத்த இவர்களுக்கு முடியுமா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜித சேனாரட்ன தனது சட்டத்தரணிகளை போட்டாவது எம்மை சிறையில் அடைப்பதாக கூறிவருகின்றார். அமைச்சரவையிலா? தற்பொழுது வழக்கு விசாரணை நடைபெறுகின்றது எனவும் மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

மலர் மொட்டு சின்னத்தை ஆதரித்து நேற்று மாத்தறையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# காலனித்துவ காலத்தில் எடுத்த எமது பொருட்களை தாருங்கள்

## சாகர தேரர் பிரிட்டனிடம் கோரிக்கை



(கொழும்பு)

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது இலங்கையிலிருந்து எடுத்துச் சென்ற புராதன பொருட்களை இலங்கைக்கு மீண்டும் பெற்றுத் தருமாறு பிரித்தானிய இளவரசர் எட்வட்டிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக இலங்கையைப் பாதுகாப்போம் அமைப்பின் தலைவர் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்தார்.

எமது நாட்டின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ள இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள பிரித்தானிய இளவரசர் தலைமையிலான குழுவிடம் இந்த வேண்டுகோளை கையளிக்கவுள்ளதாகவும் தேரர் தெரிவித்தார். (இ-7)


### கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/Lலண்டன்<br>தொ.இ: B/7383 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 32<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/6572 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 92 செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: AATலண்டன் PR<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/7387 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 20 செவ் 12 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6576 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 36<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: B/7390 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 80 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6578 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/சாரதி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7391 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSMS/ சித்தவைத்தியர்<br>தொ.இ: G/6580 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# தென்மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

## கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் சமலி விதானாச்சி தகவல்



(கொழும்பு)

தென்மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்று நிறைவேற்றப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணசபையில் அங்கம் வகிக்கும் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் சமலி விதானாச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்களின் நம்பிக்கைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட்டுவருகிறார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை மேம்படுத்தும் வகையில் முதலமைச்சர் செயற்படுகின்றார்.

வீதிகள் அமைத்தல், தொழில் வாய்ப்பு வழங்குதல் என பல்வேறு வழிகளில் உதவியுள்ள போதிலும், மாகாணசபை உறுப்பினர்களுக்கு இந்த சலுகைகள் வழங்கப்படவில்லை.

முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை உதாசீனம் செய்துள்ள நிலையில், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். இதேவேளை, தாம் எந்தவொரு மாகாணசபை உறுப்பினரதும் சிறப்புரிமையை மீறவில்லை என முதலமைச்சர் சான் விஜலால் டி சில்வா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-10)

# வீரவன்சவிடம் 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோருகின்றார் காரியவசம்

(கொழும்பு)

குருநாகல் - குளியாப்பிட்டிய நகரில் அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளியிட்ட அவதூறு ஏற்படுத்தும் கருத்துக்கள் சம்பந்தமாக அமைச்சர் அகில விராஜ் காரியவசம் சட்டநடவடிக்கை எடுத்துள்ளார்.

அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் விமல் வீரவன்சவிடம் 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தனது சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பியுள்ளார்.

அமைச்சர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமில்லாத சொத்துக்களை அவரது குடும்பத்தினருக்கு சொந்தமானது என விமல் வீரவன்ச பட்டியலிட்டு குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எமது மக்கள் முழுமையான சுதந்திரம் பெறுவதற்கு தமிழ்த் தலைமைகள் நியாயமாக உழைக்கவில்லை!

## டக்ளஸ் எம்.பி. சுதந்திர தினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

இன்று எமது நாடு சுதந்திரம் பெற்று 70வது வருடத்தினைக் கொண்டாடி வருகின்ற நிலையில், எமது மக்கள் முழுமையான சுதந்திரத்தைப் பெறாததற்கு, எமது மக்களை வாக்குகளை அபகரித்துக் கொண்ட தமிழ்த் தலைமைகள் எமது மக்களுக்கென நியாயமாக உழைக்காமல், சுயநலமாக செயற்பட்டமையே காரணம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முந்தைய சிங்கள அரசுகளின் மாற்றான்தாய் மனப்பான்மை காரணமாக எமது பிரதேசங்கள் அபிவிருத்தியில் கைவிடப்பட்டிருந்தன. கடந்த கால யுத்தம் மற்றும் பாரிய இயற்கை அனர்த்தங்கள் மேலும் எமது மக்களையும், எமது பகுதிகளையும் பெருவாரியாகப் பாதித்துவிட்டன. இத்தகைய பாதிப்புகளிலிருந்து எமது மக்கள் மீள எழ முயற்சிக்கின்ற சந்தர்ப்பங்களில் கால நிலை மாற்றங்கள் காரணமாகவும் சுயலாப தமிழ்த் தலைமைகளின் அலட்சியப் போக்குகள் காரணமாகவும் எமது மக்களின் பிரதான வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பின்மை, வாழ்வாதாரங்களின்மை போன்ற காரணிகள் எமது பகுதிகளை வறுமையை நோக்கித் தள்ளிவிட்டுள்ளன. எமது மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கான உரிய வேலைத்திட்டங்கள் மாகாண சபையினால் முன்னெடுக்கப்படாத நிலையில், மத்திய அரசிலிருந்து வரும் வேலைத் திட்டங்களும் புறக்கணிக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் வடக்கு நோக்கி வந்திருந்த சுமார் 40க்கும் மேற்பட்ட கைத்தொழில் முயற்சிகள் வடக்கு மாகாண சபையின் ஆளுமை, அக்கறையின்மை காரணமாக வெளி மாவட்டங்களுக்குச் சென்று விட்டன.



பொருளாதார ரீதியில் மட்டுமின்றி ஏனைய அனைத்துத் துறைகள் சார்ந்தும் எமது மக்கள் இன்னும் பின்தள்ளப்பட்டே வருகின்றனர். அரச வேலை வாய்ப்புகளில் இதே நிலைமை தொடர்கின்றது.

13வது திருத்தச் சட்டத்தைவிட அதிகளவிலான அதிகாரங்களைக் கொண்ட புதிய அரசியல் யாப்பினைக் கொண்டு வந்தால் அதனை நாம் வரவேற்போம். அல்லாதுவிடில் அதனை நாம் நிச்சயமாக எதிர்ப்போம். அந்த வகையில், இந்தப் புதிய அரசியல் யாப்பு எப்போது வரும் என்று கூற முடியாது. "பாதி முடிந்துவிட்டது, மீதி முடியப் போகின்றது" என தேர்தலில் வாக்குகளை அபகரிப்பதற்காக எவரும் எதையும் கூறலாம். அவை உண்மையாகிவிட முடியாது.

எனவே, தற்போது அரசியல் யாப்பில் உள்ளதும், நாட்டில் நடைமுறையில் உள்ளதுமான 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து எமக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தை ஆரம்பிக்குமாறும், பின்னரான காலகட்டங்களில் படிப்படியாக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து, இறுதி இலக்கினை நோக்கி நகர்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்றைய சுதந்திர தினமானது எமது மக்களைப் பொறுத்தவரையில் எமது மக்களின் அனைத்துத் துறைகள் சார்ந்த சுதந்திரத்திற்கும் குரல் கொடுக்கின்ற ஒரு தினமாகவே கொள்ள வேண்டியுள்ளது.

இதிலிருந்து எமது மக்களின் அனைத்துத் துறைகள் சார்ந்த சுதந்திரத்திற்குமாக, ஏமாற்றுத் தமிழ்த் தலைமைகளைப் புறக்கணித்து, நாம் தொடர்ந்தும் அயராது உழைப்போம் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டில் இனமோதல் ஏற்பட ஜே.வி.பி.அனுமதிக்காது

## அநுரகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி அரசியலில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வரையில் இந்த நாட்டில் இன ரீதியிலான மோதல் ஒன்று ஏற்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லையெனவும், இதற்கான உத்தரவாதத்தை மக்கள் முன்னிலையில் ஜே.வி.பி. வழங்குவதாகவும் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கஹட்டோவிட்ட, ஓகொடபொலவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டிலுள்ள சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஒருபோதும் ஒருவரையொருவர் குரோதத்துடனும் சந்தேகத்துடனும் பார்க்க வேண்டாம். நாம் அனைவரும் ஒன்றாக நின்று நாட்டின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்போம். நாட்டில் யாரும் அடித்துக் கொள்ளவேண்டாம். அடித்துக் கொள்ளுமாறு கூறினால் அவ்வாறு கூறும் அரசியல் தலைவர்களுக்கு முதலில் காலி முகத் திடலில் வந்து மோதிக் கொள்ளுமாறு கூறுவோம்.

மோதிக் கொள்ளச் சொல்லும் இரு சமூகங்களினதும் அரசியல் தலைவர்கள் ஒரே மேசையில் உட்கார்ந்து உணவு பரிமாறுகின்றார்கள். கட்டித் தழுவிக் கொள்கின்றார்கள். கீழ் மட்டத்திலுள்ள சாதாரண அப்பாவி பொது மக்கள் தான் பலிக்கடாக்களாக்கப்படுகின்றார்கள். எம்மை கட்சிகளாகவும், இனங்களாகவும் பிரித்து எம்மிடையே பிரச்சினையை ஏற்படுத்தி அதன் மீது எமக்கு மேல் உள்ளவர்கள் ஆட்சி பீடம் ஏறுகின்றார்கள். கடந்த 70 வருடங்களாக இவ்வாறு தான் நாட்டில் ஆட்சி நடைபெறுகின்றது.

உயர் பதவிகளிலுள்ளவர்களின் பிள்ளைகள் எல்லோரும் வெளிநாடுகளில் கல்வி பயில்கின்றார்கள். நோய் வந்தால் சிகிச்சை பெற வெளிநாட்டு வைத்திய சாலைகளை நாடுகின்றார்கள் அனைத்தையும் அவர்கள் சுரண்டிக் கொள்கின்றார்கள். அவர்களை அந்த உயர்பதவிகளுக்கு அமர்த்தியவர்களுக்கு எதனையும் வழங்காது ஏமாற்றுகின்றார்கள். இந்நிலைமை அரசியலில் மாற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-10)

## லசந்த கொலை வழக்கு

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்தவின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடைவிதிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான சாட்சிகளை மறைக்க உதவியதாக குற்றம்சாட்டப்பட்ட சந்தேகநபர்களான முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன உட்பட முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரிகள் மூவருக்கு வெளிநாட்டுப் பயணங்களை தடை செய்யுமாறு கல்கிஸ்ஸ மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் மேல் நீதிமன்ற நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கைது செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஆஜர் படுத்தப்பட்ட போதே நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன தவிர முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மற்றும் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த அதிகாரி ஆகியோரினதும் வெளிநாட்டு பயணங்களை தடை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைய இந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான சாட்சிகளை அழித்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் நிலையப் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான திஸ்ஸ சுகதபாலவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே பயணத் தடை கோரிக்கையை புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்திடம் விடுத்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரியை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. (7-10)

# 51 உள்ளூராட்சி சபைகளை கூட்டமைப்பு கைப்பற்றுமாம்

## ஐ.தே.க.பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா ஆரூடம்

(கொழும்பு)

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில், ஐக்கிய தேசியக்கட்சி 276 சபைகளைக் கைப்பற்றும் என்றும் ஐ.தே. கவைச் சேர்ந்த பிரதி அமைச்சர் அஜித் பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலமே, மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில், 276 சபைகளை ஐ.தே.க. கைப்பற்றும் என்று தெரிய வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய சபைகளில், வடக்கு, கிழக்கில் 51 உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்றும் ஐ.தே.க. நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் மொத்தம் 34 உள்ளூராட்சி சபைகளும் கிழக்கில் மொத்தம் 45 உள்ளூராட்சி சபைகளும் உள்ளன.

இவற்றில், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் அதிகளவில் உள்ள சபைகள் தவிர்ந்த, தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் உள்ள 51 உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் என்று ஐ.தே.க. மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. (7-10)



# வில்பத்து வன அழிப்பு விவகாரம் குறித்து பசில், றிசாத் நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

மக்களை குடியேற்றுகின்ற போர்வையில் வில்பத்து வனத்தை அழிப்பதாக தெரிவித்து முன்வைக்கப்பட்ட மனுவை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவையும், அமைச்சர் றிசாத் பதியுதீனையும் நாளை 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்குவினால் முன் வைக்கப்பட்ட இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரணை செய்த போதே மேன்முறையீட்டு தலைமை நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் கொண்ட குழு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 120 | 120 |
| தக்காளி | 50 | 100 | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 100 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 50 | 50 | 60 | 70 |
| கரட் | 80 | 50 | 100 | 200 | 100 |
| பூசணி | 80 | 20 | 40 | 60 | 50 |
| புடோல் | 70 | 50 | 65 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 100 | 160 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 100 | 80 | 120 | 170 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 160 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 100 | 50 | 80 | 40 |
| பயற்றங்காய் | 150 | 100 | 140 | 120 | 170 |
| லீக்ஸ் | 150 | 100 | 220 | 240 | 220 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 100 | 150 | 160 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 1000 | 800 | 800 | 1400 |
| போஞ்சி | 80 | 100 | 90 | 160 | 200 |
| கத்தரிசம்புள்ள | 80 | 20 | — | 60 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 25 |
| தேசிக்காய் | 20 | 10 | 50 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 50 | 75 | 75 | 80 |
| இராசவள்ளி | 200 | 50 | 140 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 90 | 120 | 180 |
| முள்ளங்கி | 20 | 50 | 50 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | 50 | — | 80 | 70 |

# இலங்கையின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள பொருளாதார ரீதியாக அச்சுறுத்துகிறது சீனா

## இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுட்டிக்காட்டு



(கொல்கத்தா)

இலங்கையின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, சீனா பொருளாதார ரீதியாக அச்சுறுத்துவதாக, இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் குற்றம் சாட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"சீனாவுடன் போர் நடக்கும் என்று நான் கூறவில்லை. ஆனால் மோதல்கள் தொடரும். டோக்லம் விவகாரம் தனியொரு சம்பவம் அல்ல.

இதுபோன்ற தந்திரோபாயங்கள் தொடரும். இது முடிவுக்கு வராது. சீனா இதனைத் திரும்பத் திரும்ப மேற்கொள்ளும்.

இந்தியாவின் அண்டை நாடுகளுடன் உறவுகளை வைத்துக் கொண்டு, சீனா தொந்தரவு கொடுக்க முனைகிறது.


நேபாளம், இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், போன்ற இந்தியாவின் அண்டை நாடுகளை வென்றெடுப்பதற்காக, சீனா பொருளாதார அச்சுறுத்தல் போன்ற பல்வேறு வழிமுறைகளில் முயற்சிக்கிறது.

இலங்கையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும், பாகிஸ்தானில் குவடார் துறைமுகத்தையும் சீனா எடுத்துக் கொண்டிருக்கிறது.

டிஜிபோட்டியில் கடற்படைத் தளம் ஒன்றை அமைத்துள்ளது.

இருப்பை நிலைப்படுத்தும் சீனாவின் இந்த முயற்சிகள், ஆசியாவின் இரண்டு பிரதான நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மோசமடையச் செய்யும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதிக்கு உலகத்தலைவர்கள் வாழ்த்து









(கொழும்பு)

இலங்கை சுதந்திரமடைந்து 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உலகத் தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறசேனவுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

சுதந்திர தேசமாக ஏழு தசாப்தங்களை கடந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பிரித்தானிய எலிசபெத் மகாராணி விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான உறவுகள் சிறந்த நிலையில் இருப்பதாக குறிப்பிட்டுள்ள பிரித்தானிய மகாராணி, எதிர்வரும் காலங்களில் இரு நாட்டு மக்களுக்கு மத்தியில் இருந்துவரும் உறவுகள் மேலும் பலமடையும் என தான் உறுதியாக நம்புவதாக தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்று நிகழ்வில் தனிப்பட்ட முறையில் பங்குபற்றக் கிடைக்காததையிட்டு கவலையடைவதாக குறிப்பிட்டுள்ள மகாராணியார், இந்த நிகழ்வுக்கு பிரித்தானிய அரச குடும்பத்தின் உறுப்பினரான இளவரசர் எட்வேட் தம்பதியினரை பங்குபற்றச் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தில் இலங்கை நல்லிணக்கம், பொறுப்புகூறல் மற்றும் நீதியான ஆட்சி என்பவற்றை சிறப்பாக முன்னெடுத்து வரும் இச்சந்தர்ப்பத்தில் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மனப்பூர்வமாக வாழ்த்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை நல்லிணக்கத்தினதும் சுபீட்சத்தினதும் நோக்கங்களை உறுதியாக அடைந்து கொள்ளும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்த தான் உறுதியாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜிங்பிங்கும் விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால நட்புறவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலை மைத்துவத்தில் மிகவும் சிறப்பான நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவு களை எதிர்காலங்களில் இரு நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ள சீன ஜனாதிபதி, 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நாட்டின் பேரரசர் அக்கினோ வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளதுடன், இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

துருக்கி ஜனாதிபதி ரஜப் தையிப் ஏர்துகான் இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைக்கும் துருக்கிக்குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் மிக விரைவில் தான் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## தேர்தல் வன்முறை தொடர்பில்
## 42 வேட்பாளர்கள் உட்பட 373 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

உள்ளூர் அதிகாரசபை தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் இதுவரையில் 373 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் காலை 06.00 மணிவரை 559 தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியமை தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நாட்டின் வெவ்வேறு பொலிஸ் நிலையங்களில் இது பதிவாகியுள்ளன.

அதன்படி தேர்தல் சம்பந்தமாக இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுடன் தொடர்புடைய 42 வேட்பாளர்கள் உட்பட 373 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## முஸ்லிம் காங்கிரசிற்கு எதிராக
# சாய்ந்தமருதில் கடையடைப்பு வீதியெங்கும் கறுப்புக்கொடிகள்





(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் இடம்பெறவிருந்த நிலையில் சாய்ந்தமருதில் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த கடையடைப்பு மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அப்பகுதியில் வீதியெங்கும் கறுப்புக் கொடிகள் தொங்க விடப்பட்டுள்ளன. (இ-7)


தேவை

தேங்காய்மட்டை (பொச்சுமட்டை) தேவை. உரிய இடங்களில் வந்து கொள்முதல் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 654 4428

வேலையாட்கள் தேவை

லைடன் புடவை நிலையத்துக்கு இரு விற்பனையாளர்கள் தேவை. பழகியவர்களும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. (பெண்கள்)

● கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் (சி-1487)

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


## யானைத் தாக்குதலுக்கு இலக்கான தேரர் மரணம்

(கொழும்பு)

யானைத் தாக்குதலுக்கு இலக்கான பெல்லன்வில விமலரத்ன தேரர் நேற்று உயிரிழந்தார். நேற்று முன்தினம் மாலை யானைத் தாக்குதலுக்கு இலக்கான பெல்லன்வில விமலரத்ன தேரர், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று நண்பகல் காலமானார்.

விகாரையிலுள்ள யானைக்கு உணவளித்த போது, அதன் தாக்குதலுக்கு இலக்கான தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் அவர் நேற்று காலமானார். (இ-7)

# கொழும்பு தமிழ்த் தலைமைகள் முற்றாக அகற்றப்பட வேண்டும்

## -ஈரோஸ் தலைவர் அருட்பிரகாசம்-

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் தலைமையாக இருந்து விற்றுப் பிழைக்கும் செயற்பாட்டை காலா காலமாக செய்துவரும் கொழும்பு தமிழ்த் தலை மைகள், தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பிலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும் என ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) தலைவர் ஏ.ஆர். அருட் பிரகாசம் (லங்கா ராணிஅருளர்) தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய குழப்ப சூழ்நிலைகளுக்கு காரணம், இலங்கைத் தமிழரசுக்கட்சியில் காலாகாலமாக இருந்து வரும்குறைபாடு ஆகும். இதே சூழ்நிலையை நாங்கள் முன்பும் எதிர்நோக்கியிருந்தோம்.

அன்றைய ஜெயவர்த்தன அரசிடம் தனிநாட்டுக்கு ஆணை பெற்ற தமிழரசுக் கட்சியானது கூட்டுச் சேர்ந்து தமது கொள்கைகளுக்கு முரணாக ஐ.தே.க அரசுடன் இணைந்து கொள்கைகளை கைவிட்டு ஊழல் மோசடி வேலையில் இறங்கியிருந்ததது.

அதனால் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்த நிலையில், தமிழ் மக்கள் அவர்களுக்கு எதிராக திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே சூழ்நிலை இப்போதும் வந்துள் எது.

இதனால் அன்றைய கூட்டணியின் தலைமையை நிராகரித்து, 6 போராளிக் குழுக்கள் இணைந்து கடந்த 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சென்னையில் ஈழவிடுதலை குழு என்ற பெயரில் புதிய அணி உருவாகியது.

அக்குழு தமிழரசுக்கட்சிக்கு எதிராக போட்டியிட்டு, தமிழரசுக்கட்சி தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவை இழந்து விட்டார்கள் என்பதை தேர்தல் மூலம் நிரூபிக்க முடிவெடுத்தது.

அதுவே போராளி குழுக்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பிய முதல் நிகழ்வு ஆகும். நாம் மீண்டும் அதே நிலைக்கு தற்போது வந்துள்ளமையை காணக்கூடிய தாக உள்ளது.

இந்த நிலைக்கு முக்கிய காரணம், தமிழரசுக்கட்சி யில் உள்ள கொள்கை ரீதியி லான கோளாறு ஆகும். காலா கால மாக ஊறிவிட்ட இந்த பாரம்பரியத்தில் இருந்து தமிழரசுக் கட்சியால் மீள முடிய வில்லை.

ஆகவே இந்த குறைபாடுகளைக் கொண்ட தமிழரசுக்கட்சியை முற்றாக அகற்றி புதிய தலைமைக்கு நாம் மாறாவிட்டால் தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெறுவது என்பது முடவன் கொம்பு தேனுக்குஆசைப்பட்டதுபோன்ற, சாத்தியப்படாத விடயம் ஆகும். இதனால்தான் ஈரோஸ் அமைப்பு புதிய கூட்டமைப்புக்கு ஆதரவு அளித்துள்ளது.

கூட்டமைப்பில் நிரந்தரமாக உள்ள குறைபாட்டை நீக்கி தமிழ் மக்களை மீட்க வேண்டும் என்றால் அதற்கு தமிழ் மக்களின் தலைமையாக இருக்கும் கூட்டமைப்பை அப்புறப்படுத்துவது தான் ஒரே ஒரு வழி. அதில்மாற்றுத்தலைமை மாத்திரம் முக்கியமல்ல, மாற்றுத் தலைமையின் அரசியல், பாரம்பரியங்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள குறைபாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டும்.

முதலாவது குறைபாடு இன்றைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான வரலாற்று அறிவு, அரசியல் விஞ்ஞான அறிவு, பொருளாதார அறிவு, சர்வதேச விவகாரங்களில் தலையிடும் அறிவு. இவை த.தே. கூட்டமைப்பில் காணப்படவில்லை. இவை புதிய அமைப்பில் இருக்க வேண்டும். சுமார்100 வருடங்களாக கொழும்பு தமிழ்த் தலை மைகளை நம்பி ஏமாந்த ஒரு சமுதாயமாக வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் உள்ளனர். இதில் கொழும்பு தமிழர்களின் பிரச்சினையும் வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்சினையும் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

வடக்கு-கிழக்கு மக்கள் தாயக தன்னாட்சி உரிமை கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் கொழும்பு தமிழர்களோ கொழும்பில் சிறுபான்மையினராக உள்ளனர்.

இதனால் தொடர்ச்சியாக வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தாயக தன்னாட்சி உரிமைகளை மோசடி செய்பவர்களாக கொழும்பு தமிழ்த் தலைமைகள் இருந்து வந்துள்ளனர். இதனால் கொழும்பு தமிழர் களின் அரசியலை, தாயக தன்னாட்சி உரிமை கொண்ட வடக்கு - கிழக்கு மக்களின் அரசியலை இரண்டாக பிரிக்காமல் கொழும்பு தமிழ்த் தலைமைகள் தமது நலனுக்காக கொழும்பில் போராடி கொண்டு இருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு மாற்றுத்தலைமை ஒன்றை ஏற்படுத்தாமல் இந்த பிறழ்வு நிலையை சரி செய்ய முடியாது. கொழும்பு தமிழர்கள் என்னதான் வீராப்பு பேசினாலும் இறுதியில் அவர்கள் கொழும்பு தமிழர்கள் தான்.

அவர்கள் கொழும்பு தமிழர்களின் நலன்களை புறக்கணித்து தாயக தன்னாட்சிக்கு வழிகோல மாட்டார்கள்.

இதனால்தான் ஈரோஸ் அமைப்பு வடக்கு- கிழக்கு மக்களுக்கு வடக்கு- கிழக்கைச் சேர்ந்த தலைவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலும், கொழும்புத் தமிழர்கள் கொழும்பில் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு போராட வேண்டும் என்ற ஒரு அரசியல்பாரம்பரியத்தை உருவாக்க முனைகிறது. இதற்கு தமிழ் மக்கள் பூரண ஆதரவு தர வேண்டும்என அவர் மேலும் தெரி வித்தார். (இ-9)

# இரண்டு பெருந்தேசியவாத கட்சிகளுமே தமிழின அழிப்பில் சளைத்தவை அல்ல!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கைச் சிங்களப் பெருந்தேசியவாதக் கட்சிகள் எல்லாம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு- கிழக்கெல்லாம் போட்டியிடுகின்றன. இக் கட்சிகளில் போட்டியிடுபவர்கள் எல்லோரும் எமது அயலவர்கள், நண்பர்கள் அல்லது உறவினர்களாக உள்ளார்கள். தங்கள் வேலை வாய்ப்பு மற்றும் இதர சலுகைகளை எதிர்பார்த்தே இவர்கள் போட்டியிடுகிறார்கள் என்பது வெள்ளிடைமலை. தெரிந்த முகம் என்பதற்காக இவர்களுக்கு நாங்கள் வாக்களித்தால், நிகழ்ந்த தமிழ் இனப்படுகொலையை நாங்களே நியாயப்படுத்தியது போல ஆகிவிடும் என்று முன்னாள் விவசாய அமைச்சரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

நல்லூர் பிரதேசசபைத் தேர்தலில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுகின்ற சுயேச்சை வேட்பாளர்களை ஆதரித்து நேற்று மணியந்தோட்டத்தில் பரப்புரைக் கூட்டம் நிகழ்ந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

சிங்களக் கட்சிகள் எல்லாம் தேர்தல்களின்போது ஆசனங்களைப் பிடிப்பதற்காகத் தங்களுக்கு இடையே போட்டிபோட்டுக் கொண்டாலும், இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு ஏ்ன்ற கருத்து நிலையில் ஒன்றாகவே நிற்கின்றன. மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் வெல்லப்பட முடியாமல் இருந்த விடுதலைப் புலிகளைத் தாமே தோற்கடித்ததாக மார் தட்டுகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க அணியினர் தாங்களே கருணாவைப் புலிகளிடம் இருந்து பிரித்து புலிகளைப் பலவீனப்படுத்தித் தோற்கடிப்பதற்குக் காரணமாக இருந்தார்கள் என்று பெருமை பேசுகிறார்கள். இலங்கையை மாறி மாறி ஆண்ட இரண்டு பெருந்தேசியவாதக் கட்சிகளுமே தமிழின அழிப்பில் ஒன்றுக்கு ஒன்று சளைத்தது அல்ல.

இப்போது யுத்தம் முடிந்து விடுதலைப்புலிகள் களத்தில் இல்லை என்றவுடன் இந்தக் கட்சிகள் வடக்கு- கிழக்கில் எல்லா வட்டாரங்களிலுமே போட்டி போடுவதற்குக் குதித்துள்ளன. அதுவும், ஆசை வார்த்தைகளைக் காட்டி எம்மவர்களையே வேட்பாளர்களர்கவும் இறக்கியுள்ளார்கள். பரப்புரைக்காக இந்தக் கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் இங்கே வந்து போகின்றார்கள். இங்கே தாங்கள் போட்டியிடுவதன்மூலம் தமிழ் மக்களிடையே தங்களுக்கு எதிர்ப்பு இல்லை என்று உலக நாடுகளுக்குக் காட்டுவதற்கு இவர்கள் விரும்புகிறார்கள். இந்தக் கட்சிகளுக்கு நாங்கள் போடுகின்ற வாக்குகளின் மூலம் எங்கள் மூலமே இங்கு நடைபெற்றது தமிழ் இனப் படுகொலையல்ல என்று சொல்ல வைக்க விரும்புகின்றார்கள்.

தென்னிலங்கைக் கட்சிகளில் போட்டியிடுகின்றவர்கள் எங்களுக்கு எவ்வளவு தான் நெருக்கமானவர்களாக இருந்தாலும் இந்தத் தேர்தலில் அவர்களை நிராகரிப்போம்., இவர்களுக்கு நாங்கள் வாக்களிக்காமல் தவிர்ப்போம். மற்றவர்களிடமும் இவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று அறிவுறுத்துவோம். இதுதான் யுத்தத்தை நடத்திய, அதற்கு ஆதரவளித்த தென்னிலங்கைக் கட்சிகளுக்கு நாங்கள் காட்டுகின்ற குறைந்தபட்ச எதிர்ப்பாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எமது மக்களின் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது

## டக்ளஸ் எம்.பி.உறுதி



(யாழ்ப்பாணம்)

மக்கள் எமக்கு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்தால் அவர்களது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஒரு போதும் வீணடிக்கப்படமாட்டது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (7-10) யின் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள் ளார்.

சாவகச்சேரி மீசாலை பகுதியில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மக்கள் யாரை நம்பி வாக்களித்தார்களோ அவர்களது ஏமாற்று வித்தைகள் இன்று வெள்ளிடைமலையாக தெரிகின்றது.

அதுமட்டுமன்றி அந்தப் பொய் வேடதாரிகளின் முகத்திரை கிழிந்துள்ள நிலையில் அவர்கள் மக்கள் முன் வர அச்சப்படுகின்றார்கள்.

அந்தவகையில் முதுகிலே புண் இருப்பவனே காட்டுக்குள் நுழைய பயப்படுவான். ஆனால் நாம் ஒரு போதும் அவ்வாறு பயப்படப் போவதில்லை. ஏனென்றால் எமது முதுகில் புண் இல்லை என்பதை நான் பகிரங்கமாகவும் வெளிப் படையாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றியை நோக்காகக் கொண்டு பல அரசியல் கட்சிகள் இன்று களமிறங்கியுள்ளன. இந்தக் கட்சிகளில் மக்களுக்காக மக்களுடன் நின்று உழைக்கும் கட்சி எது என்பதை மக்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

"தேர்தல் வெற்றி என்பது எமது நோக்கமல்ல. இந்தத் தேர்தலில் ம்க்களாகிய நீங்கள் வென்று இந்தப் பகுதிகளை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்

அந்த அடிப்படையில் தான் அந்தந்தப் பகுதிகளைச் சேர் ந்த உறுப்பினர்களை நாம் தேர்தல் களங்களில் நிறுத்தி யுள்ளோம். இங்கு குறிப்பாக பல்வேறுபட்ட தேவைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக வீதி, சுகாதாரம், சுய்தொழில்வாய்ப்பு, வாழ் வாதாரம் உள்ளிட்ட பல்வேறு பட்ட தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் எமது எதிர்காலத்திட்டங்கள் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என்ப தையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின் றேன்.

குறிப்பாக இங்கு கிடைக்கப்பெறுகின்ற உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி இங்கு வாழும் மக்களது குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களினதும் விஷேட தேவைகளை உடையோராக வாழும் குடும்பங்களினதும் வாழ்வாதார பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்கு நாம் முழுமையான பங்களிப்பை நிச்சயம் வழங்குவோம் என்றும் டக்ளஸ் தேவா னந்தா எம்.பி. மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# துணிச்சல் மிக்க இளைஞர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்

## கூட்டமைப்பு வேட்பாளர் கிஷோர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

மக்களோடு மக்களாக களத்தில் நிற்கின்ற துணிச்சல் மிக்க இளைஞர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் ஞா. கிஷோர் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகர இளைஞர் கழக செயலாளர் மு.கோகுல்றாஜ், அமைப்பாளர் ச.துவாரகன் மற்றும் இளைஞர்கள் சகிதம் நகர வட்டாரத்தில் பிரசாரத்தில் ஈடுபடும்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்து ள்ளார்.

இன்று தேர்தல் என்றதும் நாம்தான் மக்களோடு நிற்பவர்கள் பணி செய்யப் பிறந்தவர்கள் என்று கூறிக்கொண்டு பலரும் உங்கள் வீட்டு படலைகளை தட்டக்கூடும். உங்களை திரும்பியும் பார்க்காமல் தீண்டத்தகாதவர்கள் என்ற எண் ணம் கொண்டவர்கள் கூட உங்கள் முற்றங்களை மிதிக்க கூடும். இப்படியான பலர் இன்று பல கட்சிகளில் வேட் பாளர்களாக உள்ளனர்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டி யிடுபவர்கள் மட்டுமே மக்க ளோடு மக்களாகவும் மக்களு க்கு நன்கு பரிச்சயமானவர்களாவும் உள்ளனர்.

அதிலும் குறிப்பாக எங்களைப்போன்ற இளம் வேட்பாளர்கள் சமூக நலன்சார் செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாமல் தமிழ்த் தேசிய உரிமைக்கான போராட்டங்களிலும் துணிச்சலோடு பங்கெடுக்கின்றனர்.

எனவே எமது மக்கள் அனைவரும் எமது ஒற்றுமையை வெளிப் படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வரலாற்று வெற்றியை பெற்றுக் கொள்ள பங்களிக்குமாறு சாவகச்சேரி நகர சபை வேட்பாளர் ஞா.கிஷோர் தனது பிரசாரங்களின் போது பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச்செய்தி



(கொழும்பு)

சுதந்திரத்திற்காகப் போராடிய எமது முன்னோர்களுக்கு நன்றி செலுத்திக் கொண்டு இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்திற்கான இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குக்கின்றேன்.

எமது வரலாற்றின் மிக முக்கியமான ஒரு தருணத்தில் இந்த 70 ஆவது சுதந்திர தினத்தினை நினைவு கூருகின்றோம். கடந்த காலங்களில் எம்மால் சுதந்திரத்தின் முழுமையான நன்மைகளை ஒருநாடு என்ற வகையில் அனுபவிக்க முடியவில்லை.

தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமையின் நிமித்தம் நாட்டில் சமாதானம், நல்லுறவு மற்றும் அபிவிருத்தி அற்ற நிலைமையை எதிர் நோக்கியுள்ளோம். இனப் பிரச்சினையானது சமூகங்களுக்கிடையிலான இடைவெளியை விசாலமாக்கி, அவநம்பிக்கை மற்றும் ஒற்றுமையின்மை என்பவற்றையும் எமது மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

முழு நாடும் ஆயுதப் போராட்டத்தின் பாதகமான விளைவுகளிலிருந்து மீண்டெழப் போராடிக் கொண்டிருக்கின்றது. கடந்த எழுபது வருடங்களை நோக்குகின்றபோது நாம் இழந்தவைகள், நாம் பெற்றவைகளை விட விஞ்சி நிற்கின்றது. தேசியப் பிரச்சினையை இதய சுத்தியுடன் தீர்க்கத் தவறியமையால் பொருளாதார வளர்ச்சியிலும் செழிப்பிலும் பிராந்தியத்தில் நாம் மிகவும் பின்னடைவான நிலையிலுள்ளோம்.

கடந்த காலமானது சந்தோசமும் பூரிப்புமிக்க தருணங்களைவிட துக்கமும் கவலைகளையும் கொண்ட தருணங்களையே அதிகம் தந்துள்ளது. ஆனால், கடந்த கால நிகழ்வுகள் மீண்டும் ஏற்பட நாம் இடமளிக்க முடியாது. நாம் ஒரு நாட்டின் மக்களாக ஒன்றுபட வேண்டும். மக்கள் சுய கௌரவத்துடனும் மரியாதை யுடனும் நடத்தப்படும் போதே இது சாத்தியமாகும்.

எனவே, நான் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் புதிய அரசியலமைப்பினை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு வலியுறுத்த விரும்புகின்றேன். நாட்டில் உள்ள ஒவ்வொரு தனி நபரதும் சுய கௌரவத்தை உறுதி செய்வதும் தேசியப் பிரச்சினையின் மூல காரணங்களுக்கு உண்மையான தீர்வினை வழங்குவதுமான ஓர் அரசியல் யாப்பினை நாம் உருவாக்க வேண்டும். நாம் அனைவரும் இணைந்து நீடித்து நிலைக் கக்கூடிய ஒரு நிரந்தரத் தீர் வினை நாட்டின் உயரிய சட்டமான புதிய அரசியல் சாசனத்தின் மூலம் காண்பதற்கு முன்வர வேண்டும்.

சிதைந்துள்ள எமது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதிலும், மக்களிடையே புரிந்துணர்வையும் நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்துவதிலும் பாரிய பங்களிப்பைச் செய்யக்கூடிய, மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நியாயமான ஓர் அரசியல் தீர்வினை அடைவதற்கு இந் நாட்டின் தலைவர்களும் மக்களும் முன்வரவேண்டும் என நான் அழைப்பு விடுக்கிறேன்.

எமது நாட்டுக் கும் அதன் மக்களுக்கும் சிறப்பான எதிர் காலத்தை உருவாக்கக் கூடிய எம்முன்னே உள்ள இந்தச் சந்தர்ப்பத் தினை நாம் நழுவிப்போக இடமளிக்காதிருப்போமாக.

இரா.சம்பந்தன்,
எதிர்க்கட்சித் தலைவர் -
தலைவர் - தமிழ்த்தேசிய கூட்டமைப்பு

# ஜனாதிபதியின் சுதந்திர தின செய்தி



சுதந்திரத்தின் மகிமையை புரிந்துகொள்ளவேண்டுமாயின் அடிமைத்தனத்தினால் ஏற்படுத்தப்படும் அவமானத்தின் ஆதங்கத்தை புரிந்திருத்தல் வேண்டும். அதனாலேயே நம் நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு நாம் எமது கௌரவத்தினைச் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம். சுதந்திரத்தின் பெருமையை நினைவுகூரும் இன்றைய தினத்தில் எமது தாய் நாட்டை ஒரு சுதந்திர பூமியாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவர்கள் அனைவருக்கும் நாம் எமது ஒட்டுமொத்த தேசத்தின் மரியாதையினை மனம் நிறைந்த பக்தியுடனேயே தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒரு சுயாதீன தேசம் என்ற வகையில் இலங்கை தனது சுதந்திரத்தின் ஏழாவது தசாப்தத்தை பூர்த்தி செய்யும் இவ் வேளையானது, கடந்த காலங்களில் நாம் நமதாக்கிக்கொண்ட சகலவித சாதகமான வெற்றிகளைப் பற்றியும் உணர்வு பூர் வமாக மீட்டுப்பார்க்கக் கூடிய மிகச் சிறந்த சந்தர்ப்பமாகும். கடந்து வந்த அந்த கால பகுதியில் நிச்சயம் நாம் பெற்றிருக்க வேண்டிய மானிட அபிவிருத்தி இலக்குகள், முகங்கொடுக்க நேர்ந்த சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு போன்ற சவால்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் பலவிதமான சவால்களையும் தாற்பரிய மான விதத்தில் கடந்து வந்துள்ளோம் எனக் கருத முடியும்.

நமக்கே உரித்தான தனித்துவத்தினால் புடம்போடப்பட்ட ஒரு இனம் என்ற வகையில் எம்மால் எந்தவிதமான சவால்களுக்கும் சளைக் காது அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றல் இருக்கின்ற தென்பதை எமது வரலாறு மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையில் இலங்கையர்களாகிய எம்மால் எத்தகைய சூழலிலும் தலை நிமிர்ந்து எழுந்து நிற்க முடியும்என்பதை மீண்டும் நிரூபிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமே தற்போது எம் முன் இருக்கின்றது. அதனை சாதிக்க வேண்டுமாயின் பல போராட்டங் களை முன்னெடுக்க வேண்டும் என்பதை இங்கு இத்தருணத்தில் நினைவுகூர வேண்டும். அனைவருக்கும் சம வாய்ப்புக்கள் கிடைக்கின்ற பசுமையான அபிவிருத்தியை நோக்கிச் செல்லுதல், அதன்மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், நமது மனித வளங்களை உலக தரத்திற்கு உயர்த்துவதன் மூலம் நாட்டிற்கு நற்பயனைப் பெற் றுக்கொடுத்தல் ஆகியன எமது நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம்பிடிக்க வேண்டிய இலட் சியங்களாக இருக்கின்றன.

அத்தோடு உண்மையான சுதந்திரம் என்பது அரசின் சுதந்திரம் மாத்திரம் அல்ல என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாகின்றது. சுதந்திரம் அர்த்தபுஷ்டியாக வேண்டுமாயின் குறிப்பிட்ட இனத்தின் பொருளாதார சுதந்திரமும் கலாசார சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய யதார்த்தமாகும். அந்த வகையில் பொருளாதார சுதந்திரத்தை நோக்கிய எமது பயணத்தில் இந்த ஆண்டு மிகுந்த முக்கியத்துவம் வகிக்கின்றது.

ஒரு நாடு என்ற வகையில் அன்றுபோல் இன்றும் எதிர் காலத்திலும் மிகுந்த உறுதிப்பாட்டுடன் எமது நீண்டகால நோக்குகளுடன் பிணைந்திருப்பதே அவற்றை வெற்றி கொள்ள வழிவகுக்கும். மொரகஹகந்த நீர்த்தேக்க நிர்மாணப்பணிகளின் பூர்த்தியுடன் மகாவலி அபிவிருத்தி செயற்றிட்டம் மிகச் சிறப்பாக பூர்த்தியடைந்திருக்கின்றது என்ற விடயம் இதற்கு சான்று பகர்கின்றது. அத்துடன் இவ்வருடத்தை "தேசிய உணவு உற்பத்தி வருடமாக" பிரகடனப்படுத்தியதன் நோக்கமும் எமது தேசம் ஏழு தசாப்தங்களாக கொண்டுள்ள 'உணவு உற்பத்தியில் தன்னிறைவு' என்ற கனவை நனவாக்கிக் கொள்வதே ஆகும்.

சுதந்திரம் அடைந்து ஏழு தசாப்தங்கள் நிறைவடையும் இந்த அபிமானத்திற்குரிய தருணத்தில் நாட்டின் நலனிற்காக நிறைவேற்ற வேண்டிய அனைத்துக் கடமைகளையும் குறைவின்றி நிறைவேற்றுவேன் என உறுதிபூணும் அதேவேளை, எமது தேசத்தின் உண்மையான பலம் நம்மவர்களின் ஒற்றுமையும் உறுதிப்பாடுமே ஆகும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

மைத்திரிபால சிறிசேன
ஜனாதிபதி.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு : 1958.10.28
உதிர்வு: 2017.01.16

அமரர்.
இராசதுரை
இராசேந்திரம்
(பெரியண்ணா)

04.02.2018
திதி: தைமாத சங்கடஹர சதுர்த்தி

அன்பாலே திளைத்திருந்த
ஆனந்த சாகரத்தில்
கண்பட்டு தொலைத்ததுவோ
கண்ணீரில் கரைந்து அழ
ஆறாத துயர் தந்து
அவனியிலே உனை இழந்து
ஆண்டொன்று ஆனதையா!
ஆறவில்லை எம் மனங்கள்
குன்றாகி நிமிர்ந்து நின்ற
குடும்பத்தின் குலவிளக்கே
குற்றுயிராய் கலங்கிநின்று
குமுறியழ வைத்துவிட்டாய்
வருடங்கள் கடந்தாலும்
வருவாய் நீ ஒரு நாளன்று
வழிமேலே விழிவைத்து
காத்திருப்போம் கண்மணியே...



நாவற்காடு, அச்சுவேலி தெற்கு.

குடும்பத்தினர்



## FLORENCE NIGHHTINGAALE
School of Nursing

தாதியர் பயிற்சி பாடசாலை கற்கைநெறியின் பின் அதிகளவான வேலைவாய்ப்புக்களை பெற்றுத் தரும் கல்வி நிறுவனம் எம்முடையது.

- ✓ ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி.
- ✓ 3 மாதம் தனியார் வைத்தியசாலை பயிற்சிகள்.
- ✓ பின் நிரந்தர வேலைவாய்ப்புகள்.

தகைமைகள்

- ✓ O/L 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- ✓ 18-35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.



K.K.S.Road,
Maruthanarmadam.

தொடர்புகளுக்கு:
077 718 6438

(2640)



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
மதசார்பற்றது, ரகசியமானது, இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



## மணமகள் தேவை

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இந்து கௌரவகுடும்பம் 33 வயது, பட்டதாரி, 12இல் சூரியன், செவ்வாய் பாவம் 23, ரோகிணி, உயரம் 5'9" கொழும்பில் தனியார் துறையில் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கு அரச பதவியில் இருக்கும் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:-071 1459 992 (2624)



## விவசாயப் பண்ணை பராமரிப்பாளர் தேவை

சுழிபுரம் நெல்லியான் அமைந்துள்ள சிவபூமி விவசாயப்பண்ணைக்கு பண்ணை பராமரிப்பாளர் இருவர் தேவை. பண்ணையில் தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 222 7938, 077 844 8796 (2634)



## பணியாளர் தேவை

சிவபூமி முதியோர் இல்லத்திற்கு முதியோரை பராமரிப்பதற்கு இரு ஆண்கள் தேவை.
தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக தகுந்த சம்பளத்துடன் வழங்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில், யாழ்ப்பாணம்
தொலைபேசி-021 222 7938, 021 321 4230 (2633)

## வவுனியா வேப்பங்குளம் நெற்களஞ்சியசாலையில்

# நெல் மூடைகளை திருடிய குற்றச்சாட்டில் காவலாளி உட்பட இருவர் கைதாகினர்

(குருமன்காடு)

வவுனியா வேப்பங்குளம் நெற்களஞ்சிய சாலையில் நெல் மூடைகளை திருடிய குற்றச்சாட்டில் அக்களஞ்சியசாலையின் காவலாளி உட்பட இருவரை வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நெற்களஞ்சியசாலையின் காவலாளியை நேற்று முன்தினம் இரவு கைது செய்த பொலிஸார் அவரது வீட்டை சோதனை செய்ததில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 69 நெல் மூடைகள் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.எம். ஜெயந்த ராஜபக்ஷ,

வேப்பங்குளம் நெற்களஞ்சியசாலையில் நெல் மூடைகள் களவாடப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக களஞ்சியசாலை காவலாளியை விசாரணை செய்து அவர் பதுக்கி வைத்திருந்த இரண்டாயிரத்து 720 கிலோகிராம் நெல்லை கைப்பற்றியதுடன் காவலாளிக்கு உறுதுணையாக செயற்பட்டு வந்த நெற்களஞ்சியசாலைக்கு பொறுப்பான அரச அதிகாரியை தேடி வந்த நிலையில் அவர் நேற்றையதினம் பொலிஸ்



நிலையத்தில் சரணடைந்திருப்பதாக தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட நெல்லின் பெறுமதி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என்பதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நாளை திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் வேப்பங்குளத்தில் அமைந்துள்ள நெற்களஞ்சியசாலையின் பிரதான வாயில் பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் காவலாளி அற்று வெறிச்சோடி இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. (2-250)

# மூவாயிரத்து 66 வாக்காளர்கள் வவுனியாவில் தபால்மூலம் வாக்களிப்பு

## உதவித் தேர்தல் ஆணையாளர் டெ.கனியூட் அரவிந்தராஜ் தெரிவிப்பு

(மல்லாவி)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தலினை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பில் தபால்மூலம் வாக்களிப்பதற்காக 3 ஆயிரத்து 226 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல்.4 மணி வரையிலான காலப்பகுதி வரை 3 ஆயிரத்து 66 வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாக வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் டெனிசியஸ் கனியூட் அரவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒரு நகர சபைக்கும் 4 பிரதேச சபைகளுக்குமாக மொத்தம் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் வவுனியா நகர சபைக்கான தேர்தலிற்கு தபால்மூலம் வாக்களிப்பதற்காக 748 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் 712 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இதேபோன்று, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான தபால்மூலம் வாக்களிக்க 826 வாக்காளர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் 812 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கான தபால்மூலம் வாக்களிக்க ஆயிரத்து 442 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் ஆயிரத்து 16 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான தபால்மூலம் வாக்களிப்பதற்காக 324 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் 310 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, வ்வுனியா வெங்கலச் செட்டி குளம் பிரதேச ச்பைக்கான தபால் மூலம் வாக்களிக்க 236 வாக்காளர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் 216 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். ஒட்டு மொத்தமாக 3 ஆயிரத்து 66 வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாக வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் டெனிசியஸ் கனியூட் அரவிந்தராஜ் தெரிவித்துள்ளார். (2-15)

# 18 மணித்தியாலங்களினுள் வெவ்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட ஐந்து பேர் கைதாகினர்

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 18. மணி நேரத்தில் 3 வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது 5 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன் தடயப் பொருட்களையும் மீட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் நேற்று சனிக்கிழமை காலை 8 மணி வரையிலான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது,

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி.முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் கல்லாறுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனத்தை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, கல்லாறுப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 2 பேரையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, வட்டக்கச்சி கல்மடு ஆலையடிப் பகுதியில் 12 போத்தல் கசிப்புடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்களை பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிதெரிவித் துள்ளார். (2-15)

# நாச்சியாதீவில் இருந்து கட்டுக்கரை குளத்திற்கு நீரை விடுவித்து தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

(பனிக்கன்குளம்)

நாச்சியா தீவில் இருந்து 10 ஆயிரம் ஏக்கர் அடி நீரை விடுவித்து தருமாறு கோரி கட்டுக்கரை குள திட்ட முகாமைத்துவக்குழு சார்பாக 10 வாய்க்கால் அமைப்புக்கள் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கை அடங்கிய கடிதத்தை கட்டுக்கரை குளத்திட்ட முகாமைத்துவக்குழு சார்பாக 10 வாய்க்கால் அமைப்புக்கள் இணைந்து கையொப்பமிட்டு நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள் ளனர்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு,

கட்டுக்கரை குளத்தின் கீழ் தற்போது 7 ஆயிரம் விவசாய குடும்பங்கள் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது 10 பிரதான வாய்க்காலுக்கு கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்களுக்கு நீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அடைக்கலமோட்டை,பெரிய உடைப்பு,சின்ன உடைப்பு ஆகிய மூன்று வாய்க்காலுக்கு கீழ் சொற்ப அளவு நீரே பாயக்கூடிய நிலை உள்ளது.

சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கைக்கு மட்டும் நீர் தற்போது பாய்ச்சக்கூடிய நிலை காணப்படுகின்றது.

மேலும் இசைமாளத்தாழ்வு, இரட்டைக் குளம், 14 ஆம் கட்டை, 13ஆம் கட்டை, 12 ஆம் கட்டை, 11 ஆம் கட்டை,குருவில் ஆகிய 7 வாய்க்கால்களுக்கு கீழ் உள்ள 20 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கைக்கு நீர் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது அருவி ஆற்றில் இருந்து நீர் வரத்து குறைவடைந்துள்ளது.

எனவே 20 ஆயிரம் ஏக்கர் விவசாய செய்கை அழிவடைந்து போகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே "நாச்சியா" தீவில் இருந்து 10 ஆயிரம் ஏக்கர் அடி நீரை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுக்கின் றோம்.

குறித்த நீரை விடுவிப்பதன் மூலம் 20 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கையை முழுமையாக காப்பாற்ற முடியும்.

மேலும் 7 ஆயிரம் விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிப்பில் இருந்து மீட்கப்படும் என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-281)






மன்னார்-அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கடந்த முதலாம் திகதி பிற்பகல் மாலை 2.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில், பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹிர் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்விற்கு விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், மன்னார் பிரதேசச் செயலாளர் என்.பரமதாசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததோடு, பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

இருளில் பெற்றோம் இன்னும் விடியவில்லை.
~ மேத்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கையர் இல்லாத இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளாம்

நாட்டின் 70ஆவது சுதந்திர தினம் இன்று. குடியேற்றவாதத்தில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் பூர்த்தியாகிய போதிலும் இன்றுவரை இலங்கைத் தீவில் இன ஒற்றுமை ஏற்படவில்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை பௌத்த சிங்களத்துக்குரிய நாடு என்று உரிமை கோரப்பட்டதன் விளைவாக, சிறுபான்மைத் தமிழினம் பட்ட துன்பங்களும் துயரங்களும் கொஞ்சமல்ல.

காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் கபளீகரம் செய்யப்பட்டன.

இதன் உச்சக்கட்டமாக 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்தில் எம் இனம் கருவறுக்கப்பட்டது.

மூன்று இலட்சம் தமிழ் மக்களை ஆடு மாடுகள் போல முட்கம்பி வேலிக்குள் அடைத்து வைத்த அநியாயம் சொல்லுந்தரமன்று.

இவை ஒருபுறம் இருக்க, காணாமல்போனவர்கள் – சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் என்ற நெடுந்துயரின் நீட்சி இந்த நாட்டில் எங்களுக்குச் சுதந்திரம் இல்லை என்பதை மிகத் தெளிவாகக் காட்டி நிற்கிறது

இந்நிலையில் தமிழ் மக்கள் இந்த நாட்டின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவர் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறு தமிழர்களும் அவர்களின் பிரதேசங்களில் இருக்கக்கூடிய அரச அமைப்புக்களும் தேசியக் கொடியை ஏற்றி சுதந்திர தினத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று யார் கூறினாலும் அதுவும் ஓர் அடக்குமுறையாக இருக்குமேயன்றி வேறில்லை என்பது உணர்தற்குரியது.

இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகள் என்று மார்தட்டும் ஆட்சியாளர்கள் இன்று வரை இலங்கை எங்கள் நாடு என்று எல்லா இன மக்களும் சொல்லக்கூடியதான ஒற்றுமையை ஏற்படுத்தவில்லை.

நூறு கோடி மக்கள் தொகையைத் தாண்டிய இந்திய தேசத்தில் எத்தனையோ இன மக்கள்; எத்தனையோ மொழிகள் உள்ளன.

ஆனாலும் அங்கு இந்தியா எங்கள் நாடு, நாம் இந்தியர்கள் என்ற தேசிய உணர்வு மிகவும் உறுதியாக உள்ளது.

அங்கு அந்த நிலைமை இருக்க; இலங்கையில் சிங்களவர்கள் இருக்கிறார்கள்; தமிழர்கள் வாழ்கிறார்கள்; முஸ்லிம் மக்களும் பறங்கியர்களும் உள்ளனர் என்று கூற முடியுமேயன்றி,

**இலங்கையர்** வாழ்கின்றனர் என்று சொல்ல முடியாது எனும்போது எழுபது ஆண்டு கால சுதந்திரத்தால் ஏற்பட்ட பயன் என்ன என்பதுதான் கேள்வியாக நிற்கிறது.

ஆக, சுதந்திரம் என்பது நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்குமானதாக இருக்க வேண்டும்.

அதைவிடுத்து ஒரு பகுதி மக்களுக்கான சுதந்திரம் என்றால், அதனைச் சுதந்திரம் என்று கூறுவது எந்த வகையிலும் பொருந்தாது.

# 90 குடியேறிகளுடன் சென்ற படகு லிபியா கடற்பகுதியில் கவிழ்ந்தது

## பத்து சடலங்கள் மீட்பு; ஏனையோரின் நிலைகுறித்து அச்சம்

(ரிப்போலி)

பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த சுமார் 90 குடியேறிகளுடன் சென்ற படகு லிபியா கடற்பகுதியில் நேற்றுக் காலை கவிழ்ந்த விபத்தில் 10 சடலங்கள் மீட்கப்பட்டன. ஏனையோரும உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல கடந்து செல்லும் இந்த அகதிகள், இறப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்றமுறையில பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது. சமீப காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 25 இலட்சத்தை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் ஐரோப்பியநாடுகளில்அடைகலம் அடைந்துள்ளனர்.

இதுதவிர, கடந்த ஆண்டில் மட்டும் இத்தாலி நாட்டுக்கு புகலிடம் தேடிச் செல்லும் வழியில் சுமார் ஐயாயிரம் பேர் காணாமல்போனதாகவும், கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் தெரிகின்றது. இருப்பினும், உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் இன்றும் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தவாறு உள்ளனர்.

சமீபகாலமாக பாகிஸ்தானில் இருந்தும் இப்படி சட்டவிரோதமாக கடல் வழியாக பயணித்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடையும் மக்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கத்தில் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த சுமார் 90 குடியேறிகளுடன் புறப்பட்டு சென்ற படகு லிபியா நாட்டில் உள்ள ஜுவாரா நகரையொட்டியுள்ள கடல் பகுதியில் நேற்று கவிழ்ந்தது.

இந்த விபத்தில் படகில் வந்த அனைவரும் பலியாகி இருக்கக்கூடும் என அஞ்சப்படும் நிலையில் இதுவரை 10 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்களில் 8 பேர் பாகிஸ்தானியர்கள், இருவர் லிபிய நாட்டினர் என தெரிய வந்துள்ளது. (இ-7)

# ஆயுத பலத்தோடு போராடிய நாங்கள் ஜனநாயக பலத்தை இழக்கக்கூடாது

## தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவிப்பு

ஆயுத பலத்தோடு போராடிய சந்தர்ப்பத்தை நாங்கள் இழந்திருக்கின்ற போது, எங்களுடைய ஜனநாயக பலத்தை நாங்கள் இழந்துவிடக்கூடாது என இலங்கைத தமிழரசுக் கட்சித் தலைவரும், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை கண்ணகிபுரத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு அதிகமாக முயற்சி செய்கிறார். எங்களிடமிருந்து கொள்ளையடித்த பணத்தை செலவு செய்கிறார். இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் காரணத்தினால் இன விடுதலைக்காக ஆயுதமேந்தி போராடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. எமது பெண்களை மோசமாக நடத்தினார்கள். அதற்கு பொறுப்பேற்க வேண்டிய போர்க்குற்றம் ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே ஆட்சி மாற்றம் வேண்டும் என்று நினைத்தவர்கள் தென் பகுதியிலும் உள்ளார்கள். வடக்கு கிழக்கிலும் இருக்கிறார்கள். எமக்கு மக்கள் இராஜதந்திர ரீதியாக செயற்பட்டதன் காரணத்தினால்தான் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்தார். உலக நாடுகளின் ஆதரவு எமக்கு கிடைத்திருக்கின்றது.

இந்த நாட்டில் ஆட்சி மாறுவதற்கு ஜனநாயக சந்தர்ப்பங்கள் உதவியாக இருந்தன. யாரும் படையெடுத்து இந்த நாட்டை கைப்பற்றவில்லை. சதி செய்து ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை. தமிழ் மக்கள் தெற்கில் இருந்த சிங்கள மக்களோடு இணைந்து தங்களுடைய வாக்குப் பலத்தின் மூலம் ஆட்சியை மாற்றினார்கள். உலக நாடுகளுடன் இணைந்து எமது இனப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பத்தை நாங்கள் இழந்துவிடக்கூடாது என கூறினார். (ம)

# மகா சிவராத்திரியை முன்னிட்டு செல்வச்சந்நிதியிலிருந்து பாதயாத்திரை

ஆண்டுதோறும் நடைபெறும் மகா சிவராத்திரிப் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை பாதயாத்திரை குமுத தலைவர் வேல்சுவாமி தலைமையில் காலை 8.30 மணியளவில் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பமாகி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்து மறுநாள் வியாழக்கிழமை காலை நல்லூரிலிருந்து செம்மணி, நாவற்குழி, தனங்கிளப்பு, கேரதீவு, பூநகரி, பல்லவராயன் கட்டு, முழங்காவில், வெள்ளாங்குளம், மூன்றாம் பிட்டி, இலுப்பைக்கடவை, ஆத்திமோட்டை, புதுக்குளம், கள்ளியடி, பள்ளமடு, பாப்பாமோட்டை, மாணிக்கத்திடல் ஊடாக 13ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் சென்றடையும். இப்பாத யாத்திரை உலக சைவத் திருச்சபையின் நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெறுவதுடன் நாட்டின் சகல பாகங்களிலிருநதும் சிவனடியார்கள் இப்பாதயாத்திரையில் கலந்துகொள்வார்கள் என சிவாச்சாரியார் சிவஸ்ரீ கதிர்குமாரசுவாமி அறிவித்துள்ளார். (இ-7)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### மனிதவாழ்வில் பஞ்சலோகங்கள் வகிக்கும் பங்கு என்ன?

தங்கப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், செம்புப் பாத்திரங்கள், இரும்புப் பாத்திரங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றையெல்லாம் பயன்படுத்தி வந்தார்கள்.

செம்புப் பாத்திரங்களுக்கு ஈயத்தைப் பூசி பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். பழைய காலத்தில் வீடுகளிலும் கோவில்களிலும் செம்புக் கதிரைகளைப் பயன்படுத்தினார்கள். பானை, சருவம், மரக்கால் போன்றவை செம்பினால் செய்யப்பட்டு வீட்டு உபயோகப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. செம்பு மோதிரம் போன்ற ஆபரணங்கள் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

இரும்பு கோடரி, கத்தி, சுத்தியல் போன்ற ஆயுதங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. பெண்கள் இரும்பைக் கையில் அணிந்திருந்தார்கள். பழைய காலம் முதலே கோவில்களில் பஞ்சலோகத்தினாலான பாத்திரங்களையே பயன்படுத்தி வந்தார்கள்.

இறைவனுக்கான ஆபரணங்களை தங்கம் மற்றும் வெள்ளியினால் உருவாக்கினார்கள். தற்போதும் அவ்வாறே உபயோகிக்கிறார்கள்.

தற்போதும் பஞ்சலோகம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கிறது. ஆனால் நாகரிகம் வளர்ந்த பின்பு வீடுகளிலும் கோவில்களிலும் இரும்பு மற்றும் செம்புப் பாத்திரங்களுக்குப் பதிலாக சில்வர் பாத்திரங்களை உபயோகிக்கிறார்கள். இருந்தாலும் பஞ்சலோகத்தின் மாற்று குறையவில்லை. தேவையும் குறையவில்லை. (தொடரும்)

# இரவின் இரகசியம்

அமாவாசையையொட்டிய இரவு, அநியாயங்களின் அதிதீவிரத்தைக் குறிக்கிறது. அறியாமை என்ற அக இருளால் நமது செயல்களில் தர்மம் நிலை குலைகிறது. அதனால் புறவாழ்வில் துயரமும் அழிவும் இருள்போல் சூழ்கிறது. தர்மம் ஓங்கும்போது சாந்தியும் சமாதானமும் தவழ்வதைப் போல அது பிசகும்போது அநாவசியத்தொல்லைகளில் அகப்பட்டுத் துன்பப்படுகின்றோம். அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி, அக இருள் போக்கக் கூடியவர் பரம்பொருள் ஒருவரேயாவார். சின்னஞ்சிறு குழநதையொன்று தன்னை மறந்து உதவி தேடுவது போல துன்பம் வந்ததும் உரிமையோடு இறைவனை நாடுகிறோம்.

அந்த இக்கட்டான தருணத்தில் நமது அவலக் குரலுக்குச் செவிசாய்த்து துன்பத்தை நீக்கி சந்தோசத்தை ஏற்படுத்தி விட்டு மறைபவர் தாய்போல் மன்னிக்கும் சிவபிரான். நன்மைபயக்கும் சிவபிரானுக்கு இரவுப் பொழுது உரித்தாக்கப்பட்டிருப்பின் இரகசியம் இதுதான்.

13 ஆம் திகதி செவ்வாய் மாலை 6 மணி முதல அடுத்தநாள் காலை 6 மணி வரை இரவு ஆறு சாமங்களும் சுகதாமம் மண்டபத்தில் இடம் பெறவிருக்கும் 12 மணித்தியால நிகழ்வுகள் இந்த இரகசியங்களை அம்பலமாக்க வல்லவை.

தொடர்புகளுக்கு: 077 923 4562

**பிரம்மகுமாரிகள்**

# பரிசு மழையில் நனையும் இந்திய ஜூனியர் அணி



இந்திய ஜூனியர் கிரிக்கெட் அணி நான்காவது முறையாக U19 உலகக் கிண்ணத்தை கைப்பற்றி சாதனை படைத்ததற்கு பிசிசிஐ பரிசுகளை அறிவித்துள்ளது.

நியூசிலாந்தின் மவுண்ட் மவுங்குனியில் நடந்த 19 வயதுக் குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியாவை வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலமாக நான்காவது முறையாக ஜூனியர் உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றியுள்ளது. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் வாரியமான பிசிசிஐ பரிசுகளை அறிவித்துள்ளது.

அதன்படி, தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டிற்கு 50 லட்சம், இந்திய அணி வீரர்களுக்கு தலா 20 லட்சம், அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஊழியர்களுக்கு தலா 20 லட்சம் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# ஹோலியின் சதத்தை விட ரஹானே ஆட்டம் சிறந்தது

## கங்குலி தெரிவிப்பு



தென் ஆபிரிக்காவுக்கு எதிராக கோலி விளாசிய சதத்தை விட, ரஹானேவின் ஆட்டமே சிறந்தது என இந்திய முன்னாள் ஜாம்பவான சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக, டர்பனில் நடந்த ஒருநாள் போட்டியில் விராட் கோலி சதமும், ரஹானே 79 ஓட்டங்களும் விளாசினர.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் கங்குலி கூறுகையில், 'ரஹானே, புவனேஷ்குமாரின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. ரஹானேவின் ஆட்டம் எனக்கு வியப்பைத் தரவில்லை. அவர் சிறந்த வீரர்.

எனினும், தனது ஓட்டங்களை சதமாக எப்படி மாற்ற வேண்டும் என்பதை, அவர் விராட் கோலியிடம் கற்றுக்கொள்ள வேண் டும். ஆனால், கோலி அடித்த சத்தை விட, ரஹானேவின் 79 ஓட்டங்கள் மதிப்பு வாய்ந்தது' என தெரிவித்துள்ளார். (க)

# உங்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது



கோலியை நினைத்தால் பெருமையாக இருப்பதாக, தென் ஆபிரிக்க அணியின் சுழற்பந்து வீச்சாளர் தாஹிர் கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையே நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இந்திய அணியின் தலைவர் கோலி, சிறப்பாக விளையாடி சதம் அடித்து அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவினார்.

தென் ஆபிரிக்கா மண்ணில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் திணறிய இந்திய அணி அதன் பின் மூன்றாவது டெஸ்ட் போட்டி, தற்போது முதல் ஒருநாள் போட்டி என தொடர்ந்து வெற்றி பெற்று, வெளிநாட்டு மண்ணிலும் எங்களால் சிறப்பாக விளையாட முடியும் என்று நிரூபித்து வருகிறது.

இந்திய மண்ணில் மட்டுமே இந்திய அணியால் சிறப்பாக விளையாட முடியும் என்று கூறிய பலருக்கு இந்திய அணி இந்த வெற்றிகள் மூலம் பதிலடி கொடுத்துள்ளது.

இந்நிலையில் தென் ஆபிரிக்க அணியின் சுழற்பந்து வீச்சாளர் தாஹிர் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், கோலிக்கு எதிராக விளையாடுவது தனக்கு கிடைத்த கௌரவம் என்று பெருமையுடன் குறிப்பிட்டு, அவருடன் கைகொடுத்த புகைப்படத்தை அதில் பதிவேற்றம் செய்துள்ளார். (க)

# கரவெட்டி பிரதேச செயலக கிரிக்கெட் வெற்றி வாகை சூடியது கொலின்ஸ்

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கிரிக்கெட் இறுதிபோட்டியானது கடந்த புதன்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் கொலின்ஸ் அணியினை எதிர்த்து ஸ்பேஸ் அணி மோதியது. இந்த போட்டியிலே இரண்டு விக்கட்டுகளால் ஸ்பேஸ் அணியை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது கொலின்ஸ் அணி.




முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்பேஸ் அணி டெஸ்மன் .பவன் இணையானது சிறந்த ஆரம்பத்தை வழங்கியது. தொடர்ந்து மதுசனின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் 15 பந்து பரிமாற்றம் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் ஆரம்ப இணைப்பாட்ட ஜோடியான் சுகந்தன், ஜெயச்சந்திரன் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய தாஸ் அதிரடியாக ஓட்டங்களை பெற்று கொடுத்து ஆட்டம் இழந்தார். இறுதிக்கட்ட பரபரப்பில் துவி,வரகுணன் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இறுதியில் கோகுலன், திருக்கோகுலன் இணையானது 14.2 பந்து பரிமாற்றம் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களை பெற்று வெற்றியை பெற்று கரவெட்டி பிரதேச செயலக கிரிக்கெட்டில் சம்பியனாகியது.(சு-60)

# அதிக பொருட்செலவில் இலங்கை கிரிக்கெட் சபை

## மைதானத்தை உருவாக்குகிறது



இலங்கை கிரிக்கெட் வாரியம் 'Nidhahas Trophy' தொடருக் காக Kettharama மைதானத்தில் அதிக பொருட்செலவில் பவுண்டரி எல்லையை அமைக்கிறது.

இலங்கை கிரிக்கெட் வாரியம் தேவையற்ற செலவுகளை செய்வதில் புகழ்பெற்றதாகக் கூறப்படுகிறது. அதனை நிரூபிக்கும் வகையில் Kettarama என்றழைக்கப்படும் சு.பிரேம்தசா மைதானத்தின் பவுண்டரி எல்லையில், சுவர் ஒன்றை அதிக பொருட்செலவில் உருவாக்கி வருகிறது.

6 மில்லியன் ரூபாய் திட்டமிட்ட நிலையில், தற்போதைய நிலை வரை 22 மில்லியன் ரூபாய் செலவாகியுள்ளதாம்.

மார்ச் 6ஆம் திகதி முதல் இந்த மைதானத்தில் 'Nidhahas Trophy' இருபது-20 தொடர் நடைபெறலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இலங்கை, இந்தியா மற்றும் வங்கதேச அணிகள் கலந்து கொள்ள உள்ளன. இந்த தொடரின் அனைத்து போட்டிகளும் இந்த மைதானத்திலேயே நடைபெற உள்ளதாம்.

பவுண்டரி எல்லைச்சுவர் அமைக்கும் பணிகள் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் Shammi Silva, Godfrey Dabrera மற்றும் Sajeewa Godaliyedda ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெற உள்ளது.

எனினும் இதற்கான பட்ஜெட் தொகை இன்னும் அதிகரிக்கலாம் என கூறப்படுகிறது. (க)

## அதிகாரப்பகிர்வு...

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் என்ற முறையில் விக்னேஸ்வரன் அவர்களுக்கு ஆங்கிலத்தில் கிடைத்த கேள்விக்கு ஆங்கிலத்தில் கொடுத்த பதிலின் தமிழாக்கம்,

கேள்வி:சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வது சம்பந்தமாக தமிழ் மக்கள் பேரவையின் கருத்தென்ன? நீங்கள் கொண் டாட்டங்களில் கலந்து கொள்வீர்களா?

பதில்:இன்று 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆந் திகதி. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மா்தம் 4ஆந் திகதியில் இருந்து எழுபது வருடங்கள் பூர்த்தியாகி உள்ளன. 1948 இல் ஆங்கிலேயரிடம் இருந்து எமக்கு சுதந்திரம் பெறப்பட்டதாக தமிழ் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பொருட்டு வெளிநாட்டு உள்ளீடல்கள் இல்லாத ஒரு மகிழ்ச்சிகரமான, திருப்தி தரும், செழிப்பார்ந்த நாடொன்று கட்டி எழுப்பப்படப் போகின்றது என்று தமிழராகிய நாம் எதிர் பார்த்தோம். சிங்கப்பூரைச் சேர்ந்த லீகுவான்யூ அவர்கள் பொருளாதார விருத்திக்கும் இன நல்லுணர்வுக்கும் எடுத்துக் காட்டாக அப்போதைய இலங்கையையே முன்னுதாரணமாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஆனால் சிங்கள அரசியல் தலைவர்கள் வேறு கரவான எண்ணங்கள் உடையவர்களாக அப்போதிருந்தார்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. பெரும்பான்மையினர் என்ற விதத்தில் சர்வ அரச அதிகாரங்களையும் ஆங்கிலேயரிடம் இருந்து அவர்கள் பெற்றிருந்தார்கள். அவற்றை வைத்துக் கொண்டு ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் சிங்கள இனத்தவர்களுக்கு எதிராகப் பாரபட்சமாக அவர்கள்நடந்து கொண்டார்கள் என்ற பொய்யான காரணத்தைக் காட்டி சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார்கள். இது உண்மைக் கூற்றல்ல. எப்பொழுதும் தகைமைக்கு முதலிடம் கொடுத்தவர்கள் ஆங்கிலேயர்.

ஆகவே அவர்கள் காலத்தில் திறந்த போட்டிப் பரீட்சைகளில் முதன்மையாகத் தேறிய தமிழர்கள் பல அரசாங்க வேலைகளிலும் மற்றும் சேவைகளிலும் கடமையாற்றி வந்தார்கள்.

ஆனால் தமிழ் மக்களை எல்லா விதங்களிலும் வலுவிழக்கச் செய்ய அவர்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. "சிங்களம் மட்டும்" சட்டம் இயற்றப்பட்ட போது தான் தமிழர்கள் அளவான சூடு கொண்ட வறுவல் பாத்திரத்தில் இருந்து அனலெறியும் அடுப்பில் விழுந்துள்ளமையை உணர்ந்தார்கள்.

இந் நாட்டின் வடகிழக்கில் சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்து தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தமை பற்றியும் அவர்கள் செம்மொழி ஒன்றினைப் பேசி வந்தார்கள் என்பதைப் பற்றியும் கவனத்திற் கெடுக்காமல்பெரும்பான்மையினரின் மொழி மட்டும் நாட்டின் மொழியாகவும் அரச மொழியாகவும் ஆக்கப்பட்டது. பல விதமான பாரபட்சம் மிகுந்த சட்டங்கள் (தமிழர்களுக்கு எதிராக) கொண்டு வரப்பட்டதுமல்லாமல் வடக்கு கிழக்கு தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களில் தமிழர்கள் வாழ்ந்து வந்த அவர்களின் வாசஸ்தலங்களில் இருந்து அவர்களை அடித்து விரட்ட கலவரங்களும் கலகங்களும் அப்போதைய அரசாங்கங்களினாலேயே முடுக்கி விடப்பட்டன.

இவற்றிலிருந்து ஒரு உண்மை புலப்பட்டது. தமிழர்கள் தமது சுதந்திரத்தை சிங்கள மக்களிடம் பறிகொடுத்தமை வெளிப்பட்டது.

இன்றும் நிலைமை மாறவில்லை. நாட்டின் வடகிழக்கு மாகாணங்கள் முற்றுகையிடப்பட்ட பிரதேசங்கள் போல் பெருந்திரளான இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வடகிழக்கு மாகாணங்களின் அரசியல், சமூக, பொருளாதார செயற்பாடுகள் அனைத்தும் மத்தியின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. வடகிழக்கில் இருக்கும் தமிழ் மக்களின் செறிவைக் குறைத்து அங்கு பெரும்பான்மையினரின் உள்ளீடல்களையும் உறைவிடங்களையும் அதிகமாக்குவதே அரசின் நோக்கம் என்பது வெள்ளிடைமலையாகியுள்ளது.

ஆகவே வெள்ளையரிடம் இருந்து நாம் பெற்ற சுதந்திரம் இன்று பொருளற்றதாகப் போய்விட்டது. ஏனெனில் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாங்கள் இன்று பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டுவிட்டோம். ஒரு முறையான சமஷ்டி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வு பெற்றாலேயே அன்றி நாம் எமது பறி கொடுக்கப்பட்ட உரித்துக்களை மீண்டும் பெற முடியாது. ஆகவே பெப்ரவரி நான்காந் திகதியை எவ்வாறு தமிழர்களாகிய நாங்கள் கொண்டாட முடியும்?

இவ் விடயம் சம்பந்தமாக எனது இணைத் தலைவர்களுடன் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் இருவரும் என் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று திடமாக நம்புகின்றேன். காரணம் தமிழர்கள் அனைவரும் ஏமாற் றப்பட்டுள்ளோம், கைவிடப்பட்டுள்ளோம் என்றே நாம் திடமாக நம்புகின்றோம் என்றார். (ம)

## பேரவையின் தேர்தல்...

தரப்பினர் நழுவிச் சென்றுள்ளனர்.

அதன் பின்னராக யாழ்.மாநகர வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளரும் யாழ் மாநகர முதன்மை வேட்பாளருமான வி.மணிவண்ணன் உள்ளிட்டோர் மக்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது திடீரென ஆட்டோக்களில் வந்த சில குண்டர்கள் இது எமது கட்சியின் இடம் இங்கு பிரசாரத்தில் ஈடுபட எவருக்கும் அனுமதி இல்லை எனக் கூச்சலிட்டவாறு கலந்துரையாடல் நடைபெற்ற இடத்தினை நோக்கி கற்களைக் கொண்டு தாக்குதல் மேற் கொண்டுவிட்டுச் சென்றுள்ளனர். (ம-4)

## பெண் பொலிஸார்...

வம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-9)

## போர்க் குற்றங்களை...

வதாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்றுமுன் தினம் அறி விக்கப்பட்டது. அரசியல் கைதிகளின் உறவினர்களால் மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட எழுத்தாணை மனுவை அடுத்தே இந்த தீர்மானத்தை சட்டமா அதிபர் அறிவித்தார்.

இந்த நிலையில் அரசியல் கைதிகள் மூவரது உறவினர்களும் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தனர். ஆளுநருக்கும் ஜனாதிபதிக்கும் இதன் போது அவர்கள் நன்றி தெரிவித்தனர். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துவெளியிட்ட போதே வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "போராட்டம் நடத்திய காரணத்தால் நானும் மறியலில் இருந்தேன். தற்போது போராட்டங்கள் மற்றும் போர் என்பன முடிந்துவிட்டன. அந்தக் காலத்தில் நடைபெற்றவைகளை எல்லாம் நாம் மறக்கவேண்டும். அவற்றை நெஞ்சில் வைத்துக் கொண்டு கோபத்தில் செய்பவைகளால் எந்தப் பயனுமில்லை.

இந்த நாட்டில் இடம்பெற்ற போரால் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மிகவும் வேதனையடைந்தனர். இப்போது எல்லா மக்களும் ஒரு தாய் பிள்ளைகளாக இந்த தேசத்துக்கு விடுதலை கொண்டு வரவேண்டும். இந்த நாடு சுதந்திரமடைந்த பின்னர் 70 ஆண்டுகள் என்ன நடந்தது? முஸ்லிம் தலைவர்கள் அரசுடன் இணைந்து தமது மக்களுக்காக வேலை செய்தனர். தமிழ் மக்கள் 70 ஆண்டுகள் அரசுக்கு எதிராக இருந்தனர்.

போராட்டம் செய்ய வேண்டாம் என நான் சொல்லவில்லை. அரசியல் நோக்கத்துக்கு அதனைச் செய்வோம். அதற்கு இடையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது இருந்தால் அவற்றை உடனடியாக நேரடியாகச் செய்ய வேண்டும். அதுதான் மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும் என்றார். (ம)

## விளக்குமாறு தும்புத்...

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் வருகை தரவிருந்தார்.

ஏற்கெனவே சாய்ந்த மருதில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த சில நிகழ்வுகளில் ஹக்கீம் கலந்து கொள்ளவிருந்த போதும், அந்த பிரதேச மக்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக தனது வருகைகளை ஹக்கீம் ரத்துச் செய்திருந்தார்.

இந்த நிலையில் சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி சபையைப் பெற்றுக் கொடுப்பதில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பாரிய துரோகத்தினைச் செய்துள்ளதாக, அப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டி, தமக்கான உள்ளூராட்சி சபை கிடைக்கும் வரையில், தமது பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கட்சிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கேட்டிருந்தனர்.

இந்தக் கோரிக்கைக்கு சாதகமாக ஏனைய அரசியல் கட்சிகள் நடந்து கொண்டுள்ள போதிலும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் எதிர்த்து நின்று செயற்பட்டு வருகிறதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சாய்ந்தமருது மக்களின் ஆதரவுடன், கல்முனை மாநகரசபைக்கான தேர்தலில் போட்டியிடும் பொருட்டு சுயேட்சைக் குழுவொன்றும் களமிறக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (ம)

(முன்னர் வந்த செய்தி உள்ளே..)

## ஜனாதிபதி தலைமை...

முப்படை பிரதானிகளும் அரசியல் பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொள்கின்றனர். பிரித்தானிய அரச குடும்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளவரசர் எட்வேர்ட்டும் அவரது பாரியாரும் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்வதுடன், இந்தியா,சீனா , அமெரிக்கா மற்றும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், தூதுவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க அம்மையார், மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் தி.மு ஜெயரத்ன ஆகியோருக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் நிகழ்வில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## ஏற்படுத்த வேண்டிய...

சிறிசேன அவர்கள் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் பண்டாரகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்தில் நேரடியாக தலையிட்டு மக்களின் வாழ்க்கை செலவு பிரச்சினைக்கு தீர்வை வழங்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தையும், தேசிய கைத்தொழில் துறை மற்றும் விவசாயத் துறையின் எதிர் கால பயணத்திற்காக எடுக்கவேண்டிய தீர்மானங்களையும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு பின்னர் நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு என்றவகையில் முன்னோக்கி பயணிக்க வேண்டுமே தவிர பின்னோக்கிச் செல்வது பொருத்தமானதல்ல எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த காலத்தில் ஏற்பட்ட பாரிய கடன் சுமையுடன் முகங்கொடுக்க வேண்டியிருந்த பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டறிந்து நாட்டை முன் கொண்டு செல்லவேண்டும் என்றும் தெரிவித்தார்.

பதவியிலிருப்பதற்கு இரண்டு வருடங்கள் இருக்கின்ற நிலையில் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கும் சர்வதேச ரீதியான சவால்களுக்கும் முகங் கொடுக்க முடியாமல் தேர்தல் ஒன்றிற்கு சென்று தோல்வியடைந்த முன்னாள் தலைவர் மீண்டும் மக்களின் ஆட்சி ஒன்றை அமைக்க அதிகாரத்தை கோருவது நாட்டை பின்னோக்கி இழுத்துச் சென்று தனி ஒரு குடும்பத்தினால் நாட்டை ஆளும் யுகத்தை உருவாக்குவதற்கேயாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள், இந்த சந்தர்ப்பவாத அரசியல் குறித்து நாட்டுமக்கள் தெளிவுடன் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எத்தனை கட்சிகள் உருவாகியபோதும் நாட்டு மக்களின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை அழித்துவிட எவருக்கும் முடியாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பெப்ரவரி 10ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடையும் வெற்றியுடன் சிறந்ததோர் ஆட்சியின் மூலம் நாட்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். (ம)

## ராஜபக்ஷக்களை இனி...

முகவரியே இருக்கும். அவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் தடையின்றி தொடர்பு கொள்ளலாம். அந்த முகவரி வேறு ஒன்றும் அல்ல, சிறைச்சாலை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ கிராம மக்களுடன் தொடர்புபடும் முக்கிய தேர்தலுக்கு நாட்டில் இல்லை. அவர் வெளிநாட்டில் இருக்கின்றார். தேர்தல் முடிந்த பின்னர் 12ஆம் திகதி சுபநேரம் பார்த்து நாடு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கை ரூபாய்...

யினால் ரூபாய் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளதாக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை டொலருடன் ஒப்பிடும் போது ரூபாயின் பெறுமதி 154.15 - 20 ரூபாயாக காணப்பட்டுள்ளது. எனினும் நேற்றுமுன்தினம் வரையில் 154.30 - 35 ரூபாயாக பதிவாகியுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் ரூபாயின் பெறுமதி நூற்றுக்கு நான்கு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக வங்கியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

## தங்க தகட்டுடன்...

இந்தியப் பிரஜை ஒருவர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதை தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் டுபாயில் இருந்து வருகை தந்த இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடைய தங்க தகடு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. (ம)

## அதிகளவிலான...

களை வாக்காளர்களுக்கு அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்.

எனினும், வாக்காளர்கள் தங்களது வாக்கினை பணத்திற்கு விற்பனை செய்யக் கூடாது. அடிமைத்துவத்திலிருந்து மீண்டு தாம் விரும்பும் அரசியல் கட்சிக்கு தைரியமாக வாக்களிக்க மக்கள் பழகிக்கொள்ள வேண்டும். தேர்தல் பிரசார செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டாலும், பிரசார செலவுகள் குறைந்தபாடில்லை என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி மைத்திரி...

நோக்கங்களை அடைவதற்கு, தடையாக அமையும் என்றும் சபாநாயகர் எச்சரித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த சபாநாயகர், ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் நான் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன். இங்கு அரசியல் எதுவும் கிடையாது. ஒரு சபாநாயகராக, நான் சுதந்திரமானவன்.

நாங்கள் அடைய வேண்டிய திட்டம் ஒன்று உள்ளது. மறைந்த மாதுளுவாவே சோபித தேரரின் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

சில அரசியல் பேச்சுக்களால் பொருளாதாரம் உறுதியற்ற நிலையை அடைந்துள்ளது. முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது. பங்கு வணிகம் சரிந்துள்ளது. தேர்தலுக்குப் பின்னர் நாடு உறுதியற்ற நிலைக்குத் தள்ளப்படும் என்று முதலீட்டாளர்கள் நினைக்கிறார்கள்.

இதனால், எமக்கு நெருக்கமான அனைத்துலக சமூகமும் அண்மையில் பிரச்சினையை எதிர்கொள்கிறது. இத்தகைய பிரச்சினைகள், நாட்டுக்கு நல்லதல்ல. நீங்கள் இருவரும், அரசியல் தளங்களில் மோதல்களை மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். இதனை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் இது அவசியமான தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## பேரவையின் தேர்தல்...

யப்பட்டுக்கொண்டிருந்தபோது ஒரு கட்சியின் உறுப்பினர் என கூறியவாறு சில இளைஞர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். இப்பகுதியில் வேறு கட்சிகள் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியவாறு அங்கிருந்த ஒலி மற்றும் ஒளி சாதனங்களின் வயர்களை அறுத்துவிட்டு மேடைப்பகுதியில் அமர்ந்திருந்தனர்.

பின்னர் மாலை 6.30 மணியளவில் குறித்த பிரதேசத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் கலந்துரையாடலுக்கு மக்கள் திரளத் தொடங்கிய நிலையில் அங்கிருந்து குறித்த 15☛

## யாழ் பாடியில்

தினமும் முற்பகல் 11 மணிமுதல்

பிறைட் சிக்கன் - Fried Chicken

றைஸ் & பைட்ஸ் - Rice & Bites

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

(C-1473)

## காணி விற்பனைக்கு

பலாலி றோட் கோண்டாவில் ராஜா பிளாசாவிற்கு அண்மையில் 2.5 பரப்பு காணி, பயன்தரு மரங்களுடன் புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 605 7591, 077 452 7317

(2643)

## யாழ் பாடியில்

தினமும் முற்பகல் 11 மணிமுதல்

## ஒடியல் கூழ்

சைவம், அசைவம்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

(C-1467)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு அதிர்ஷ்டமுள்ள மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1467)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## வேலை வாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி.... யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள். 18 பேருக்கு முன்னுரிமை.

- ஆரம்பம் - 12,500/-
- வயதெல்லை : 18 - 35
- தங்குமிட வசதி இலவசம்

தொடர்புகளுக்கு : 076 666 8385

(C-1489)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அண்ணா

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

(C-1473)

## LUX GARDEN
## LINGAM RAJES

குளிரூட்டப்பட்ட/குளிரூட்டப்படாத

பல் கலாசாரங்களுடன் கூடிய இரு மண்டபங்கள்!




**Hotel Lux Etoiles**

No. 34, Chetty Street Lane Nallur, Jaffna.
Tel: 021 222 3966, 0722 223 966
Fax: 021 222 0606
Email:reserve.luxetoiles@yahoo.com
www.luxetoiles.com
facebook:lux etoiles pool bar

(C-1491)

## உடனடி வேலைவாய்ப்பு

DM International (PvT) LTD

இன் யாழ் நகர கிளை அலுவலகத்திற்கும் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கும் வெளிவேலைகளுக்கும் அலுவலக வேலைகளுக்கும் ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.

தகைமை : O/L & A/L
பயிற்சி : 3 மாதம்
வெளிமாவட்டத்தினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (உணவு தங்குமிடம் இலவசம்)

மேலதிக தொடர்புகளுக்கு : 0771056848, 0772881162

(2648)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கல்லக்றோட், கொழும்பு 05ல் வசிக்கும் கணவன் மனைவி இருவருக்கும் சகல வீட்டு வேலைகள் செய்வதற்கு (சமையல் உட்பட) அனுபவம் வாய்ந்த பணிப்பெண் தேவை (வயது 30 - 55) சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
021 225 1457, 075 053 2761

## விளக்...

கட்டப்பட்டும் காணப்பட்டன.

மேலும் மக்கள் விளக்குமாறு, தும்புத்தடிகளைக் காட்டி எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளனர்.

கல்முனை மாநகரசபைக்கான தேர்தலில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகயானைச் சின்னத்தில் போட்டியிடும் சாய்ந்தமருது வேட்பாளர்களை ஆதரித்து நேற்று பிரசாரக் கூட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த பிரசார கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, நேற்று சாய்ந்தமருதுக்கு இலங்கை 15☛

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress

(C-1476)

## உணவக வெற்றிடங்கள்
## (Restaurant Vacancies)

வளர்ந்து வரும் உணவகத்திற்கு பின்வரும் சமையல் வெற்றிடங்கள் உடனடியாக உள்ளன.

A) யாழ். வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வடமாகாண உணவு வகைகள்
B) ரைஸ், பைட்ஸ் வகைகள்
C) ரோல்ஸ், பற்றீஸ் மற்றும் மிதிவெடி வகைகள்
D) கொத்து, பரோட்டா போன்ற உணவு வகைகள்
E) அப்பம்
F) உதவியாள்கள் (Helpers)

பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்காணும் முகவரிக்கு 05.02.2018 திங்கட் கிழமை, 06.02.2018 செவ்வாய்க்கிழமை ஆகிய நாள்களில் காலை 10 மணிக்கு சமூகமளிக்கவும்.

யாழ்.பாடி

49 - 51, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T. P : 021 222 6868

(C-1448)

## DONATIONS OF Used Books

www.bte.one BTE aimsmediaservice@gmail.com

புத்தகம் காட்சிப்படுத்த அனுமதி இலவசம்

தொடர்புகளுக்கு
இலங்கை : சிசெல்வராசா
077 833 9303

2018

## லண்டன் புத்தக திருவிழா
## London Book Festival

Harrow Leisure Centre

FREE ADMISSION

Saturday 9.00am
17th February 2018
Christchurch Ave, Harrow HA3 5BD

அனுமதி இலவசம்

British Tamil

Poets/ writers/Artist/Composers/ Paiters/Entertainers/ Exhibuters/Sponsors/Medias/ News Papers /Schools/Tution Centres/Sports Clubs Charities/ Temples

BOOK SALE

புத்தகம் விற்பனைக்கு 2'x4' Display £20

உங்கள் புத்தகங்களை விற்பனை செய்ய வேண்டுமா?

சுயமரியாதை வெளியீடு
02088660103 / 07912206171

(2647)

## அரியாலை கடற்கரை காணி விற்பனைக்கு

கிழக்கு அரியாலையில் 100+ மீற்றர் நீள கடற்கரை எல்லை உடைய பத்து ஏக்கர் (160 பரப்பு) பனைமர தோட்டம் விற்பனைக்கு உள்ளது. வீடு கட்டி வசிப்பதற்கும் பயிர் செய்கைக்கும் ஏற்ற வெண்மணல் நிலம் முழுதாகவோ பகுதியாகவோ விற்க முடியும்.

மேலும் விபரங்களுக்கு :

சஜித் - யாழ்ப்பாணம்
(077 323 8235, 078 303 6311)

குகநாதன் - லண்டன்
(07414942508, 077 587 4840)

ariyalai land@gmail.com இல் தொடர்பு கொள்ளவும்.

(2643)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்

நாதம் 153

வள்ளுவர் ஆண்டு 2049 | 04.02.2018 | தொலைபேசி : 021 222 3378

# சோதனை மேல் சோதனை







வடக்குக்கிழக்கில்
1000
விகாரைகளை அமைப்பதற்கு
அனுமதி கொடுத்தது யார்?
தடுத்து நிறுத்த அணி திரண்டு
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக்கு
வாக்களிப்பீர்



(C-024)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## மாவிட்டபுரத்துக் குருக்களை நிந்தித்த பாவம் சும்மா விடாது

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** மாவிட்டபுரத்து முருகன் கோயில் மூன்றாம் வீதியில கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்ர கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டது என்று மல்லாகம் நீதிமன்றில தமிழரசுக் கட்சி தொடுத்த வழக்கு தள்ளுபடியாயிற்று.

**மூப்பர்:** வழக்குத் தள்ளுபடியான ஆத்திரத்தில கூல் கொட்டாகிப் போனார் பார்த்தியளோ.

**கங்காணி:** இஞ்ச கூல் கொட்டாகிப் போனார். அங்க மாவிட்டபுரத்து மக்கள் கொட்டாகிற்றினம்.

**வாத்தியார்:** ஏன் கங்காணியார் மாவிட்டபுரத்து மக்கள் சூடாகினவியள்.

**கங்காணி:** வரலாற்றுப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் குருக்களை நீதிமன்றில தமிழரசுக் கட்சி நிறுத்தினால் அங்க இருக்கிற மக்களுக்கு அது கோபத்தைக் கொடுக்கும் தானே!

**பண்டிதர்:** மாவை. சேனாதிராசா எண்டாலும் அந்த வழக்கைத் தொடுக்க வேண்டாம் எண்டு சொல்லியிருக்கலாம். என்ன செய்யிறது. மகாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள் இருந்திருந்தால் அவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல பாடம் படிப்பித்திருப்பார்.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா இதுக்குப் பின்னால மதவெறி பிடித்த அந்தப் பேராசிரியர்தான் செயற்பட்டிருக்கிறார். மாவிட்டபுரத்துக் குருக்களை நீதிமன்றில நிறுத்தி சைவசமயத்தையும் சைவ சமய மதகுருமாரையும் அவமானப்படுத்துறதுக்காக அந்தப் பேராசிரியர் செய்த வேலைதானாம் இது.

**மூப்பர்:** அட நாசமறுப்பு. அதுதானே பார்த்தன்.

**விதானையார்:** யாழ்ப்பாண மாநகர சபையில மேயர் பதவிக்குப் போட்டியிடுகிற ஆனோல்ட்டும் தேவாலயம் ஒன்றில பூசை வழிபாடு செய்து போட்டுத்தான் பிரசார வேலைகளை ஆரம்பித்தவர். அது மாதிரித்தான் கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் (சைக்கிள் சின்னம்) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில பூசை வழிபாடு செய்திருக்கினம்.

இது தவறோ. இது தவறு எண்டால் ஆனோல்ட்டுக்காகப் பூசை செய்த பாதரையுமல்லோ நீதிமன்றில நிறுத்தவேணும்.

**பண்டிதர்:** சைவசமயத்தவர்கள் அப்படி ஒருக்காலும் செய்யமாட்டினம். கத்தோலிக்க மக்கள் கொடுக்காத அளவுக்கு சைவசமயத்தவர்கள் அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் மரியாதை கொடுக்கிறவியள். ஆனால்...

**வாத்தியார்:** என்ன பண்டிதர் ஆனால் எண்டு இழுக்கிறியள்.

**பண்டிதர்:** எங்கட தமிழனின்ர ஒற்றுமையை சமயத்திநூடாகக் குலைக்கிறதுக்கு அந்தப் பேராசிரியரும் கூட்டமைப்பில இருக்கிற முக்கிய பாராளுமன்ற உறுப்பினரும் கடுமையாக வேலை செய்யினம்.

எங்கட சனங்கள் மதவேற்றுமை பார்த்திருந்தால் கூட்டமைப்பில இருக்கிற அந்த முக்கிய நபருக்கு சைவமக்கள் வாக்குப் போடாமலல்லோ விட்டிருப்பினம். ஆனால் சைவசமயத்தவர்களும் அவருக்கு வாக்குப் போட்டவர்கள்தானே!

**விதானையார்:** ஏன் பண்டிதர் தந்தை செல்வநாயகம் தென்னிந்தியத் திருச்சபை சார்ந்தவர். அப்படியிருந்தும் சைவமக்கள் அவரை தந்தை செல்வா என்று போற்றித் துதித்தவியள்.

அண்டைக்கு கிறிஸ்தவம் சார்ந்த ஒருவர் எங்களுக்கு தலைவராக இருக்கமுடியாது எண்டு சைவமக்கள் நினைத்திருந்தால், தந்தை செல்வநாயகம் இத்துணை தூரம் உயர்வு பெற்றிருக்க முடியாது.

அண்டைக்கு எங்கட மக்கள் பெருந்தன்மையாக நடந்ததால இண்டைக்கு நல்லூர்க் கந்தசுவாமியார் இருக்கிற வட்டாரத்திலும் நொன்ஆர்சி வேட்பாளரைத்தான் தமிழரசுக் கட்சி நிறுத்தியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஒரு கத்தோலிக்க சமயத்தவர்தான் யாழ்ப்பாண மாநகரத்தின் முதல்வராக வரவேணும் எண்டு தமிழரசுக் கட்சியின்ர எம்.பி. விடாப்பிடியாக நிண்டு அதையும் செய்து போட்டார்.

இந்த வேலைக்குப் பிறகு சமய வேற்றுமையைக் களைய வேண்டுமென்றால், அதற்கு கத்தோலிக்க சகோதரர்கள்தான் உதவி செய்யவேணும்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது முழுக்க முழுக்க உண்மை. மதசார்பு பார்க்காமல் தமிழரசுக் கட்சி செயற்படுவதாக இருந்தால், தேர்தலுக்குப் பிறகு மேயர் யார் என்பது அறிவிக்கப்படுமெண்டு ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், ஒரு பிரச்சினையும் இருந்திருக்காது.

இதென்னடா எண்டால் நல்லூர் ஆலயத்தின்ர பெருமையைச் சிதைக்கிற சதி வேலையையல்லோ தமிழரசுக் கட்சி செய்திருக்குது.

**வாத்தியார்:** சரி... சரி... சமய பேதத்திற்கு எதிரான எங்கட நிலைப்பாட்டில நாங்கள் இருப்பம். ஆனால் யாழ்ப்பாண மாநகரத்திற்கு ஒரு கத்தோலிக்கர்தான் மேயராக வரவேணும் எண்டும் மாவிட்டபுரத்துக் குருக்களை நீதிமன்றத்தில நிறுத்திய மோசமான வேலையையும் விட்டுச் சின்னத்தில போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சி செய்திருக்கக் கூடாது என்பதை மட்டும் ஆலடி மாநாட்டில வலியுறுத்துவம்.

மற்றும்படி எங்கட மக்கள் தங்கட தீர்ப்பை வழங்கட்டும். இருந்தாலும் சைவசமயத்தை ஒழித்துக்கட்டுகிற வேலை கூட்டமைப்புக்கூடாக நடக்குதென்பதை அந்தக் கட்சியில இருக்கிற மாவை. சேனாதிராசா எம்.பி, சிறிதரன் எம்.பி., சித்தார்த்தன் எம்.பி போன்றவர்கள் உணர்ந்து செயற்பட்டால் நல்லது.

(வாத்தியார் வைத்திலிங்கம் இவ்வாறு கூறியதும் ஆலடி மாநாட்டில அமைதி நிலவியது. திடீரென நிலவிய நிசப்தத்தை மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் கலைத்தார்)

**வாத்தியார்:** ஆலடி மாநாட்டிற்கு வந்த கடிதங்களில முக்கியமான ஒரு கடிதத்தையாவது இன்றைக்குப் பார்ப்பம்.

(வாத்தியார் இவ்வாறு கூற, தன் மடியில் செருகி வைத்திருந்த கடிதத்தை பண்டிதர் பரமலிங்கம் எடுத்து வாசித்தார்.)

**பண்டிதர்:** ஆலடி மாநாட்டுத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் அன்பு வணக்கம். இக்கடிதத்தை எழுதும் நாங்கள் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள். எங்கள் மீது சுமத்தப்பட்ட விளக்கம் விசாரணை தொடர்பில் அதிகாரிகள் சிலர் பாலியல் இலஞ்சம் கேட்ட தகவலை உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

இது தொடர்பில இரகசிய விசாரணை நடத்தினால், பாலியல் இலஞ்சம் கேட்டது யார் என்பது பற்றி நாங்கள் இரகசியமாகத் தகவல் தரமுடியும். இது பற்றி நடவடிக்கை எடுங்கள். நீங்கள் நடவடிக்கை எடுத்தால்தான் மக்களின் வாழ்வின் எழுச்சி ஏற்படும்.

**இங்ஙனம்**
**பாதிக்கப்பட்டவர்கள்,**
**யாழ். மாவட்டம்.**

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா, இந்தக் கடிதம் மிகவும் முக்கியமானது. இது தொடர்பில யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், பொருத்தமான விசாரணை நடவடிக்கையை எடுக்க வேணும் என்று ஆலடியில தீர்மானம் நிறை வேற்றுவம்.

இப்படி வாத்தியார் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# தமிழரின் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தல் இது





## ஆயிரம் விகாரைகள் அமைப்பதை தடுக்கும் சக்தி தமிழ் மக்களிடம்

தமிழ்மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தேர்தலாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைந்துள்ளதென்பது ஆச்சரியமான உண்மை.

இதை நாம் கூறும்போது பாராளுமன்றத்திற்கான தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்பவற்றையெல்லாம் கடந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் எங்ஙனம் தமிழரின் தலைவிதியைத் தீர்மானிக்க முடியும் என்ற கேள்வி உங்களிடம் ஏற்படவே செய்யும்.

தமிழ்மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தேர்தலாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைந்திருப்பதென்பது தேர்தலின் அதிகாரத்தைக் குறித்துக் கூறப்பட்டதல்ல.

இந்தத் தேர்தல் நடைபெறுகின்ற காலச்சூழமைவை வைத்தே இது தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகும் தேர்தல் என்று குறிப்பிடுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தன்னைக் காட்டிக் கொள்ளும் இல்ங்கைத் தமிழரசுக் கட்சி, இடைக்கால வரைபை பூரணமாக ஆதரிக்கின்றது. அதே நேரம் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவதை ஏற்றுக் கொள்வதாகவும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடிய இந்து மற்றும் கத்தோலிக்க ஆலயங்களில் தினசரி வழிபாடு செய்வதற்கான அனுமதி இதுவரை மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பார்க்குமிடமெங்கும் பௌத்த விகாரைகள் தெரிய வேண்டும் என்பது போல அமைந்துள்ளது.

பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவது 'எமக்குப் பிரச்சினையில்லை என்று இரா.சம்பந்தன் கூறியதன் காரணமாக, வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைப்பதற்கான முன்மொழிவு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

இங்குதான் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் கருத்து நோக்கப்பட வேண்டும்.

அதாவது மதத்திற்கான முன்னுரிமை என்பதில் அந்தந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழுகின்ற மக்கள் எந்தச் சமயம் சார்ந்தவர்களோ அந்த இடங்களில் அந்தச் சமயத்திற்கு முன்னுரிமை என்பதாக சட்டவாக்கம் அமைய வேண்டும்.

இவ்வாறானதோர் நிலைமையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்பது செல்லுபடியற்றதாகும்.

அல்லது வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மதச்சார் பின்மையைப் பின்பற்றுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்பது முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்தாக அமைந்தது..

அவரின் மேற்போந்த கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனித்திருந்தால், ஆயிரம் விகாரைகளை வடக்கு- கிழக்கில் அமைத்தல் என்ற விடயத்தை ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்காதென்பது நிறுதிட்டமான உண்மை.

ஆக, பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவது நமக்கொன்றும் பிரச்சினையில்லை என்ற ஒப்புதலை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் பெற்ற பின்பே, ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு- கிழக்கில் ஆயிரம் விகாரை அமைக்கும் தனது திட்டத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிப்புச் செய்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தடுக்கப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம். நிலைமை இதுவாக இருக்கையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், ஆயிரம் விகாரைகள் அமைவதற்கான இடங்களை ஒதுக்கி வழங்குகின்ற பணியையும் அவர்களே செய்தாக வேண்டும்.

இல்லை... நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம் என்று கூட்டமைப்பின் வேட்பாளர்கள் கூறினால், அதற்கு நாங்கள் உரிய மதிப்புக் கொடுக்கவேண்டும்.

ஆனாலும் உங்களால் எதுவும் செய்ய முடியாது என்பதை நீங்கள் யதார்த்தத்தில் கண்டுகொள்வீர்கள்.

பௌத்தத்திற்கு முன்னுரிமை என்று கூறிவிட்டு வடக்கு- கிழக்கில் ஆயிரம் விகாரைகள் அமைப்பதை கூட்டமைப்பு எதிர்ப்பதென்பது ஒரு போதும் சாத்தியப்படாத விடயம்.

ஆகையால்தான் சொல்கிறோம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல், தமிழர் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல் என்று.

உண்மையில் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகம் என்ற நிலைப்பாடு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் இருந்திருக்குமாயின் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நாகவிகாரையின் விகாராதிபதி உடல் தகனம் செய்வதை இரா. சம்பந்தர் தடுத்திருப்பார். எனினும் அவர் அதுபற்றி வாய் திறக்கவேயில்லை.

இப்போது ஆயிரம் விகாரைகளில் ஒன்று விகாராதிபதியின் உடல் தகனம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

எனவே வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்போகும் ஆயிரம் விகாரைகளைத் தடுக்கின்ற ஒரே சக்தி தமிழ்மக்களிடம் மட்டுமேயுண்டு.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்மக்கள் மிக நிதானமாக சிந்தித்து தமது வாக்குகளை வழங்குவார்களாக இருந்தால், ஆயிரம் விகாரைகளைத் தடுக்கின்ற நடவடிக்கையை தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் செய்ய முடியும்.

ஒட்டுமொத்தத்தில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்திற்குச் சென்ற தமிழ் மக்களைப் பொலிஸார் சோதனை செய்ததைக்கூட தடுத்து நிறுத்த முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விகாரைகளைத் தடுக்கும் என்று யார் கூறினாலும் அஃது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவேயன்றி வேறில்லை.

**விதுரன்**




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## மூக்குடைந்த குருவி



இது வேற யாரோ. சரி. நாளை பார்க்கலாம் என்று சமாதானம் சொன்னது சேவல்.
மறுநாள் காலை முட்டையிட்டு. வைக்கோலைப் போட்டு மூடி வைத்தது கோழி. பிறகு உணவு தேடி இரண்டும் புறப்பட்டன. கோழியும் சேவலும் சென்றதை உறுதிப்படுத்திக் கொண்ட குருவி. கீழே வந்தது. கூட்டுக்குள் நுழைந்து. முட்டையை உடைத்துவிட்டுக் கிளம்பியது.
அன்று மாலை பதற்றத்துடன் கூட்டுக்குத் திரும்பியது கோழி. முட்டை உடைந்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தது. இதுக்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும் என்றது கோழி. சேவல் நீண்ட நேரம் யோசித்து. ஒரு திட்டம் தீட்டியது.
"கவலைப்படாதே. இரண்டே நாட்களில் இந்தப் பொல்லாத வேலையைச் செய்பவரைப் பிடித்துவிடலாம்" என்றது.
"எப்படி?"
கோழியின் காதில் தன் திட்டத்தைச் சொன்னது சேவல். மகிழ்ச்சி அடைந்தது கோழி.
மறுநாள்உடைந்தமுட்டை ஓடுகளைச் சேகரித்தது கோழி. களிமண்ணையும்கற்களையும்கொண்டு வந்தது சேவல்.
முட்டை ஓட்டுக்குள் கற்களையும்களிமண்ணையும் வைத்து இரண்டும்நிரப்பின. இரண்டு நாட்களில் களிமண் கெட்டியானது.
"முட்டைகள்தயார். இன்று இரை தேடிச் செல்வோம்" என்றது சேவல்.
இரண்டும் நிம்மதியாகக் கிளம்பின.
"கிளம்பிட்டாங்க- ரெண்டு நாளா முட்டை உடைக்காமல் தூக்கமே வரலை" என்று சொல்லிக்கொண்டே கோழி கூட்டுக்குள் சென்றது குருவி.
முட்டையைக் கண்டது. ஒரு கொத்துக் கொத்தியது. ஆனால். முட்டை விரிசல் கூட விடவில்லை. கொஞ்சம் வேகமாகக் கொத்தியது. அப்போதும் உடையவில்லை. தன் பலம் அனைத்தையும் சேர்த்துக் கொத்தியது.
இப்போது உடைந்தது முட்டையல்ல... குருவியின் மூக்கு.
வலியால் துடித்துக்கொண்டே வெளியேறிய குருவியை. சேவல் மடக்கியது. "முட்டையிடுவதும் அவற்றை அடைகாப்பதும் எவ்வளவு கஷ்டம் என்று உனக்கே தெரியும். ஒரு பறவையாக இருந்து கொண்டு இப்படி ஒரு காரியத்தை எப்படிச் செய்யத் துணிந்தாய்?" என்று கோபமாகக்கேட்டது கோழி.
"ஐயையோ என்னை மன்னித்துவிடுங்கள். என் மூக்கு உடைந்துவிட்டது இனி நான் தவறு செய்ய மாட்டேன்" என்று அலறிக் கொண்டே வேறு இடம் நோக்கிப் பறந்தது குருவி.

(முற்றும்)

## சூழல் மாசடைதல்



சுற்றுச்சூழல் மாசுபாடு (சூழல் மாசடைதல்) என்பது மனித செயல்கள் மூலம் உருவாகும் மாசுகளால். சூழலின் ஆதாரங்களாகிய காற்று. நீர். மண் வளங்களும். அங்கு வாழும் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி. அதனால் சூழல் சமநிலை சீரற்றுப் போகும் நிலையைக் குறிக்கும். சூழலுக்கும் அங்கே வாழுகின்ற உயிரினங்களுக்கும் கேடு விளைவிக்கக் கூடியவையின் சேர்க்கையினால் சூழற் சமநிலை பாதிக்கப்படும்.
சூழல் மாசினால் அச் சூழ்மண்டலத்தில் வாழும் தாவரங்களும், விலங்குகளும் பல்வேறு வகையான பாதிப்புகளுக்கு உண்டாகிறது. தற்பொழுது உலகை அச்சுறுத்தும் பத்து அச்சுறுத்தல்களில் சூழ்நிலை சீர்கேடும் ஒன்று என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது. சூழல் மாசானது சில வேதியியல் பதார்த்தங்களாகவோ, அல்லது வெப்பம். ஒளி. ஒலி போன்ற சக்திகளாலானதாகவோ இருக்கலாம். பல்வேறு காரணங்களால் சூழல் மாசடைகின்றது.
மாசடையும் முறைகளாக வளி மாசடைதல்.நீர் மாசடைதல். மண் மாசடைதல் போன்ற பல காரணிகளைக் குறிப்பிடலாம்.

## சந்தேகம்



உன் மனதில் தீமை இருக்கிறது. அதனால்தான் உனக்கு மன அமைதி இல்லை. சந்தேகங்கள் இருக்கத்தான் செய்யும். சந்தேகம் வரும். தொடர்ந்து நம்பிக்கையும் வரும். இவ்வாறு தான் நம்பிக்கை திடமாகிறது. ஏதாவது பெரிய காரியங்களைச் சாதிக்க விரும்பினால் சோம்பல் இன்றி எழுந்து சுறுசுறுப்பாக முயல வேண்டும்.

- சாரதாதேவி.

## குரு




குருநாதரின் கருணை என்பது பூரண சந்திரனின் கிரகணங்களைப் போன்றது. அது விரும்பியவரத்தை அளிப்பதில் கற்பக மரத்தைப் போன்றது. மனதில்உள்ள துன்பத்தை அது அறவே போக்கிவிடுகிறது. அத்தகைய குருவை பக்தியுடனும் அடக்கம் சேவை முதலியவற்றுடனும் பூஜித்து தேவையானதை அறிந்து கொள்ள வேண்டும்.

-ஆதிசங்கரர்-

## நயாகரா நீர்வீழ்ச்சி



நயாகரா அருவி அல்லது நயாகரா நீர்வீழ்ச்சி என்பது வட அமெரிக்காவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள புகழ் மிக்க ஒரு பேரருவி. இது உலகத்திலேயே உள்ள அருங்காட்சிகளில் ஒன்றாக போற்றப்படுகிறது. ஆண்டுதோறும் இதனை பார்க்க 10 மில்லியன் மக்கள் வருகின்றனர். இப்பேரருவி கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குமான எல்லையில் ஓடும் சுமார் 56 கி.மீ.நீளமுள்ள நயாகரா ஆற்றின் பாதி தொலைவில் அமைந்துள்ளது. இது தனியான இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. சுமார் 85% நீர் கனடாவில் உள்ள ஹோரஸ் (ஹார்ஸ்) ஷூ அருவி என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குதிரை இலாட அருவியிலும். மீதம் உள்ளது அமெரிக்கப் பகுதியில் உள்ள அமெரிக்கன் அருவியிலும் விழுகின்றது. இவை இரண்டும் அல்லாமல் ஒரு சிறிய பிரைடல் வெய்ல் அருவியும் உண்டு. குதிரை இலாட அருவி 792 மீ. அகலம் கொண்டது. உயரம் 53 மீ. அதிக உயரமானதாக இல்லாவிடினும் நயகாரா அருவியானது மிகவும் அகலமானது. அமெரிக்கன் அருவி 55 மீ. உயரமும். 305 மீ. அகலமும் கொண்டது. உலகில் மிகவும் பரவலாக அறியப்பட்ட இந்த அருவியானது வட அமெரிக்காவின் அதிசக்தி வாய்ந்த அருவியாகவும்இருக்கிறது. இப்பேரருவி சுமார் 12. 000 ஆண்டுகளுக்கும் முன்னர் தோன்றியது என்றும். முன்பு இப்பொழுதிருக்கும் இடத்தில் இருந்து 11 கி.மீ.தொலைவில் உள்ள லூயிஸ்டன் (Lewsiston) என்னும் இடத்தில் இருந்ததாகவும் கருதப்படுகிறது. அமெரிக்காவின் வடகிழக்கிலே உள்ள ஐம்பெரும் நன்னீர் ஏரிகளில் உள்ள மூன்று ஏரி நீரும் சிறிய ஏரியாகிய ஈரி என்னும் ஏரியின் வழியாக பாய்கின்றது. இந்த ஈரி ஏரியில் இருந்து நீரானது அதைவிட கீழான நிலப்பகுதியில் அமைந்துள்ள ஒண்டாரியோ ஏரியில் விழுகின்றது. இப்படிப் பாயும் ஆறுதான் சிறு நீளம் கொண்ட நயாகரா ஆறு.
இயற்கை அதிசயமான நயாகரா அருவியின் இரட்டை நகரங்களான நயாகரா ஃபால்ஸ் (நியூயோர்க்), நயாகரா ஃபால்ஸ்(ஒண்டாரியோ) ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதி கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக புகழ்பெற்ற ஒரு சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



### ரஜனிகாந்தின் அரசியல் பிரவேசம் பற்றி?

### தேசத்துரோகிகள் தேசத்தைப்பற்றி கதைக்கிறார்களே?

### அஜித்குமார் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**நந்தகுமார்** — மானிப்பாய்

**மாற்றம் வேணுமா?**

வேண்டும். நிச்சயம் வேண்டும். எங்கள் இனத்தின் இருப்பைக் கருவறுத்தவர் கூட்டத்துடன் இணைந்து கொண்டு தங்கள் இனத்துக்கு தாங்களே கெடுதி செய்யும் துரோகத்தனம் வேறு எந்த இனத்திலும் இல்லை. எம் இனத்தில் அது சர்வ சாதாரணமாய் நடந்து கொண்டிருக்கிறது.

என்ன செய்ய நக்குண்டார் நாவிழந்தார் என்பதாய் எம் இனம் படும் பாட்டை உரைக்க ஆளின்றித் தலைமை இன்றித் தவிக்கும் இனத்திற்கு மாற்றமொன்று தேவை. இல்லையேல் அழிவு நிச்சயம்.

**நிசான்** — வல்வெட்டித்துறை

**தள்ளாடும் வயதில் அரசியல் தேவையா?**

தள்ளாடும் வயதில் திருமணம்தான் முடிக்கக்கூடாது தவிர அரசியலை முடிக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லையே.

**பிறேம்** — வல்வெட்டி

**தேசத்துரோகிகள் தேசத்தைப்பற்றி கதைக்கிறார்களே?**

அவர்களுக்குதான் இப்போது காலம். நம் தேசம் விடிய வேண்டும் என்பதற்காக ஆயுதம் ஏந்தி தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த, அவயங்களை இழந்து தவிக்கும் யாரும் வசதியாக வாழவில்லை. ஒருநேர உணவுக்கே அல்லாடிக்கொண்டு இருக்கிறார்கள். வீர வசனம் பேசி உசுப்பேற்றி உழைத்தவர்கள் ஏசிக்காரில் இறங்காமல் செல்கிறார்கள்.

**தனுசன்** — நாவற்காடு

**தொடர்ந்து எங்கள் வீட்டு ரிவி ரிமோட் உடைகிறதே?**

தொடருக்குள் மூழ்கி இருப்பதை தவிர்த்து உறவுகளின் இதயங்களுடன் தொடர்பில் இருங்கள். வந்தவர்களுக்கு ரீயைக் கொடுத்து விட்டு ரிவியைப் பார்த்து வாய் பிளக்க வைப்பதை நிறுத்தி, ரிவியை நிறுத்தி அன்புடன் பேசுங்கள். இப்போதைய மனிதரின் மனங்கள் ரிமோட்டில் வேலை செய்கிறது போல சுவிச்சை அழுத்தினால்தான் எதுவும் நடக்கிறது அவ்வளவுதான்.

**தர்ஷி** — அச்சுவேலி

**மலரப்போகும் காதலர் தினத்தில் காதலர்களுக்கு நீங்க சொல்ல விரும்புவது?**

காதலர்களே காதல் என்பது இருவருக்குள் மலர்ந்து விட்டால் அதை கல்யாணம் என்கிற அறுவடையில் நிறைவு செய்யுங்கள். வெறும் காதலுடன் கழட்டிவிட நினைக்காதீர்கள். ஏனென்றால் காதல் என்ற வார்த்தையின் புனிதம் வேறு எந்த வார்த்தைக்கும் இல்லை. அதன் பெயரால் வரும் இழப்பை தாங்கிக்கொள்வது என்பது ரண வேதனைஎன நண்பன் சொல்ல கேட்டிருக்கிறேன்.

**சுதன்** — குப்பிளான்

**கூட்டமைப்பு இதுவரை செய்த சாதனை?**

இரண்டு கோடிவாங்கியது என்கிறார்கள் சிலர், வாங்கவில்லை என்கிறார்கள்பலர். ஒருவேளை வாங்கியிருந்தால் அது ஒரு பெரிய சாதனை. உயிர்களை விலை கொடுத்து இழந்த இனத்தின் பெயரால் வந்தவர்கள் இப்படிப்பட்ட சாதனைகளைச் செய்யும் போது மெய் சிலிர்க்கிறது.

**ஜீபா** — கரவெட்டி

**வீட்டை விற்றவர்கள் வீ.சியை விற்கமாட்டார்களா?**

இது ஒருநல்ல கேள்வி. ஆனால் இந்த நேரத்தில் இதற்குப் பதிலாக ஒரு பழமொழி சொன்னால் நமக்கு சிக்கல் இருக்காது "ஆமைபிடிப்பார் மல்லாத்துவார் யாமது சொன்னால் பாவம்"

**அருண்** — தெல்லிப்பழை

**அஜித்குமார் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மற்றவர்களுக்கு மதிப்பளிப்பது, தன்னுடன் நிற்பவர்களை கௌரவப்படுத்துவது, தன்னை தேடி வருபவர்களை வரவேற்பது, உபசரிப்பது என அத்தனை சிறப்புக்களையும் கொண்ட ஒரு மனிதன்.

**சுபன்** — குளப்பிட்டி

**இந்திய மீனவர்கள் ஏன் கைது செய்யப்படுகிறார்கள்?**

எல்லை தாண்டும் மீன்களை வலையில் அள்ளிச்செல்ல எல்லை தாண்டுவதால்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பவும்**

**ஜென்சிகா** — இருபாலை

**ரஜனிகாந்தின் அரசியல் பிரவேசம் பற்றி?**

தமிழ் நாட்டில் யார் ஆட்சியமைத்தாலும் அது ஈழத்தமிழருக்கு நன்மை தரப்போவது இல்லை. ஏனென்றால் தமிழ்நாடு இந்தியாவின் ஒருமாநிலம் என்பதை நாம் உணர்ந்து கொள்வது நல்லது.

**விபுல்** — கொடிகாமம்

**அழகைப்பற்றி உங்கள் கருத்து?**

பழங்களில் நீ அழகென்று எதைக் கருது கிறாய் அப்பிளை. அந்த அப்பிளை ஒரு இடத்தில் எறிந்து விட்டுப் போ அதை ஒரு காகங் கூட கண்டு கொள்ளாது. அதே, பார்ப்பதற்கு அசிங்கமாக இருக்கும் பலாப்பழத்தை எறிந்து பார் ஆயிரம் காகங்கள் உண்டு மகிழும். உண்ட விதை எங்கோ ஒரு மூலையில் முளைத்து மரமாகி பலன் கொடுக்கும். இது போல் தான் அழகென்பது சிலர் புறம் சார்ந்தும் சிலர் அகம் சார்ந்தும் சிந்திப்பர். அதில் நீங்கள் எந்த ரகம்?

**சண்டியன்** — பருத்தித்துறை

**உங்களுக்கு வேற வேலையே இல்லையா?**

நீங்கள் நாங்கள் எல்லோரும் சேர்ந்து வாக்குப்போட்டு பாராளுமன்றம் அனுப்பியவர்களைப் பார்த்து கேட்க வேண்டிய கேள்வியை என்னைப் பார்த்து கேட்கிறீரோ? அதுவும் புனை பெயரில்.



## வியாசரின் வியாக்கியானம்

போர் என்றது எங்கட வாழ்க்கையில் தவிர்க்க முடியாததாப்போச்சு. தமிழின விடிவுக்காக எத்தனை இளம் பொடி பொட்டையள் தங்கட வாழ்க்கையை விலை கொடுத்து மண்ணாய்ப் போச்சுதுகள். அதுகள் தங்கட கடைசி நிமிசத்துல எங்கட தமிழினத் திற்கு விடிவு கிடைக்க வேண்டும் என்ற ஒற்றை வார்த்தை யோடதான் உயிரை விட்டுதுகள்.

2009தோட தமிழ் இனத்தின்ர விடிவிற்கான போர் அழிக்கப்பட்டு பிறகு திட்டமிட்டு எங்கட பண்பாடு, கலாசாரம், கல்வி எல்லாத்தையும் அழிச்சு போதையை விதைச்சு இன்டைக்கு அழிவின்ர விளிம்பில் நிக்குது தமிழ் இனம். பாகுபலி படத்தில காலகேய மன்னனை அழிக்கிறத்துக்கு திட்டம் தீட்டேக்கே இராஜேஸ்வரி அம்மா சொல்லுவா ஒரு பகுதியினர் காலிகேய படைகளுடன் மோதிக்கொண்டிருக்க இன்னொரு பகுதியினர் காலகேய படைத்தலைவனை கொலை செய்ய வேண்டும். தலைவன் இல்லாத படைகளால் போர் செய்ய முடியாமல் அவர்கள் ஓடிவிடுவார்கள் எண்டு. எங்கட தமிழினத்திற்கும் இப்ப அதுதான் நிலை. ஒரு நல்ல தலைமையில்லாமல் அல்லாடிக்கொண்டிருக்குது. இப்படியே போனா பாகுபலி காலகேய படைகளுக்கு ஏற்பட்ட கதிதான் தமிழினத்திற்கும். தமிழ் தேசிய கூட்டமைப்பின்ர பிரசாரக்கூட்டம் அண்மையில வவுனியாவில நடந்தது. மகிந்த, மைத்திரி, ரணில் வந்தா எப்படி பாதுகாப்பு இருக்குமோ அதே போல கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு பாதுகாப்பு.

அதைவிட கொடுமைத்தனம் என்னவென்டா நாங்கள் வாக்குப் போட்டு பாராளுமன்றம் அனுப்பினவியள், எங்கள் இனத்தின் விடுதலைக்காக பாடுபடுவினம் என்று நாங்கள் நினைச்சு பாராளுமன்றம் அனுப்பவியள் சொல்லி கூட்டத்திற்கு வந்த பொது மக்களை பரிசோதனை செய்ததற்குப் பின்பு தான் கூட்ட மேடைக்கு விட்டிருக்கினம். இதைவிட கொடுமைத்தனம் ஒண்டு வேணுமோ. ஆமிகாம்புக்கு 500 மீற்றர் தூரத்திலேயே சைக்கிளாலை இறக்கி ஆமி ஐசி, நஷனல் ஐசி எடுத்துக்கொண்டு நடந்து வந்து காட்டிட்டு திரும்ப 500 மீற்றர் நடந்து அங்காலை சைக்கிள்ள ஏறிப்போனதொரு காலம்.

அது அப்ப அவையள். இது இப்ப இவையள். அவையளுக்கும் இவையளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கு. இதை தமிழ் மக்கள் புரிந்து கொண்டால் சரி.

## சிந்தி செயற்படு

என் இனிய
இளைய தலைமுறையே!
உங்களுடன் ஓர் நிமிடம்
கும்மாளமிட்டு குதித்து விளையாடும்
செம்மாந்த சிட்டுக்களே...
உங்கள்
மனமும் அறிவும்
மயங்கும் பருவமிது
இளமைப் பட்டறை இது
கருக்கும் வலிமைகொண்ட
கொதிக்கும் இரும்புக் குழம்பு
இங்கே...
வெற்றுக்காகிதத்தாள்கூட
வேதமாகி விடும்
பணிவும் திமிரும்
அடக்கமும் செருக்கும்
நாணமும் ஆசையும்
லட்சியமும் பாதுகாப்பும்
ஒன்றில் ஒடுங்கி...
ஒன்றில் மயங்கி...
ஒன்றித் திரியும்
உற்சாக பயணமிது
இயந்திர உலகின்
சமூக வலைப்பின்னலுக்குள்
இலத்திரனியலின் இறுக்கத்திற்குள்
சிக்கி...
இறுமாந்திருக்கும் உனக்கு
நல்லதை கெட்டதை...
பகுப்பாய்வு செய்யும்
பக்குவம் சத்தியமாக இல்லை
உன் அடையாளத்தை...
இனங்கண்டுகொள்
இந்தப் பிரபஞ்சத்திலே...
உனக்கும் ஒரு பங்குண்டு
உரிமையோடு எடுத்துக்கொள்

வேலணையூர்
மயிலைக்கிளி






## யாசிக்கிறேன்

அலையின்ற அலங்கவளை அதிசயித்து
பார்த்தேன் அங்கோரிடத்தில்
ஊதல் காற்று உடலை வருடி
உசுப்பேற்றிய போதும்
இளமைத் தனிமை எனை மிரட்டி
வாட்டிய போதும்
எழுவல் பலர் கூடி எனை நகையாடி
இன்புற்ற போதும்
ஆடவையில் கண்ட இணைபாயிழையை
ஆரமிட்டு அரவணைக்க
இட்டிடை பலகண்டு
ஓதனம் உகர்னா கமையின்றி
எதிக்கோலம் பூண்டு அயை வரச கூறி
இரவு நேர நிலவினிடம்
யாசிக்கின்றேன் அவள் துணையை

ரீ.விஜிதா
மயிலிட்டி

## சொல்லாத சங்கதிகள்

ஓலைக்குடிலில்
ஒய்யாரமாய் வாழ்ந்த.
பொன்னான காலங்கள்
என்னவோ சொல்லாத சங்கதிகள்
குப்பி விளக்கில்
குவியாத கண்களுடன்
பக்குவமாக பசி மறந்து
கற்ற பொழுதுகள்
இற்றைக்கும் சொல்லாத சங்கதிகள்

பள்ளிக் காலங்களில்
பாசமுடன் குண்டர்களுடன்
பழகிய நிமிடங்கள் ஒவ்வொன்றும்
நம் நினைவலையில் என்றும்
சொல்லாத சங்கதிகள்

அனிப்புத் தங்கையுடன்
அடிக்கடி அடிபட்டு
அன்னையிடம் வாங்கிய அடிகள்
அத்தனையும் இக்கணத்திலே
சொல்லாத சங்கதிகள்

தாய் மண்ணை விட்டு
அந்நிய தேசத்தில் உழைத்து
தளர்ந்த உடலுடன்
தவியாய் தவித்த தருணங்கள்
சொல்லாத சங்கதிகள்

வறுமைப்பிடிக்குள் சிக்கி
வயிறு நிறைய சாப்பிட வாரந்தோறும் நிதம்
வாஞ்சையுடன் ஏங்கிய வருடங்கள் இன்றும்
சொல்லாத சங்கதிகள்


பீ.மேரிசிந்துஜா
மிருசுவில்

## சூடடிப்பு

வான் பார்த்து
நாள் பார்த்து
வரம்பு கட்டி
ஏர் எடுத்து
பார் பிளந்து உழவு செய்து
நாள் கோள் கூடி வர
கூடி நின்று விதைவிதைத்து
மந்த மழையினால்
பயிர் வளர்ந்து வந்துவிட
களை பறித்து காத்து நிற்க
நல்ல மழை பெய்யும்
வரப்புகள் உயர்ந்து நிற்க
நீரும் நிறைந்து நிற்க
பொத்திகள் கக்குமே
நெற்கதிர்கள் முற்றுமே
களம் பார்த்து
களத்தினிலே பேரீர் இட்டு
சுற்றிச் சுற்றி சூடடித்து
வைக்கோலை வேறாக்கி
பொலி பொலி சொல்லியே
பக்குவமாய் மணிசேர்த்து
வாழ்ந்த காலம் மாறிடவே
உழவென்ற பெயராலே
ஏதேதோ தான் செய்து
கால்படவே கலங்கும் தரையில்
இயந்திரத்தை தானிறக்கி
போருமில்லை வைக்கோலுமில்லை
பொலி பொலி வார்த்தையில்லை
சூடடிப்பு நடக்கிறது
நாசமாய்ப் போகிறது...

மாவை. நா.கஜேந்திரன்







# மௌனத்தின் தேடல்-- 386

## சந்தோசமாக இருக்கலாம்

சந்தோசமாக
வாழவேண்டும்
என்று நினைப்பதைவிட
நிம்மதியாக
வாழவேண்டும்
என்று நினை
அதனை செயற்படுத்து
உன் வாழ்க்கை முழுவதும்
சந்தோசமாக இருக்கலாம்

வி.கஜானன்
வடலியடைப்பு

## ஓர் கரம் ஓர் விரல் துணை

விழிகளிலே ஏக்கம்
மனதில் ஒரு தாக்கம்
எதை இழந்தாய்?
எல்லாவற்றையும் இழந்தாயா?
பசிக்கு உணவூட்டி
காலமெல்லாம்
உன் துணையாக்க
ஓர் கரம்- கரத்திலே
ஓர் விரலைப் பற்றிக்கொள்
நழுவவிடாதே

அபி குலமாலினா
சங்கானை

## என்று தணியும் இக்கொடுமை

முத்தான குழந்தை ஒன்று
பெற்றவளின் கைபிடித்து
சித்தம் கலங்கிய பசியோடு
செத்தாரைப் போலச் செல்கிறது
செத்துக்கொண்டிருக்கும் ஏழைகளின்
சொத்துக்களை அபகரிக்கும்
மெத்தப்படித்த மேதாவிகள்
மெத்தையில் படுத்துறங்கும்
வித்தைதனைப் பார்க்கின்றோம்
என்று தணியும் இக்கொடுமை
ஏழைகள் துயரம் நீங்கிடுமோ?

துரை
தென்மட்டுவில்

## யார் வருவார்?

பாசத்தின் பிணைப்பினிலே
பாரது ஓங்கி நிற்க
அன்னமில்லை
என்றொருவன்
அகிலத்தில் அலைந்திட
பாரதி எங்கே சென்றான்?
அவன் பெயரால்
பாடுகிறோம் கவிதனை
தனியொருவர்க்கு
உணவில்லையேல்
இந்த யுகத்தினை
அழித்திடுவோம்

கவிதா
யாழ்ப்பாணம்

## உன் கனவு உன் காலடியில்

அழு
நன்றாக அழுது தீர்த்துவிடு
உன் வேதனைகள் தீருமட்டும்
நன்றாக அழு
உன்
கூரிய பார்வையால்
நாளைய சமுதாயத்திற்கு
உயிர் கொடு
வீழ்ந்து போனது
உன் தப்பல்ல
வீழ்ந்த இடத்தில் கிடப்பதே
உன் தப்பு
எழுந்து விடு
எட்டிய கரம் பற்றி எழுந்துவிடு
உலகம் உன்னைத்
திரும்பி பார்க்கும்
மலரும் உன் கனவுகள்
உன் காலடியில்

ஆர்.எஸ்.ஆனந்தன்
தும்பளை

## விடியல் வரை

தொலையாத
துணை ஒன்றின்
கைபிடித்து
காணாமல்போன
உறவுகளை,
காணத்துடிக்கும்
இந்தக்
கண்களின் தேடல்
எதுவரை தொடருமோ

தேன்நிலா
நல்லூர்

## நடுநிலைமை

இத்தரணி போல்
மனித வர்க்கமும்
ஐம்பூதங்களின்
ஐக்கியத்தால்
உருவானது என்றும்
உண்மையை உணர்த்துவது
கைவிரல்கள்
ஐந்துமதான்
தடும்பத்தவராயினும்
பெருந் தலைவராயினும்
பெருவிரல் போல்
நடுநிலைமையை
கடைப்பிடித்தால்
பசிப்பிணியும்
தலைகாட்டாது

க.நாகராசா
நுணாவில்

# மௌனத்தின் தேடல் -387



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.02.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

**பி.கஜானி, கொக்குவில்.**

**சிறுகதை**

# குருட்டு நம்பிக்கை



பாடசாலை இடைவேளை மணி ஒலித்தது. மைதான வளாகத்தில் மாணவர்களிடையே அடிதடி சண்டை. சற்றுத் தொலைவிலிருந்து சண்டையைக் கண்ணுற்ற பிரதி அதிபர் நிலக்சனைக் கண்டித்து அதிபர் அலுவலகம் முன் முட்டிபோட விட்டார்.

நிலக்சன் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன். வீட்டிற்கு ஒரே பிள்ளை. அம்மாவிற்கு செல்லப் பிள்ளை.

பாடசாலை முடிவடைந்து நிலக்சன் வீட்டிற்கு வரும்போது வீட்டு வாசலில் அமளி துமளி. "சரோ உன்ர பிள்ளை எப்பவும் இப்படி. சப்போட் பண்ணாத. தம்பிட முகத்தைப்பார் எப்பிடி வீங்கி இருக்கெண்டு. ஒரே அயல். நாளைக்கு முகம் பார்க்கவேணும் எண்டுதான் இவ்வளவு பொறுமையாக கதைக்கிறன்" "அக்கா என்ர பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியும். அவன் யாரிடமும் வம்புக்குப் போகமாட்டான். ஏதோ ஒரு பிள்ளை எண்டு இப்பிடி செல்லம் கொடுக்காதே. நாளைக்கு இந்த நிலை வேற மாதிரி மாறிவரும்" என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டாள் பங்கயம்.

வீடு வந்த மகனிடம் அங்கு நடந்தவை பற்றி எதுவும் வினவாமல் " தம்பி சாப்பாடு போடுறன் சாப்பிட்டுப்போ" "சாப்பாடு வேண்டாம் 500 ரூபாய் காசு தா கடையில சாப்பிடுறன்" தன் கைத்தொலை பேசியை எடுத்து தனியார் கல்வி நிலையம் போவதாகச் சொல்லிப் புறப்பட்டான்.

" என்ன மச்சான் ஜஸ்ரினுக்கு நல்ல அடியாமே" "ஓமடா எப்ப பார்த்தாலும் ரீச்சரிட்ட போட்டுக் குடுக்கிறதுதான் வேலை. அதுதான் ரெண்டு போட்டன். இதோட அடங்குவான் என்று நினைக்கிறன்"



"உன்ர அடிக்கு அடங்காதவன் இருக்கிறானா?"

"சரி... சரி... அவன்ர கதையை விடு. நான் கேட்டது எப்ப வரும். நேரம் பொன்னானது. வாக்குத் தவறாம தந்த காசுக்கு நேர்மையா நட"

இரவு 8 மணியாகியும் வீடு வந்து சேராத மகனை எண்ணி வாசலில் பதகளிப்புடன் காத்து நின்றாள் சரோ.

"இதேபோக்கில போனா எங்க போய் முடியுமோ... என்ன நடந்தாலும் நீயே பொறுப்பெடு"

"சும்மா கண்டதையும் கதைக்காதீங்கோ... அவனுக்கு நைட் கிளாஸ் இருக்கும். அது முடியத்தான் வருவான்"

9 மணியளவில் வீடு வந்த நிலக்சன் தாமதமாக வந்த காரணம் ஏதும் கூறாதவனாய் தன் அறைக்குள் நித்திரைக்குச் சென்றான்.

திசை மாறிச் செல்லும் நிலக்சனின் வாழ்க்கைப் பயணமும் மெல்ல மெல்ல நகர்ந்தது. கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்கள் மத்தியில் நிலக்சனைப் போல் இருக்கும் ஒரு சில மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பாடசாலைச் சமூகம் தங்களாலான முயற்சியில் மேலதிக வகுப்புக்கள், பரீட்சைகள் வைத்து மாணவர்களை வளப்படுத்திய வண்ணம் இருந்தன. இவை எதையும் பொருட்படுத்தாது நிலக்சன் தன் கால்கள் போன திசை நோக்கி சென்று கொண்டிருந்தான்.

சாதாரணதர மாணவர்களுக்கான பெற்றோர் சந்திப்புக்கான கடிதம் நிலக்சன் வீடு நோக்கி வந்தது. கடிதத்தில் வந்த திகதியில் சரோ பாடசாலைக்குச் சென்றாள். பெற்றோர் சந்திப்பு ஆரம்பமாகியது.

"பெற்றோர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய திசை காட்டிகளாகத் திகழ வேண்டும். இன்றைய நடைமுறைச் சமூகம் செல்லும் திசையறியாது சென்று கொண்டிருக்கிறது. இன்றைய மாணவர்கள்தான் நாளைய சமூகத் தலைவர்கள். நமது சமூகத்தின் ஒளி விளக்குகள். அவர்களை சுடர்விட்டு பிரகாசமாய் எரிய வைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களினுடையது"

அதிபர் தனது உரையைச் சிறப்பாகச் சொல்லி முடித்தார். அவர் கூறியது அனைத்தும் உண்மையே என்று அங்கிருந்த பெற்றோர்கள் தமக்குள்ளே பேசிக் கொண்டிருந்தனர். கூட்டம் நிறைவடைந்ததும் நிலக்சனின் வகுப்பாசிரியர் சரோவைச் சந்தித்துப் பேசினார்.

" அம்மா! உங்கள் பிள்ளையின் பாடசாலை வரவு சரியான குறைவாய் இருக்கு... இப்ப இருக்கிற சூழலில கம்பஸ் பட்டத்தைக் கையில எடுத்தும் வேலையில்லாம வீதியில நிக்கிறாங்க... ஆனா உங்கட பிள்ளை சாதாரண தரம் சித்தியடைவது கஷ்டம் போல இருக்கு... அவன்ர படிப்பில கவனம் எடுங்கோ... முதல்ல ஒழுங்கான பழக்கவழக்கம் சொல்லிக் குடுங்கோ..."

" இல்லை ரீச்சர் அவன் வீட்டிலையே நிக்கிறதில்லை. ஒரே படிப்பு படிப்பு என்று வகுப்புக்குப் போவான். இரவு எல்லாம் கதவைப் பூட்டிப்போட்டு இருந்து படிப்பான். அறைவிளக்கு நிப்பாட்ட 11 மணியாகும். தம்பிக்கு கிரகம் சரியில்லை. அதுதான் இப்படியெல்லாம் ஆட்டிப் படைக்குது"

" அம்மா! பிள்ளைகள் வீட்டிலை ஒரு மாதிரியும் வெளியில ஒரு மாதிரியும் இருப்பாங்க. அவங்க வயசும் இப்ப இருக்கிற சமூக சீர்கேடுகளும்தான் இப்படியெல்லாம் பாதை மாறிப்போக வழி சேர்க்கிறது. கதவைப் பூட்டிப்போட்டு அவன் போன் விளையாடுவான்... இல்லாட்டி நல்லா நித்திரை கொள்ளுவான். பிள்ளைகள் படிக்கும் போது நீங்கள் பக்கத்தில இருக்கோனும் இல்லாட்டி நல்ல சூழலில இருந்து படிக்க வைக்கவேணும்"

"சரி ரீச்சர்... அவன் படிக்கிறான்... வீட்டில என்னோட கூட நிறையக் கதைக்க மாட்டான். நான் இனிக் கவனம் எடுக்கிறன்"

வீட்டுக்கு வந்து தன் கணவரிடம் பாடசாலையில் நடந்தவை பற்றி எதுவும் கூறாது நிலக்சன் வந்தவுடன் அறிவுரை கூறினாள். ஆனால் அவனோ தன் தாய் தன்மீது கொண்ட அதீத பாசத்தையும் நம்பிக்கையையும் சாதகமாக்கிக்கொண்டு தன் திசையறியா பாதை வழி சென்றான். ஒருநாள் சரோ தன் கணவருடன் திருமண வீட்டிற்குச் சென்று வரும் வழியில் கூச்சல் சத்தமும் இளையோர் கூட்டத்தினரின் அடாவடித்தனமுமாய் இருந்தது.

" இந்த நாடு எங்க போகுது... இவங்கள் அடிக்கிற கூத்தப் பாருங்கோ... இதையெல்லாம் கேட்க யாருமில்லையா..." என்று சொல்லியபடி இளைஞர் கூட்டத்திற்கு அருகில் சென்றாள் சரோ.

உலகமே கணப்பொழுதில் இருண்டது போல் திகைப்படைந்தாள். வார்த்தைகள் மௌனித்தவளாய் சுற்றும் முற்றும் பார்த்து தன் கணவரின் கரங்களை இறுகப் பற்றி தன் வீடு நோக்கி நகர்ந்தாள்.

ஆசையாய்ப் பெற்று வளர்த்து அன்பெனும் வேதத்தினால் அடிமைப்பட்ட தாயவள் தன் பிள்ளை நினைத்ததெல்லாம் செய்து கொடுத்து கடவுளின் வரமாய் வளர்த்த மகன் திசைமாறிப் போக அவன் மீது தான் வைத்த குருட்டு நம்பிக்கையே தவறு செய்யக் காரணமாய்ப் போனதே தன் பிள்ளை தவறு செய்யமாட்டான் என்ற வைராக்கியத்துடன் இருந்த தாயவள் வீதியிலே நின்று அட்டகாசம் செய்த இளைஞர் பட்டாளத்தில் தன் மகனும் ஒருவனாய் நிற்கின்றான் என்பதை எப்படி ஏற்றுக்கொள்வாள்.

வயதுக்கு மூத்த சிநேகிதர் கூட்டத்துடன் வாயிலே கஞ்சா, கையிலே பியர் போத்தலுடன் நிலக்சன் வீதியில் நின்று செய்த அடாவடியில் அருகில் தன் பெற்றோர் நிற்பது கூடத் தெரியாது போதையில் தள்ளாடியதை பார்த்து திகைத்து நின்றாள் அந்தப் பேதைத்தாய்.

" இப்பவாவது தெரிஞ்சுதா உன்ர பிள்ளை மேல நீ வைச்ச அளவு கடந்த நம்பிக்கை எங்க கொண்டு போய் விட்டிருக்கெண்டு... இனி அழுது என்ன பயன்? இனியும் காலம் இருக்குது. எங்கட பிள்ளைய கண்பார்வையில வைச்சு கண்டிப் போட வளர்ப்போம்" என்று ஆறுதல்படுத்தினார் சரோவின் கணவர்.

இரவு 9 மணியளவில் வீடு வந்த நிலக்சனிடம் சரோ வீதியில் தான் கண்ட காட்சியைக் சொல்லி கண்ணீர் மல்க கண்டித்தாள். நிலக்சனும் தான் செய்த தவறுகளை உணர்ந்தவனாய் தன்னைச் சூழ்ந்த சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாய் கல்வியைத் திறம்படக் கற்று இன்று உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவைத் தெரிவு செய்து வங்கியாளராக வரவேண்டுமென்ற இலட்சியக் கனவுடன் தன் கல்வியைத் தொடர்கிறான்.

இதுபோலத்தான் இன்றைய நமது வருங்காலச் சந்ததியினர்மீது பெற்றோர்கள் வைக்கும் அளவு கடந்த குருட்டு நம்பிக்கைதான் இளையோர் கூட்டத்தினரது திசை மாறிய பாதைகளுக்கும் அடித்தளமாய் அமைந்து விடுகிறது.

# கச்சதீவை மீட்டுத் தந்தால் எல்லை மீறமாட்டோம்

## -இந்திய மீனவர்கள்-

‘தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்’

கடந்த 35 ஆண்டுகளாக மாறாத செய்தி இது. இப்போது இந்தத் துயரத்துடன் இன்னும் சில விடயங்களும் சேரப்போகின்றன. இனிமேல் எல்லை தாண்டி இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை, அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் வரை சிறையில் அடைக்க முடியும். படகுகளைப் பறிமுதல் செய்து, இலங்கை நாணய மதிப்பில் 60 இலட்சம் ரூபாய் முதல் 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்க முடியும். படகுகளின் நீளத்தைப் பொறுத்து இந்த அபராதத்தின் அளவு இருக்கும்

ஜனவரி 24 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புதிய சட்டம்தான் இப்படிச் சொல்கிறது. ‘இந்தச் சட்டம் தமிழக மீனவர்களுக்குப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கும்’ என்று பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கடிதம் அனுப்பியுள்ளார்.



சேசுராஜ் செந்தில்வேல்

காவிரி டெல்டா விவசாயிகளுக்குத் தீராத பிரச்சினையாக காவிரி நதிநீர் இருப்பது போல், வங்கக்கடலின் கடலோர மாவட்ட மீனவர்களுக்குத் தீராத பிரச்சினையாக இலங்கை இருந்து வருகிறது. நீண்ட கடற்பரப்பைக்கொண்ட தமிழகத்தில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுச்சேரியின் காரைக்கால் பகுதி மீனவர்கள் வங்கக் கடலில் உள்ள பாக்குநீரிணைப் பகுதியையே தங்களின் வாழ்வாதாரமாக நம்பி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதியில் பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் தமிழக மீனவர்களை 2009ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளின் பெயரால் துன்புறுத்தி வந்தது இலங்கை கடற்படை. புலிகளின் மறைவுக்குப் பின், இப்போது தமிழக மீனவர்களின் உடைமைகளையும் முழுமையாக அபகரிக்கும் திட்டத்துடன் சட்டம் நிறைவேற்றியுள்ளது இலங்கை.



ஏற்கனவே மீன்வரத்துக் குறைவு, டீசல் விலை உயர்வு போன்றவற்றுடன் இலங்கை கடற்படையினரின் அடக்குமுறைகளையும் சந்தித்து வந்த மீனவர்களை, ‘இனி இழப்பதற்கு ஏதுமில்லை’ என்ற நிலைக்குத் தள்ளியிருக்கிறது இந்தப் புதிய சட்டம். இதுகுறித்து நம்மிடம் பேசிய அனைத்து மீனவர் சங்கச் செயலாளர் சேசுராஜ், “இனி கடலில் கால் வைக்கவே கூடாது என்ற நிலைக்கு எங்களைத் தள்ளியிருக்கிறது இலங்கை அரசின் சட்டத் திருத்தம். இந்தச் சட்டத்தைத் திரும்பப்பெற மத்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும் அல்லது கச்சதீவை எங்களுக்கு மீட்டுக் கொடுக்க வேண்டும். நமது கடல் பகுதியான 12.5 கடல் மைல், பாறைகள் மிகுந்த பகுதியாக இருக்கிறது. கச்சதீவை மீட்டால், பாறை இல்லாத 10 கடல் மைல் பரப்பு எங்களுக்குக் கிடைக்கும். அதன் பின்னர் நாங்கள் எல்லை தாண்டிச் செல்லும் அவசியம் இருக்காது. நிம்மதியாக மீன்பிடிக்க எங்களுக்கு உரிமையான பகுதியை மீட்டுத் தரத்தான் கேட்கிறோம். யாரிடமும் நாங்கள் பிச்சை கேட்கவில்லை” என்றார்.

தமிழ்நாடு மீன்பிடித் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் செந்தில் வேல், “கடந்த காலங்களில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படும் நம் மீனவர்களையும், அதேபோல் இந்தியக் கடற்படையால் கைது செய்யப்படும் இலங்கை மீன வர்களையும் இருநாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தி உடனுக்குடன் விடுதலை செய்வது மரபாக இருந்து வருகிறது. அவர்களின் படகுகளையும் இப்படித்தான் விடுவித்தனர். இந்த நடைமுறையை உலகத்தின் பல நாடுகள் செய்து வருகின்றன. குறிப்பாக, இந்தியாவின் பகை நாடு என்று சொல்லக்கூடிய பாகிஸ்தான்கூட, இந்த நடைமுறையைப் பின்பற்றி வருகிறது.

ஆனால், இலங்கை அரசு சமீபகாலமாக இப்படிச் செய்வதில்லை. குறிப்பாக, மோடி ஆட்சிக்கு வந்த கடந்த மூன்றரை ஆண்டுகளில்தான் சிக்கல் அதிகமாகியுள்ளது. இப்போதுகூட, தமிழக மீனவர்களின் 187 படகுகள் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு, இன்னமும் மீட்கப்படாமல் அழியும் நிலையில் உள்ளன. இந்நிலையில், இலங்கை அரசு இதுபோன்ற சட்டங்களை இயற்றுவது தவறானது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பாதிக்கும். இலங்கை அரசின் இந்த அணுகுமுறையால், கடல் தாண்டி இங்குவரும் இலங்கை மீனவர்களும் சிரமத்திற்கு உள்ளாவார்கள். எனவே, மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, பாக்குநீரிணை கடல் பகுதியில் இருநாட்டு மீனவர்களும் சுமுகமான முறையில் மீன்பிடித் தொழில் நடைபெற வழிவகை செய்ய வேண்டும். மேலும், இலங்கை மீனவர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்தை விரைந்து செயற்படுத்த வேண்டும். தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திக் கடல் வளத்தை அழிப்பதை முற்றிலும் தடுக்க வேண்டும்” என்றார்.

இலங்கை அரசின் புதிய சட்டம் குறித்து இலங்கை மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவர் ஜஸ்டின், “எமது கடற்பரப்பினுள் நுழையும் தமிழ்நாட்டு மீனவத் தொழிலாளர்களைப் பாதிக்கும் எந்தச்சட்டமும் எங்களுக்கு ஏற்புடையதல்ல. படகு முதலாளிகளின் நெருக்கடியால்தான் அவர்கள் எல்லை தாண்டி வருகிறார்கள்.

எல்லை தாண்டுதலுக்குப் படகு உரிமையாளர்களைப் பொறுப்பேற்கச் செய்யும் வகையில் இலங்கை அரசு சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். ‘பிடிபடும் தமிழ்நாட்டு மீன்பிடித் தொழிலாளிகளைச் சிறையில் அடைக்காமல் அன்றைய தினமே விடுவிக்க வகை செய்யவும், எல்லை தாண்டியதற்கான தண்டத்தைப் படகு உரிமையாளரே செலுத்தும் வகையிலும் சட்டத் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்’ எனக் கேட்டு எங்கள் கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்துப் பேசவுள்ளோம். தமிழ் நாட்டு மக்கள் எங்களுக்குச் செய்த உதவியை நாங்கள் சாகும்வரை மறக்கமாட்டோம். தற்போது பிடித்து வைத்துள்ள அனைத்துப் படகுகளையும் விடுவிக்க அரசு முடிவு செய்தால் நாங் கள் தடுக்க மாட்டோம். புதிய சட்டத்துக்குப் பிற்பாடு பிடிபடும் படகுகளை விடுவித்தால் மட்டுமே எதிர்ப்பு தெரிவிப்போம்.


குறைந்துவரும் இரு நாட்டு மீன்வளத்தையும் அழிக்கும் வகையில் செயற்படும் இரட்டைமடி, இழுவலை போன்றவற்றைப் பயன்படுத்தாமல் இருநாட்டு மீனவர்களும் பரஸ்பரம் மீன்பிடிப்பு செய்வதில் எங்களுக்குப் பிரச்சினை ஒன்றுமில்லை. எங்கள் பகுதியில் காலநிலை மாற்றத்தால் மழை பெய்யாமல், விவசாயம் செய்தவர்களெல்லாம் இப்போது மீன்பிடித் தொழிலுக்கு வந்துவிட்டனர். இதனால் நாங்களும் நெருக்கடியுடனேதான் வாழ்கிறோம். என்றாலும் எதிர்காலச் சந்ததியினரின் நலனுக்காக மீன்வளத்தைப் பாதுகாக்கும் கடமை மீனவர்களான எங்களுக்கு இருக்கிறது. இதை எங்களின் தொப்புள் கொடி உறவுகள் புரிந்து கொள்ள வேண்டும்” என்றார்.

தங்க முட்டையிடும் வாத்தை அறியாமையால் அழிக்க நினைப்போருக்கு அதிகபட்ச தண்டனை கொடுக்காமல், அவர்களுக்கு உணர்த்தும் பணியில் இலங்கை அரசு ஈடுபட வேண்டும். இதை இந்திய அரசும் இலங்கையிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

-ஜூனியர் விகடன்-



# ராஜீவ் கொலை உத்தரவிட்டது யார்? உடையும் மர்மங்கள்



## விறு விறு தொடர் 04

புலிகள் தயாரித்த பெல்ட் பாமைக் கண்டுபிடித்து விட்ட பெருமிதத்துடன் சி.பி.ஐ அதிகாரிகள் காணப்பட்டார்கள். ஆனால், "இது பெல்ட் பாம் அல்ல. ஜாக்கெட் ஹோல்ஸ்டர்" என்று நான் சொன்னதும் என்னை அவர்கள் அடித்தார்கள்.

புலிகளின் சிறப்புப் படைப்பிரிவு போராளிகள், 'நடந்து செல்லும் வழியில் நிறையப் பொதிகளைச் சுமக்க வசதியாக இருக்கும்' என்பதற்காக 'ஜாக்கெட் ஹோல்ஸ்டர்' அணிந்தார்கள். இது சாதாரண ஒன்றுதான். ஆனால், ஏதோ முதன்முதலாக 'ஸ்ரீபெரும்புதூர் நடவடிக்கைக்காக" என்றே இந்த ஜாக்கெட்டை வடிவமைத்தார்கள் என்பதுபோல் சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக்குழு ஒரு 'கதை'யைக் கட்டியது. இதை நான் மறுத்து உண்மையைச் சொன்னதுதான் அவர்களது கோபத்துக்குக் காரணம்.

அவர்கள் கையிலிருந்த புகைப்படத்தைக் காட்டி, "பெல்ட்பாம் இப்படித்தான் செய்யப்பட்டது. இல்லையா?" என்றார்கள்.

"தெரியாது. நான் எந்த பெல்ட்பாமையும் பார்த்ததில்லை" என்றேன்.

"சரி. உனக்குத் தெரியாதென்றே வைத்துக் கொள்வோம். இந்தப் படத்தில் உள்ளவாறு வெடிகுண்டு செய்ய முடியுமா, முடியாதா?"

"ம்... தியரிப்படி செய்ய முடியும்!"

ஒரு வெள்ளைத்தாளை என்னிடம் நீட்டி, "எங்கே... இதில் படம் வரைந்து காட்டு" என்றார்கள். வரைந்து கொடுத்தேன். அதை எடுத்துக்கொண்டு தியாகராஜனைப் பார்க்கச் சென்றார்கள்.


நீண்ட ஆலோசனைக்குப் பிறகு இரு அதிகாரிகளும் திரும்பி வந்தார்கள். கூடவே பென்சில், பேப்பர், ஸ்கேல், ரப்பர் ஆகியவற்றைக் கொண்டு வந்தார்கள். அவற்றைக் கொடுத்து, "முன்பு பேனாவால் வரைந்ததையே இன்னும் தெளிவாக, அழகாக வரைந்து பாகங்களைக் குறித்து வை. திரும்ப வருகிறோம்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

பிற்பகல் இரண்டு மணிவாக்கில் திரும்பி வந்தார்கள். ரமேஷ் கையில் ஒரு மினி டேப் ரெக்கார்டர். தன்மையாக என்னிடம், "இந்த பெல்ட் பாமை எப்படிச் செய்வதுன்னு நீ சொன்னது சரியா விளங்கல. அதனால, தெளிவா நிறுத்தி நிதானமாச் சொல்லு. கேட்டுத் தெரிந்து கொள்கிறோம்" என நீட்டினார்கள்.

'ஓ... கடைசியில் இதுதான் திட்டமா? நான்தான் இதைச் செய்ததாக ஒப்புக்கொள்ள வைக்க நினைக்கிறீர்களா? இதற்குத்தான் இத்தனை சித்திரவதைகளா?'

பட்டென்று புரிந்து போனது அவர்களின் திட்டம். இலங்கை, தெற்காசிய நாடுகள், வளைகுடா நாடுகள், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா என உலகின் பல நாடுகளுக்கும் சென்று கண்டுபிடிக்கத் தவறிய 'பெல்ட்பாம்' விடயத்தை இப்போது என் தலையில் கட்டப் பார்க்கிறார்கள்.

என்ன செய்ய முடியும்? கோடியக்கரை சண்முகம் தூக்கில் தொங்கி இறந்ததற்குப் பிறகு நான் முரண்டு பிடித்துக் கொண்டிருக்க முடியாது என்பதே உண்மை. தவிர, அப்போது எஞ்சியிருந்த என் 'மனநிலையே' வேறு. படுத்துத் தூங்க வேண்டும் அல்லது, இறந்து போய்விட வேண்டும். இரண்டு மற்ற போதை நிலையில் பிதற்றிக் கொண்டிருந்தேன். அதனால் 'விட்டால் போதும்' என்ற முடிவுக்கு வந்து நின்றேன்.



" ஒரு வெள்ளைத்தாளை என்னிடம் நீட்டி, "எங்கே... இதில் படம் வரைந்து காட்டு" என்றார்கள். வரைந்து கொடுத்தேன். அதை எடுத்துக்கொண்டு தியாகராஜனைப் பார்க்கச் சென்றார்கள்.

நீண்ட ஆலோசனைக்குப் பிறகு இரு அதிகாரிகளும் திரும்பி வந்தார்கள். கூடவே பென்சில், பேப்பர், ஸ்கேல், ரப்பர் ஆகியவற்றைக் கொண்டு வந்தார்கள். அவற்றைக் கொடுத்து, "முன்பு பேனாவால் வரைந்ததையே இன்னும் தெளிவாக, அழகாக வரைந்து பாகங்களைக் குறித்து வை. .திரும்ப வருகிறோம்" என்று சொல்லி விட்டுப் போனார்கள். "

அவர்கள் கேட்டபடி வரைந்து கொடுத்து, டேப் ரெக்கார்டரிலும் பேசிக் கொடுத்து விட்டேன். 'எனக்கான தூக்குக் கயிற்றை நானே மாட்டிக்கொண்டேன்' என்பது தெரியாமலேயே!

KP என்கிற குமரன் பத்மநாதன், விடுதலைப் புலிகளின் படைக்கலக் கொள்முதல் பிரிவுப் பொறுப்பாளர். உலகம் சுற்றிக் கொண்டிருந்தவர். 2002 ஆம் ஆண்டு வாக்கில் அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது. அதனால் 'பொறுப்பை' பறித்து, புலிகள் கட்டமைப்பிலிருந்து அவரை ஓரம்கட்டியிருந்தார்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இந்த KP-யும் முக்கிய குற்றவாளி என்றது சி.பி.ஐ. அவர்தான் பெல்ட்பாமை அனுப்பியிருக்க வேண்டும், அல்லது இந்தியாவுக்கே கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போயிருக்க வேண்டும் என்று சந்தேகித்தார்கள். இதனால், 'இந்தியாவால் தேடப்படும் முக்கிய குற்றவாளி' எனச் சர்வதேச காவற்றுறை (இன்டர் போல்) அறிவிப்பு வெளியிட்டது. ஆனால் 'KP' அகப்படவேயில்லை!

2009 மே 18 அன்று முள்ளிவாய்க்கால் இறுதிச் சண்டையில், 'விடுதலைப் புலிகளின் தலைமை' ஏறக்குறைய வீழ்ந்து மறைந்து போனது. அதன் பிறகு 'KP' தன்னை விடுதலைப்புலிகளின் புதிய தலைவராக அறிவித்துக்கொண்டார். ஆனால், அப்போது அவர் 'இந்திய-இலங்கை' உளவுப் படைகளின் 'முகவராக' (Agent) இருந்தார் என்பதே உண்மை.

சுமார் இரண்டு மாதங்களுக்குப்பின் மலேசியாவில் 'கைது நாடகம்' ஒன்று அரங்கேற்றப்பட்டு, KP கொழும்பு அழைத்துச் செல்லப்பட்டார். இலங்கை அரசின் விருந்தினர் மாளிகை ஒன்றில் 'வீட்டுக் காவல்' என்ற போர்வையில் வைக்கப்பட்டார். அங்கிருந்தவாறே விடுதலைப்புலிகளின் அயல் நாட்டுக் கட்டமைப்பை உடைத்தெறியும் வேலையை இந்திய - இலங்கை உளவு நிறுவனங்களோடு சேர்ந்து ஒருங்கிணைத்தார்.

அந்தப் பின்னணியில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழுக்கு KP ஒரு பேட்டியளித்தார். அதில் ராஜீவ்காந்தி கொலை விவகாரம் தொடர்பான சில தகவல்களையும் வெளியிட்டிருந்தார். அதன் சாரம்...

"இந்திய அதிகாரிகள் என்னை 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை சந்தித்துப் பேசினார்கள். ராஜீவ்காந்தி கொலைச் சதி குறித்து விசாரிக்க சி.பி.ஐ. தலைமையில் அமைக்கப்பட்ட பல்நோக்கு கண்காணிப்புக் குழு (MDMA) அதிகாரிகள், 2010இல் என்னைச் சந்தித்தனர். அது ஒரு 'நேர்காணல்'தான். விசாரணை அல்ல! இலங்கை பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் அப்போது உடனிருந்தார்கள். ஆனால் அவர்கள் வெறும் 'பார்வையாளர்கள்' மட்டுமே.

இந்தியக் குழு முதலில் தெரிந்துகொள்ள விரும்பியது, 'ராஜீவ்காந்தி கொலை பற்றி முன்கூட்டியே எனக்குத் தெரியுமா?' என்பது. எனக்குத் தெரியாதென்றும், சம்பவம் நடந்தபோது நான் இந்தியாவில் இல்லை என்றும் பதிலளித்தேன். அடுத்ததாக, 'அந்த நடவடிக்கைக்கு நான் நிதி வழங்கினேனா?' என்பது. அதையும் மறுத்தேன்.

கடைசியில், பெல்ட்பாம் மற்றும் சிவராசன் வைத்திருந்த துப்பாக்கி குறித்துக் கேட்டனர். 'இரண்டையும் நான் வாங்கித் தந்தேனா?' என்பது கேள்வி.

நான் 'இல்லை' என்றேன். 'RDX வெடி மருந்தை இந்தியாவிலேயே வாங்க முடியும். எனக்குத் தெரிந்தவரை பெல்ட்பாம் வெளிநாட்டில் வாங் கப்படவில்லை. அது ஒர் உள்ளூர்த் தயாரிப்பு' என்றேன். என் கருத்தை அவர்களும் ஆமோதித் தார்கள் என்றே சொல்லலாம்.

தொடரும்

ஜூனியர் விகடன்


# அமிலச் சோதனையாக அமையப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

**சண்.தவராஜா**

இலங்கைத் தமிழர்களின் நடப்பு அரசியல் தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான மோதலாகவே உருமாறி உள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வந்து, ஈழத் தமிழர் அரசியல் அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வகிபாகம் ஓய்வு நிலைக்கு வந்ததை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஈழத் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் சக்தியாக விளங்கும் என்ற எதிர்பார்ப்பு ஒரு சில வருட காலம் நீடித்தது.

அத்தகைய எதிர்பார்ப்பில் மாற்றம் உருவாகக் கூடும் என்பதற்கான அறிகுறிகள் அண்மையில் கட்சியில் ஏற்பட்ட பிளவுகள், அதிருப்திகள் ஊடாக வெளிப்பட்டு, விவாதப் பொருளாக மாறியுள்ள சூழலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் முடிவிற்கு வருகிறதா என்ற ஐயம் இன்று உருவாகி உள்ளது.

காலத்துக்குப் பொருத்தமானது எதுவோ அது இயல்பாகவே தோற்றம் பெறும் என்பது இயங்கியல் விதி. மிதவாத அரசியல் காலாவதி ஆகியமையையும், அது தீவிரவாத அரசியலால் நிரப்பப்பட்டதையும் எம் வாழ்நாள் காலத்தில் தரிசித்தவர்கள் நாம். 2009 ஆம் ஆண்டிற்குப் பிந்திய சூழலில் ஈழத் தமிழர் அரசியலில் ஒரு தேக்கம் ஏற்பட்டாலும் கூட, அந்த அரசியல் வெற்றிடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கச்சிதமாக நிரப்பி இருந்தது. இன்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கும் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வல்லமை பற்றியும் அதன் பின்னணியில் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித்தேர்தல் பற்றியும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.



2001 ஆம் ஆண்டில் தமிழ்க் கட்சிகளின் ஒருங்கிணைப்பு என்ற கருத்துருவாக்கம் கிழக்கு மண்ணில் ஏற்பட்ட காலகட்டத்தில், தமிழர் தரப்பு பல்வேறு அரசியல் கட்சிகளாகப் பிளவுண்டு கிடப்பதால் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய பிரதிநிதித்துவம் வீணாகப் பறிபோகிறது, அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற ஆதங்கமே மேலோங்கி இருந்தது. 'அக்கினிக் குஞ்சாகத் தோன்றிய அந்தப் பொறி வெகு சீக்கிரத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தோற்றம் பெற்று, விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்துடன் மிகப் பாரிய அரசியல் கட்டமைப்பாகப் பரிணமித்தது. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக தேர்தல் அரசியலில் தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற கட்சியாகவும் அது விளங்கியது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் எதிர் நிலை கொண்டுள்ளமை எந்த விளைவைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த விளைவையே தோற்றுவிக்கும் அபாயத்திலேயே உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்ற காலகட்டத்தில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அதிகாரமானது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கைகளில் இருந்தது. ஆனால், இன்று 2009 ஆம் ஆண்டிற்குப் பிந்திய சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளிலேயே ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம் இருந்து வருகின்றது. அத்தகைய அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கமும், சர்வதேச சமூகமும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் தொடர்புகளைப்பேணி தமிழர் விவகாரத்தைக் கையாண்டு வருகின்றன. தற்போதைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இருந்து அரசியல் அதிகாரம் பறிக்கப்படுமாயின் அது தற்போதைய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகளில் நிச்சயமாக எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்தும். அது தமிழ் மக்களுக்கு சிரமம் தரும் செய்தியே.

இவ்வாறு பறிக்கப்படும் அரசியல் அதிகாரமானது பிறிதொரு தமிழ்க் கட்சியிடம் தெளிவான மக்கள் ஆணையூடாகக் கைமாற்றம் செய்யப்படுமானால் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அதிகாரத்திற்கு பங்கம் இல்லாமற் போகலாம். ஆனால், அது சாத்தியமா?

இந்த இடத்தில் மிக முக்கியமான ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டி உள்ளது. மாறி மாறி பதவிக்கு வரும் சிங்கள இனவாத அரசாங்கங்கள் தமிழ் மக்களுடன் அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் தொடர்ச்சியாகப் பின்னடித்தே வருகின்றன. அவைகள் விரும்புவதெல்லாம் பேரம் பேசும் மேசையில் தமிழர் தரப்பு மிகப் பலவீனமாக இருக்க வேண்டும் என்பதையே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்ற காலங்களில் தேர்தலில் வெற்றிவாகை சூடியிருந்திருக்காமல் விட்டிருந்தாலும்கூட, அது தமிழ் மக்களின் அரசியல் அதிகாரத்திற்குப் பங்கத்தை உருவாக்கி இருந்திருக்காது. ஏனெனில், அப்போதைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் அதிகாரமானது மிகத் தெளிவாக விடுதலைப் புலிகளின் கைகளிலேயே இருந்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் தமிழர்களின் அரசியல் அதிகாரத்துக்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் சிந்திக்கக் கூடும்.

உள்ளூராட்சி மன்றங்கள் வழக்கத்தில் மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டவையே. இவை அரச இயந்திரத்தின் செயற்பாட்டை வினைத்திறன் உள்ளவையாக மாற்றி மக்களுக்கான சேவைகளைப் பெற்றுத் தருகின்றவையே. அரசியல் கலப்பில்லாத மக்கள் மனதில் இடம்பிடித்த தனிநபர்களால் கூட இத்தகைய மன்றங்களை திறம்பட நிர்வகிக்க முடியும். ஆனால், அரசியல் கட்சி ஒன்றை பாரிய விருட்சமாக ஒப்பீடு செய்தால் அதன் வேர்களாக விளங்குபவர்கள் உள்ளூராட்சிமன்ற நிர்வாகிகளே.

எனவே, ஒரு கட்சி பலமுள்ள, மக்கள் செல்வாக்கு மிக்க கட்சியாக விளங்க வேண்டும் என்றால் உள்ளூராட்சிமன்ற நிர்வாகங்களைத் தம் வசம் வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இன்றைய நிலையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அதிகாரத்தைத் தம்வசம் வைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று தனது பேரம் பேசும் திறனை வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் தமிழ்க் கட்சிகள் மத்தியில் நிலவும் பிளவு காரணமாக இழக்கப்பட்டு விடாமல் இருப்பதை நிச்சயம் செய்து கொண்டே இதனையும் செய்ய வேண்டிய நிலையில் கூட்டமைப்பு உள்ளது.

எனவே, பெப்ரவரி 10 ஆம் திகதி தமிழர் தாயகத்தில் நடைபெறவுள்ள தேர்தலின் முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை ஒரு அமிலச் சோதனையாகவே இருக்கப் போகின்றது. இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு தோல்வியைத் தழுவுமாக இருந்தால் அல்லது எதிரணிகள் அதிகளவு சபைகளைக் கைப்பற்றுமாக இருந்தால்- அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் முடிவிற்கு வருகின்றது எனக் கொள்ளப்படலாம்.

மாறாக, கூட்டமைப்பு பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றுமாக இருந்தால் அந்தக் கட்சியைத் தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள், அந்தக் கட்சியின் கைகளில் உள்ள ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அதிகாரத்தை வேறு தரப்பினருக்குக் கைமாற்றித்தர தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்ற முடிவிற்கும் வரலாம்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்துக் களத்தில் நிற்கும் ஏதாவதொரு கட்சி பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றுமாக இருந்தால் அந்தக் கட்சி தமிழர்களின் அரசியல் அதிகாரத்தை தனது கரங்களில் ஏந்துகின்றது என்று பொருள் கொள்ளலாம். இரண்டில் எது நிகழப் போகின்றது என்பது பெப்ரவரி 10 ஆம் திகதி தெரிந்து விடும். தக்கன பிழைக்கும் தகாதன அழியும் என்பது இயற்கையின் நியதி. அது நிகழ்வதை யாராலும் தடுத்துவிட முடியாது.

# ஜனவரியில் ஏலம் நடந்தது நல்லது... ஏன்? ஐ.பி.எல். 2018... உள்ளே வெளியே என்ன நடக்கும்?

கடந்த சில ஆண்டுகளாக பெப்ரவரி மாதம் நடந்த ஐ.பி.எல் ஏலம், இந்தமுறை ஜனவரியிலேயே நடந்தது. ஏலத்துக்கே இந்த மாற்றம் ஏன் என்றும், இது சரிதானா என்றும் கேள்விகள் எழுந்தன. ஆனால், உண்மையில் ஏலம் நடத்துவதற்கு இதைவிடச் சிறந்த நேரத்தை பி.சி.சி.ஐ-யால் தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

வங்கதேசத்தில் முத்தரப்புத் தொடர், நியூசிலாந்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து தொடர், அதன் பக்கத்து நாட்டில் இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலியாவின் திண்டாட்டம், தென்னாபிரிக்காவில் இந்தியாவின் போராட்டம் என சர்வதேச அளவில் கிட்டத்தட்ட அனைத்து அணிகளும் இப்போது விளையாடி வருகின்றன. பிக்பேஷ் இருபது- 20 தொடர் மற்றுமொரு தேடுதல் வேட்டையாக அமைந்தது. போதாக்குறைக்கு அண்டர்-19 உலகக்கோப்பை, இளம் வீரர்களின் திறமையை அடையாளம் கண்டெடுத்திருக்கிறது. இந்தத் தொடர்கள், ஏலத்தின்போது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

டார்ஸி ஷார்ட் என்ற பெயர் திரையில் காட்டப்பட்டபோது, பெரும்பாலானவர்களுக்கு புதிதாகவே தெரிந்தது. அதுவரை சர்வதேச அரங்கில் கேள்விப்பட்டிடாத பெயர். கெய்ல், அம்லா போன்றவர்களெல்லாம் விற்கப்படாத நிலையில், இவரும் unsold பட்டியலில் சேர்வார் என்றுதான் எதிர்பார்த்தனர். ரூ.20 லட்சம்தான் அடிப்படை விலை. சி.எஸ்.கே, சன்ரைஸர்ஸ் இரண்டு அணிகளும் எடுத்த எடுப்பில் போட்டி போடத் தொடங்கின. லட்சத்தில் இருந்து கோடிக்குச் சென்றது ஷார்ட்-ன் மதிப்பு. ஒருகட்டத்தில் அந்த இரு அணிகளும் ஒதுங்கிக்கொள்ள, ராஜஸ்தான், டெல்லி அணிகள் களம் புகுந்தன. ஒரு சர்வதேசப் போட்டியில்கூட விளையாடாத ஒரு வெளிநாட்டு வீரருக்கு 4 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியது ராஜஸ்தான்.

அம்லா - 2017 ஐ.பி.எல் தொடரில் 2 சதங்கள் அடித்திருந்தார். ஆனால், இம்முறை விலைபோகவில்லை. காரணம், அவர் அந்தச் சதங்கள் அடித்து ஒரு வருடம் ஆகிவிட்டது. டிசெம்பர் மாதம் நடந்த தென்னாபிரிக்க இருபது-20 தொடரில் அவரது செயற்பாடு சுமார்தான். ஆனால், ஷார்ட்...? கடந்த ஒரு மாதமாக பிக்பேஷ் தொடரில் அவர்தான் டாப் ரன்ஸ்கோரர். 10 போட்டிகளில் 504 ரன்கள், ஸ்ட்ரைக் ரேட் 147.80, 22 சிக்ஸர்கள் என இந்த சீசனில் ராஜ்ஜியம் நடத்தி வருகிறார். அதனால்தான் அவ்வளவு போட்டி.

அடுத்து, ஷிவம் தூபே - மும்பைக்காரர். உள்ளூர் அளவில் 18 போட்டிகளில் மட்டுமே விளையாடியவர். எந்த அணியும் paddle உயர்த்தவில்லை. தூபே விலை போகவில்லை... அடுத்து ஜோஃப்ரா ஆர்சர்... லோயர் மிடில் ஆர்டரில் அதிரடி காட்டும் "டிபிகல்" வெஸ்ட் இண்டீஸ் ஆல்ரவுண்டர். 20 முதல்தரப் போட்டிகளில் மட்டுமே விளையாடியவர். சுப்பர் கிங்ஸ், டேர்டெவில்ஸ், கிங்ஸ் லெவன், சன்ரைஸர்ஸ், ராஜஸ்தான் என பலமுனைப் போட்டி. ரூ.50 இலட்சம் அடிப்படை விலையில் தொடங்கி ரூ. 7.20 கோடியில் நின்றது ஆர்சருக்கான போர். அடையாளமில்லாத வீரர்களுக்கு அடையாளம் கொடுக்கும் ராஜஸ்தான் அணிதான் இவரையும் வாங்கியது. 10 பிக்பேஷ் போட்டிகளில் 15 விக்கெட்டுகள். இந்த 15 விக்கெட்டுகளுக்குத்தான் 7.20 கோடி!

8 போட்டிகள் - 71 ரன், 5 விக்கெட்...2017 ஐ.பி.எல் தொடரில் இதுதான் ஷேன் வாட்சனின் செயற்பாடு. 36 வயதாகிவிட்டது. அவரது ராயல் சேலஞ்சர்ஸ் டீம் மேட் கெய்ல் சற்று முன்னர்தான் unsold பட்டியலில் இணைந்திருந்தார். ஆனால், இவருக்கோ முடிவு பாசிடிவாக அமைந்தது. 4 கோடி கொடுத்து வாட்சனை வாங்கியது சுப்பர் கிங்ஸ்! காரணம்...? அதே பிக்பேஷ் தொடர். இந்த ஒரு மாதத்தில் இவர் அடித்த 331 ரன்களும் 3 விக்கெட்டுகளும் தான். இவர்கள் மட்டுமல்ல, ஆண்ட்ரூ டை 7.20 கோடி வரை ஏலம் போனதற்குக் காரணம் பிக்பேஷ்! பென் லாலின், பில்லி ஸ்டான்லேக் போன்ற பெரிய அளவில் அறியப்படாத வீரர்கள் ஏலம் போனதற்கே பிக்பேஷ் தொடர்தான் காரணம்.

பிக்பேஷ் தொடர் ஒருபுறம் இவர்களுக்கான அடையாளத்தைக் கொடுக்க, அண்டர் 19 உலகக்கோப்பை இளம் வீரர்களை அடையாளப்படுத்தியது. ஒருவேளை இந்தத் தொடர் இப்போது நடக்காமல் இருந்தால், கப்டன் ப்ரித்வி ஷா (டெல்லி டேர்டெவில்ஸ் - 1.20 கோடி) மட்டுமே ஏலம் போயிருப்பார். ஆனால், இப்போது 5 இந்திய வீரர்களும் 2 ஆப்கானிஸ்தான் வீரர்களும் ஏலம் போயுள்ளனர். தொடர்ந்து 140+ கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசிய அசத்திய கமலேஷ் நாகர்கோட்டி (கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - 3.20 கோடி), விளையாடிய 3 இன்னிங்ஸ்களிலும் அரைச்சதம் அடித்து அசத்தியிருந்த சுப்மான் கில் (கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - 1.80 கோடி), நான்கு போட்டிகளில் 8 விக்கெட் வீழ்த்திய ஷிவம் மாவி (கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - 3 கோடி), 11 விக்கெட் வீழ்த்தியிருந்த ஸ்பின்னர் அனுகுல் ராய் (மும்பை இந்தியன்ஸ் - 20 இலட்சம்) ஆகியோரும் ஐ.பி.எல் அணிகளால் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அண்டர் 19 வீரர்கள் மட்டுமல்ல, ஆப்கானிஸ்தான் அண்டர் 19 வீரர்களும் ஏலத்தில் எடுக்கப்பட்டதுதான் இதன் சிறப்பு. பௌலர் ஜாஹிர் கான் - 60 இலட்சத்துக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணியால் வாங்கப்பட்டார். அஃப் ஸ்பின்னர் முஜீப் ஜத்ரான் - டெல்லி, பஞ்சாப் அணிகள் கடும் போட்டி போட, 4 கோடிக்கு ஏலம் போனார் இந்தப் பதினாறு வயது இளைஞர். ஐ.பி.எல் ஏலத்தை தலைப்புச் செய்திகள் நிர்ணயிக்கும் என்பதற்கு இதுவே மிகச்சிறந்த உதாரணம். ஒருவேளை வழக்கம் போல பெப்ரவரி மாதம் ஏலம் நடந்திருந்தால், ஜத்ரான் இந்த அளவுக்கு ஏலம் போயிருப்பாரா என்று தெரியாது. அப்போது நடந்துகொண்டிருக்கும் தொடரில் சாதித்துக்கொண்டிருக்கும் ஒரு பௌலரை வாங்கத்தான் ஐ.பி.எல் அணிகள் போட்டிபோட்டிருக்கும்.

இவ்வளவு ஏன்... இரண்டு நாள் இடைவெளி, ஒரு வீரரின் வாய்ப்பைத் தட்டிப் பறித்துவிட்டது. இஷான்போரெல் - இந்த வீரரின் பெயரை ரிச்சர்ட் மேட்லி அறிவித்ததும், அமைதியே நிலவியது. அதுவரை அண்டர் 19 உலகக் கோப்பையில் 2 போட்டிகளில் மட்டுமே விளையாடியிருந்தார் இஷான். 55 பந்துகள் மட்டுமே வீசியிருந்தார். விக்கெட் வீழ்த்தவில்லை. ஞாயிற்றுக்கிழமை அவர் விலை போகவில்லை. செவ்வாய் அதிகாலை... பாகிஸ்தான் அணியுடனான அரையிறுதி. அந்த அணியின் முதல் நான்கு விக்கெட்டுகளையும் தான் வீசிய ஆறாவது ஓவரிலேயே வீழ்த்தி ஆட்டத்தை அப்போதே இந்தியாவுக்கு வென்று கொடுத்திருந்தார். நாகர்கோட்டி, ஷிவம் மாவி ஆகியோரைப் போல் வேகம் இல்லை. ஆனால், நன்றாக ஸ்விங் செய்யத் தெரிந்தது. பட்ஸ்மன் எப்போது பொறுமை இழப்பார் என்பதை அறிந்து, லூஸ் பால் வீசி விக்கெட் எடுக்கத் தெரிந்தது. ஆனால், இவரைப் பற்றி ஐ.பி.எல் அணிகளுக்குத் தெரியவில்லை. காரணம்... ஏலத்துக்கும் இந்தப் போட்டிக்கும் இடையே இருந்த 2 நாள் வித்தியாசம்!

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் காலின் டி கிராந்தோம், மிட்சல் சான்ட்னர் ஆகியோருக்கு அணிகளைப் பெற்றுத் தந்தது. இஷ் சோதி - லெக் ஸ்பின்னர் வேறு. லெக் ஸ்பின்னர் என்பதனாலேயே இன்னும் அமித் மிஷ்ரா, பியூஷ் சாவ்லோ ஆகியோருக்கெல்லாம் கோடிகள் கொட்டுகிறார்கள். இவர் உலகின் நம்பர் 1 பௌலர் வேறு. ஆனால், ஏலம் போகவில்லை. காரணம், இந்த பாகிஸ்தான் இருபது-20 தொடர். இவர் பெயர் ஏலத்துக்கு வந்த 27 ஆம் திகதி, இந்தத் தொடரின் 2 போட்டிகள் முடிவடைந்திருந்தது. முழுமையாக 8 ஓவர்களும் வீசியவர் ஒரு விக்கெட் கூட எடுக்கவில்லை. 28 ஆம் திகதி மூன்றாவது இருபது20 போட்டி. 47 ரன் கொடுத்து 2 விக்கெட் (எகானமி : 11.75) வீழ்த்துகிறார். அன்று நடந்த மறு ஏலத்தில் யாரும் இவரை வாங்க முன்வரவில்லை.




உலகின் நம்பர் 1 இருபது-20 பௌலருக்கு, நம்பர் - 1 இருபது20 தொடரில் இடமில்லை. ஒருவேளை இந்தத் தொடர் இப் போது நடக்காமல் இருந்திருந்தால், முந்தைய பெர்ஃபாமன்ஸ்கள் அடிப்படையில் நிச்சயம் சோதி ஏலம் போயிருப்பார். (ம)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : எங்கள் தங்கம்
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா
வரிகள்: வாலி



தங்கப் பதக்கத்தின் மேலே - ஒரு
முத்துப் பதித்தது போலே - உந்தன்
பட்டுக் கன்னங்களின் மேலே - ஒன்று
தொட்டுக் கொடுத்திடலாமா - நீயும்
விட்டுக் கொடுத்திடலாமா

முல்லைப்பூ பல்லக்கு ஆடை சுமந்து
மெல்லத் தவழ்வது கண்டு - ஒரு
கோடி எண்ணம் ஆசை நெஞ்சில்
மின்னி மறைவதும் உண்டு
அழகு நடையைப் பழகும் சிலையை
அணைக்க வந்தேனே
இதழ்கள் பொழியும் அமுத மழையில்
மிதக்க வந்தேனே
(தங்கப் பதக்கத்தின் மேலே)

பட்டாடை தொட்டாடத் தென்றல் துணிந்து
பக்கம் நடந்தது என்ன - உயிர்க்
காதல் தலைவன் காவல் இருக்க
தொட்டு இழுத்தது என்ன
பனியில் நனையும் மலரின் உடலில்
குளிர் எடுக்காதோ
ஒருவன் மடியில் மயங்கும்பொழுது
சுகம் பிறக்காதோ
தங்கப் பதக்கத்தின் மேலே
கொத்தோடு முத்தாட வஞ்சிக் கொடியைத்
தொட்டு தொடர்வது என்ன? அந்தி
மாலைப் பொழுதில் காதல் நினைவைக்
கொட்டி அளப்பது என்ன?
ஊரும் உறவும் அறியும் வரையில்
கண்கள் மட்டோடு - மண
மாலை தோளில் சூடும் நாளில்
கைகள் தொட்டாடு
(தங்கப் பதக்கத்தின் மேலே)

பெரும்பாலும் விளம்பரம் என்றால் ஒரு பொருளை (அல்லது சேவையை) விற்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் சில நிறுவனங்கள் அதையும் ஒரு நல்ல விடயத்திற்காக பயன்படுத்தியுள்ளன.


முக்கியமான கருத்தை ஒரே புகைப்படத்தில் மக்களிடம் எளிதில் கொண்டு சேர்ந்துள்ளன. அப்படி வந்த சில புகைப்படங்களில் தொகுப்பு இதோ..




1. ஒரு சிறுவனின் செல்பி புகைப்படம் பார்ப்பவர்களை அதிர்ச்சியாக்கி யது. செல்பி புகைப்படத்திற்கு பின்னால் சிறுவர்களை கொடுரர்கள் சுட்டுக் கொல்லும் நிகழ்வை சொல்லியிருப்பான் அச்சிறுவன். 'நான் விடைபெறுகிறேன் என் அன்பான நண்பர்களே' என குறிப்பிட்டு இருக்கும்.



2. பெரும்பாலும் வாகனங்களை ஓட்டும் சிலர் மொபைலில் பேசி கொண்டோ அல்லது செய்தி அனுப்பிக் கொண்டோ செல்வார்கள். இப் புகைப்படம் மூலம் இதை செய்யாதீர்கள் என்ற செய்தியை மக்களுக்கு கூறியிருப்பார்கள்.




4. உடல் எடை அதிகமானால் என்ன நடக்கும் என்பதை புகைப்படத்தில் தெளிவுற கூறியுள்ளார்கள்




5. பெண்கள் தான் அணியும் உடையில், கழுத்து பகுதிக்கு கீழே எவ்வாறு மறைக்கின்றனர் அதற்கு என்ன பெயர் சமுகத்தில் சொல்லுவார்கள் என்பதை காட்டும் புகைப்படம்.





6. நுரைீரல் தானம் சம்ந்தமான விழிப்புணர்வு விளம்பரம் மனதை உருக்கும் புகைப்படமாகும்

7. தன்னுடைய தனிப்பட்ட புகைப்படங்களை மற்றவர்களுக்குப் பகிர்வதால், அதனால் ஏற்படும் விளைவுகள் அதிகம் என்பதை இப்புகைப்பட விளம்பரம் மூலம் உணர்ச்சிகரமாக சொல்லியிருக்கிறார்கள்.




8. குடிப்பழக்கம் தன்னை மட்டும் அல்ல தன் குடுப்பத்தில் இருக்கும் அனைவரையும் பாதிக்கும் என்பதை காட்டும் விளம்பரம்.




10. இருட்டை அணைத்து வெளிச்சம் வந்தாலும் அதுலும் இவர்கள் காண்பது வன்முறைகளே



# இரண்டு கால்கள் அகற்றப்பட்ட பின்னும் குதிரைப் பந்தயத்திற்கு தயாரான பெண்



"என்னை அந்தப் பதினைந்து நிமிடங்களில் இறந்துவிட்டதாக அறிவித்தார்கள். ஆனால் நினைவு திரும்பி கண்விழித்துப் பார்த்த போது மூன்று நாட்களாகி இருந்தன. என் இரண்டு கால்களும் என்னிடமிருந்து பிரித்து இருந்தன. ஆனால் இன்றுவரை குதிரை ஓட்டிக் கொண்டுதான் இருக்கிறேன்" இது குதிரைப் பந்தய வீராங்கனை பெலீஷியா கிரிம் மன்ஹேக்கின் நம்பிக்கை வார்த்தைகள்.

பெலீஷியா கிரிம்மன்ஹேக் கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னால் தனது நண்பருடன் பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது நான்கு சாலைகள் சந்திக்கும் பகுதியில் வேகமாக வந்த கார் இவரது பைக்கின்மீது மோதியது. அப்போது பலத்த காயமடைந்த இவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் இறந்துவிட்டதாக அறிவித்தனர். ஆனால், பதினைந்து நிமிடங்களுக்குப் பின்னர் பெலீஷியா கிரிம்மன்ஹேக்கின் உடலில் அசைவுகள் தெரிய மீண்டும் மருத்துவ சிகிச்சைகள் அவருக்கு அளிக்கப்பட்டன. மூன்று நாட்கள் கழித்து கண் விழித்துப் பார்த்திருக்கிறார். அப்போது எழுந்து நடக்கப் பார்த்தவருக்கு மிகப்பெரிய அதிர்ச்சி. அவரது இரண்டு கால்களும் அறுவைச் சிகிச்சை செய்து அகற்றப்பட்டிருந்தன.

"உலக அளவில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தில் தான் கலந்துகொள்ள வேண்டும்" என்ற முனைப்புடன் பயிற்சி எடுத்து வந்தவருக்கு அதிர்ச்சியாகத்தானே இருக்கும். இருந்தும் மனம் தளரவில்லை. மீண்டும் தன்னால் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்ள முடியும் என முயற்சி செய்தார். முதல் முயற்சி தோல்வியில் முடிகிறது... மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறார். இப்போது வெற்றி வசமாகிறது.

மீண்டும் குதிரையின் மீது ஏறி அமர்ந்துவிட்டார். பாதுகாப்புக் கவசங்களை அணிந்து கொள்கிறார். கடிவாளத்தைச் சுழற்றியதும் குதிரை நகர ஆரம்பிக்கிறது. நகர ஆரம்பித்தது குதிரை மட்டுமல்ல நாட்களும்தான்... இப்போது ஆறுவருடங்கள் கழிந்துவிட்டன. நகர ஆரம்பித்த குதிரை இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது. பெலீஷியா கிரிம்மன்ஹேக் என்ற நம்பிக்கை மனுஷியைச் சுமந்து...

வருடங்கள் கடந்து விட்டாலும், தன்னுடைய வேலைகளைத் தானே கவனித்துக் கொள்கிறார். குதிரைப் பராமரிப்பு, இருப்பிட பராமரிப்பு என அனைத்து வேலைகளும் இவர்தான் செய்து கொள்கிறார். இவருக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட வீல் சேரின் உதவியுடன் அனைத்து இடங்களுக்கும் பயணம் செய்கிறார். இதற்கெல்லாம் அவர் சொல்லும் பதில். "இங்கு எதுவும் கெட்டுவிடவில்லை. நான் கால்கள் இல்லாமல் பிறந்ததாக நினைத்துக் கொள்கிறேன். நடந்தது நடந்துவிட்டது. இனி அதைப்பற்றி பேசிப் பயனில்லை. இப்போது நான் அடுத்த பாரா ஒலிம்பிக்கை நோக்கிக் காத்திருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம், நான் சாதிக்க நினைத்தேன் என்பதை விட, எனது குதிரை என்னைச் சாதிக்க வைக்க வேண்டும் என்று நினைத்தது. என்னுடைய குதிரை என்னை முழுமையாகப் புரிந்து கொண்டுவிட்டது. நான் என்ன நினைக்கிறேனோ அதை என் கண்களின் மூலமாகவே எனது குதிரை கண்டுபிடித்துவிடும். எனது குதிரையை விலங்காக நினைக்கவில்லை. என் உடன் பிறந்த சகோதரனாக நினைக்கிறேன். நான் குதிரையை நேசிக்கவில்லை, குதிரைதான் என்னை நேசிக்கிறது. நான் பந்தயத்தில் வெல்ல நினைக்கிறேன் என்பதை என் குதிரை எப்போதோ கண்டுபிடித்துவிட்டது. ஊனமுற்றவர்களுக்கு மனிதர்கள் உதவுவதைப்போல, விலங்குகளும் உதவி செய்யும் என்பதை இப்போதுதான் உணரத் தொடங்கியிருக்கிறேன்" என்கிறார், பெலீஷியா கிரிம்மன்ஹேக்.

இதற்கு முன்னர், இதேபோல இரண்டு கால்களை இழந்த ஏஞ்சலிகா ட்ராபெர்ட் என்ற பெண்மணி இரண்டு கால்கள் இல்லாமல் கடந்த 25 வருடங்களில் ஐந்து பாரா ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொண்டு 24 பதக்கங்கள் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏஞ்சலிகா ட்ராபெர்ட்டைப் பின்பற்றி பெலீஷியாவின் பார்வையும் 2020 ஆம் ஆண்டு நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டியை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்ட தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் உள்ளூராட்சித் தேர்தல் 2018 இற்கான மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு வருகை தரும் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை வரவேற்கின்றோம்.

இடம் : யாழ்.மாநகரசபை மைதானம்
(யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு அருகில்)

காலம் : 05.02.2018


"கிராமத்தின் எழுச்சி நம் இனத்தின் எழுச்சி"
அனைவரும் அணி திரண்டு வாரீர்!



அங்கஜன் இராமநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (மாவட்ட தலைவர்)

(C-023)

# ஆட்டம் காணும் அ.தி.மு.க.



மறைந்த முதல்வர் ஜெயலலிதா சட்ட மன்ற உறுப்பினராக இருந்த ஆர்.கே. நகர் தொகுதிக்கான இடைத் தேர்தல் முடிவு கிட்டத்தட்ட தமிழக அரசியலில் கடந்த ஓராண்டாக நிலவி வந்த குழப்ப நிலை மேலும் தொடரும் என்பதன் அறிகுறியாகவே அமைந்துள்ளது. சுயேச்சையாகப் போட்டியிட்ட வேட்பாளர் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதற்குச் சொல்லப்படும் காரணம் நம்முடைய தேர்தல் ஆணையத்துக்கு தில்லுமுல்லுகளைத் தடுத்து நிறுத்த போதிய வலு இல்லை என்பதைச் சொல்வதோடு, வாக்குகளைப் பணத்துக்கு விற்கும் கலாசாரம் தமிழ்நாட்டு வாக்காளர்களை எங்கு கொண்டு போய் நிறுத்தும் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

தமிழகம் முழுவதுமே ஆளுங்கட்சிக்கு எதிரான மக்களின் அதிருப்தி வெளிப்படையாகத் தெரிகிறது. இருந்தும்கூட, இந்த இடைத்தேர்தலை எதிர்க்கட்சியான தி.மு.கவால் வெல்ல முடியவில்லை.

ஆளுங்கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளால் அதிக வாக்குகளைப் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட தி.மு.க., கடைசியில் வழக்கமான தனது வாக்கு வங்கியையும்கூடப் பறிகொடுத்து, டெபோசிட் இழப்புக்கு ஆளாகியிருக்கிறது. அ.தி.மு.கவின் இருதரப்பும் போட்டி போட்டுக்கொண்டு விநியோகித்த பணம் மட்டுமே தி.மு.கவின் தோல்விக்கான காரணம் என்று சொல்லிவிட முடியாது. அ.தி.மு.க. மீதான அதிருப்தி இயல்பாக தனக்கான ஆதரவாகிவிடும் என்ற தி.மு.க. தலைமையின் கணக்கு மேல் விழுந்திருக்கும் அடி இது. மக்களிடம் தி.மு.க. மேலும் நெருக்கமாகச் செல்ல வேண்டும்.

சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கும் டி.டி.வி. தினகரனின் வெற்றி தி.மு.க.வுக்குக் கொடுத்திருக்கும் அடியைவிடவும் அ.தி.மு.கவுக்குக் கொடுத்திருக்கும் அடி அதிகம். பழனிச்சாமி, பன்னீர்செல்வம் இருவரும் இணைந்து, அரசு இயந்திரத்தின் முழுப் பலத்தையும் பயன்படுத்தி, கூடவே பண பலத்தையும் இறக்கி இவ்வளவுக்குப் பின்னரும் அடைந்திருக்கும் தோல்வி அ.தி.மு.கவுக்குள் கடும் அதிர்வுகளை உண்டாக்கியிருப்பதை இப்போதே உணர முடிகிறது. பழனிச்சாமி, பன்னீர்செல்வம் இருவருமே கட்சியில் தங்கள் அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொள்வதில் காட்டிவரும் ஆர்வத்தை மாநில நலனில் காட்ட வேண்டும். மாநில உரிமைகளைப் பறிகொடுக்கும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களிடம் செல்வாக்கு இல்லாவிட்டால் கட்சியிலும் செல்வாக்கு பறிபோய்விடும் என்பதை உணர வேண்டும்.

தற்போதைக்கு, தினகரன் வென்றிருக்கிறார். கட்சியின் பெயர், சின்னம் வலுவான எதிர்க்கட்சி எல்லாவற்றையும் தாண்டி வென்றிருக் கிறார் என்றாலும், இது பண பலத்துக்குக் கிடைத்த வெற்றி என்ற விமர்சனத்தில் உண்மை இருக்குமானால், அது குறித்து அவர் ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அரசியல் வெற்றி என்பது நம்முடைய் பணி மக்களிடத்தில் எப்படியான தாக்கத்தையும் மாற்றத்தையும் உண்டாக்கியிருக்கிறது, களத்தை எவ்வளவு மேம்படுத்தியிருக்கிறது என்பதில் இருக்கிறது. தினகரனுடைய பேச்சும் ஊடகங்களை அவர் அணுகும் விதமும் ஒரு கூட்டத்தை அவர் பக்கம் ஈர்த்திருக்கிறது.

மக்களில் ஒரு பகுதியினர் ஆர்வத்தோடு அவரைப் பார்ப்பதை உணரவும் முடிகிறது. ஆனால், அவர் இனியாவது மக்களுக்கான அரசியலைப் பேச வேண்டும். இந்த ஓராண்டில் அ.தி.மு.க. அதிகார பீடத்துக்கான போட்டியும் பூசலுமே அவருடைய அரசியலின் பேசுபொருளாக இருந்து வந்திருக்கிறது. இனியேனும் மக்கள் பிரச்சினைகளை அவர் பேச வேண்டும்!

**த ஹிந்து**

**ஆசிரியர் தலையங்கம்**


# மூலப்பொருள் செலவின்றி புதிய முறையில் மின்னுற்பத்தி

பூமியில் உள்ள காபனீரொட்சைட்டை உறிஞ்சி, எதிர் மறை உமிழ்வு முறையில் மின்சாரம் தயாரிக்கும் உலகின் முதல் மின்சார நிறுவனம் ஐஸ்லாந்தில் செயற்பாட்டிற்கு வந்துள்ளது.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த "கிளைம் ஒர்க்ஸ்" நிறுவனம், ஐஸ்லாந்தில் புவிவெப்ப ஆற்றல் மின்நிறுவனம் ஒன்றை நிறுவியுள்ளது.

இதுவரை இல்லாத புதுமையான வழியில் மின்சாரம் உற்பத்தி செய்கிறது இந்த மின் நிறுவனம். வழக்கமாக அனல்மின் நிலையங்கள் காபனீரொட்சைட்டை உமிழும். ஆனால் இந்த மின் நிலையம் காபனீரொட்சைட் கழிவுகளை நிலத்தடி பாறையில் இருந்து உறிஞ்சி, மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

700 மீற்றர் ஆழத்தில் உள்ள கருங்கல் பாறையில் இருந்து இந்த வாயுவை உறிஞ்சி எடுக்கிறார்கள். உறிஞ்சப்படும் காபனீரொட்சைட்டை குறைந்த வெப்பநிலைக்கு உட்படுத்தி மின்சாரமாக மாற்றுகிறார்கள்.



இப்படி திடப்பொருளில் இருந்து காபனீரொட்சைட்டை உறிஞ்சும் நுட்பத்தை சுவிஸ் விஞ்ஞானிகள் குழு இரண்டு ஆண்டு முயற்சியின் பலனாக கண்டுபிடித்துள்ளது. இந்த நுட்பம் 'கார்பிக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த நுட்பம் இதுவரை இல்லாத அளவுக்கு அதி வேகத்தில் காபனீரொட்சைட்டை உறிஞ்ச உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


"பூமி முழுவதும் இந்தப் பாறை அடுக்கு பரவலாகக் காணப்படுகிறது. எனவே மூலப்பொருள் தட்டுப்பாடு இல்லாமல், எந்த இடத்திலும் இந்த தொழில் நுட்பத்தில் மின்உற்பத்தி சாத்தியம்" என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஏற்கனவே இந்த நிறுவனம் டி.ஏ.சி எனும் நுட்பத்தில் சுற்றுப்புறத்தில் இருந்து காபனீரொட்சைட்டை உறிஞ்சி, சுத்திகரித்து வர்த்தக ரீதியில் விற்பனை செய்து வருகிறது. இதனால் காற்று மாசுவை கட்டுப்படுத்தும் சுற்றுச்சூழல் நண்பனாகவும் விளங்கி வருகிறது.

பூமிக்கு அடியில் உள்ள காபனை உறிஞ்சுவதால் ஏற்படும் எதிர் விளைவுகள் பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை.

இருப்பினும் புதுமையான முறையில் மின்சாரம் தயாரிக்கும் இந்த நிறுவனம், தனது செயற்பாட்டை தொடங்கி விட்டது.

# facebook முதலாளி



முட்டை விலை எவ்வளவுங்க, அந்த பெண் கேட்டாள். ஒரு முட்டை ஐந்து ரூபாய்ம்மா? என்றார் அக்கிழவர்.

சரி, ஆறு முட்டைகள் 25/- க்கு கொடுப்பீங்களா? என கேட்டாள். சரிம்மா, நீ கேட்ட விலைக்கே வாங்கிக்க. காலையிலிருந்து நீதான் போணி செய்கிறே...

கடவுள் உன்ன நல்லா வைக்கட்டும்," என்றார் அம்முட்டைக்கார கிழவர். தான் கேட்ட விலைக்கு கிடைத்துவிட்டது என்ற சந்தோஷத்துடன் அப்பெண் முட்டைகளை வாங்கிக் கொண்டாள்.

பிறகு தன் அழகான காரில் தன் தோழியை அழைத்துக் கொண்டு ஒரு ஹோட்டலுக்கு சென்றாள்.

அவர்கள் இருவரும் ஹோட்டலில் அமர்ந்து பேசிக் கொண்டே தாங்கள் விரும்பியது வாங்கி சாப்பிட்டனர்.

- சாப்பிட்டது குறைவு, மீதம் விட்டது அதிகம் பில் தொகை 1200/-, அவள் 1300/- ஐ ஹோட்டல் நிர்வாகியிடம் கொடுத்து மீதி சில்லறையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்றாள்.

ஹோட்டல் உரிமையாளருக்கு இது மிகச் சாதாரண விடயம். ஆனால் முட்டை விற்ற கிழவருக்கு வலி மிகுந்த விடயம்? இதில் உற்றுநோக்க வேண்டியது.

நாம் உதவி தேவைப்படும் ஏழைகளிடத்தில் ஏதேனும் வாங்கும்போது நம் பலத்தை காட்டுகிறோம்.

பணக்காரர்களிடமும், தேவைகளே இல்லாதவர்களிடமும் நாம் நம் தாராள குணத்தை காட்டுகிறோம் தயவு செய்து ஏழைகளிடம் பேரம் பேசாதீர்கள்.

# மமதை

எலி ஒன்று வைர வியாபாரி வீட்டிலிருந்து ஒரு வைரத்தை விழுங்கிவிட்டது..

மிகவும் விலை உயர்ந்த வைரம் அது. வியாபாரி ஒரு எலி பிடிப்பவனைப்பார்த்து எப்படியாவது அந்த எலியை ஷூட் செய்து வயிற்றில் இருக்கும் வைரத்தை எடுக்க உதவ வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

எலி பிடிப்பவனும் தன் துப்பாக்கியுடன் வந்துவிட்டான் அதை ஷூட் செய்ய எலி அங்கே இங்கே என்று போக்கு காட்டி ஓடியதில் திடீரென்று ஆயிரக்கணக்கான சக எலிகள் ஒன்று கூடிவிட்டன.

ஆயிரக்கணக்கான எலிகளுக்கிடையேயும் அந்த வைரம் விழுங்கிய எலி மட்டும் அந்த எலிக் கூட்டத்தோடு சேராமல் ஒதுங்கியே நின்றிருந்தது எலி. பிடிப்பவனுக்கு வசதியாக போய்விட்டது..

சரியாக குறி பார்த்து அந்த எலியை டுமீல் சுட்டான் எலி spot out.



இறுதியில் என்னமோ அழிவுதான் நிச்சயம், அது வரை அக்கிரமக்காரர்கள் ஆடட்டும்,

வைர வியாபாரி சந்தோஷமாக அந்த எலியின வயிற்றைக் கிழித்து வைரத்தையும் எடுத்துக்கொண்டான்:

ஆனால் ஒரு கேள்வி எலி பிடிப்பவனைப்பார்த்து கேட்டான் ஆமா! அந்த எலி மாத்திரம் மற்ற எலிகளோடு சேராமல் தனியே இருந்ததே! நீயும் அதை சரியாக அடையாளம் கண்டு சுட்டுவிட்டாய் என்ன காரணம்?

அந்த எலி பிடிப்பவன் பதில் சொன்னான் இப்படி முட்டாள்கள், தான் பணக்காரர்கள் ஆனதும் மற்றவர்களுடன் தன்னை தூரத்தில் வைத்துக்கொள்வார்கள். படித்தேன் பகிர்ந்தேன்...

# மனைவி / கணவன்



மனைவி:- மாமூ! நான் உங்களை கல்யாணம் பண்ணிக்க ரொம்பவே கொடுத்து வெச்சிருக்கேன்னு ஊருக்குள்ள பேசிக்கிறாங்களாம்!

கணவன்:- குட்டிம்மா! இப்ப புரியுதா, இந்த மாமுவோட மகிமை!

மனைவி:- க்கும்! நீங்க என்னை கல்யாணம் பண்ணிக்க, என் அப்பாக்கிட்ட ரொக்கப்பணம், நகை நட்டு, பாத்திர பண்டம், சொத்து பத்துன்னு ஏகப்பட்டதை வாங்கினதைத்தான் அப்படி சொல்றாங்க!

கணவன்:- ம்ம்... ம்ம்... ம்ம்... ம்ம்... ம்ம்... ம்ம்... ம்ம்...

கணவன்:- இப்பத்தான் எனக்கு ஒரு உண்மை புரியுது!

மனைவி:- "வரதட்சணை" வாங்கறது தப்புங்கறதுதானே!

கணவன்:- அட, அதில்ல! உன்னோட டார்ச்சரை எல்லாம் தாங்கிக்கிட்டு, எங்கேயும் ஓடிப் போயிடாம, உன் கூட மாரடிக்கத்தான் உங்கப்பன் இதை எல்லாம் எனக்கு கொடுத்திருக்கிறாருங்கறது!

மனைவி:- ஹஹ... ஹஹ... ஹஹ... ஹஹ... ஹஹ... ஹஹ...

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1321

Search for people, places and things    Nagendram    Home

### கீர்த்திகா

சொர்க்கம்னா என்ன Baby



நாம வாழ்ந்த School Life, College Life தான் இந்த உலகத்துல உண்மையான சொர்க்கம் Baby

### சஞ்சனா

குடிச்சு குடிச்சு கை நடுங்குது டாக்டர்

Dont Worry உங்க குடிக்கிற பழக்கத்தை நிறுத்திடலாம்



கை நடுக்கத்தை மட்டும் நிறுத்துங்க சரக்கு சிந்துது

### சாய்பிரியா

பையன்: எனக்கு வேலை இல்லைனு தெரிஞ்சும் எப்படி நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்க...



பொண்ணு: பையன் என்ன பண்றான்னு கேட்டாங்க வயித்தில உதைக்கிறான்னு சொன்னேன்...

### தட்சாயினி

பீச்சில மீன் சாப்பிட்ட ரெண்டு பேர் மண்டைய போட்டுட்டாங்களாம்... பாவம் அப்புறம்....



அப்புறமென்ன அந்த மீன் மண்டைய நாய் தூக்கிட்டு போயிச்சுது...

### சாருசாயினி

வெளுத்தது எல்லாம் பால் இல்லை...



வெள்ளையா இருக்கிறவ எல்லாம் பிகர் இல்லை...

### பிரணவி

மனைவி:
காரணம் இல்லாம
குடிக்கமாட்டேன்னு
சொன்னீங்களே...
இப்போ ஏன் குடிச்சீங்க.

கணவன்:
ராக்கெட் விடுறதுக்கு
பொத்தல் வேணும்னு
பையன் கேட்டான் அதான்.

மனைவி: ????

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 119

## நீரிழிவு நோய் உள்ளவர்கள் கரட், பூசணி, பீற்றூட் என்பவற்றை உண்ணலாமா?





**கேள்வி பதில்**

**கேள்வி** - பலர் தமக்கு நீரிழிவு நோய் உண்டென அறிந்ததுமே கரட், பூசணி, பீற்றூட் என்பவற்றை உள்ளெடுப்பதை நிறுத்தி விடுகின்றனர் இது சரியானதா?

**பதில்** - இல்லை கரட், பூசணி, பீற்றூட் என்பவற்றை முற்றாகத் தவிர்ப்பதன் மூலம் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நினைக்கும் பலர் நம்மில் இருக்கிறார்கள்.

கரட் மிக அதிகளவில் பீற்றா-கரட்டீன் எனப்படும் விற்றமின் A க்குரிய முற்பொருளைக் கொண்டுள்ளது. மேலும் இதில் விற்றமின் B,C போலிக்கமிலம், மக்னீசியம், பொற்றாசியம் என்பன நிறைந்துள்ளன. நார்ப் பொருள் தேவையான அளவில் உள்ளது. இதைவிட பல்கறினோல் (Falcarinol) எனப்படும் புற்றுநோய் வராமல் தடுக்கும் பதார்த்தமும் நிறைந்துள்ளது. இப்பதார்த்தமானது கரட்டினை நறுக்கிக் கழுவும் போது வீணாகி விடும். எனவே முழுமையாக அவிப்பதே பொருத்தமானது. இதில் சீனியின் அளவு மிகக் குறைவு. எனவே நீரிழிவு நோயாளிகளும் உட்கொள்ளலாம்.

பீற்றூட் உணவுக்கு நிற மூட்டுவது மட்டுமன்றி அதில் உள்ள பீற்றைன் (Betine) என்ற அமினோ அமிலம் புற்றுநோயைத் தடுக்கும். அதில் நார்ப்பொருள் நிறைந்துள்ளது.

இதில் சீனியின் அளவு மிகக் குறைவே (100g க்கு 6g என்ற வீதத்தில்) மேலும் இது உயர் இரத்த அழுத்தம், இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிதல் என்பவற்றைத் தடுக்கும் ஆற்றல் உடையது.

பூசணி ஒரு சுவையான உணவு மட்டுமல்லாமல் இதில் விற்றமின் A,B என்பன உள்ளன. இதிலுள்ள சீனியின் அளவு மிகக் குறைவு. (100g இல் 1.36g அளவே உண்டு). எனவே கரட், பூசணி, பீற்றூட் ஆகிய மூன்றையும் நீரிழிவு நோயாளிகள் மாத்திரமல்ல சுகதேகியாக உள்ள அனைவரும் போதுமான அளவில் உணவிற் சேர்த்துக்கொள்ளலாம்.

Dr. திருமதி. பிரதீபனா செல்வகரன்.

## வயிற்றோட்டம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?



ஒரு நாளைக்கு மூன்று முறைக்கு மேல் நீராக மலம் செல்வதையே வயிற்றோட்டம் என்கிறோம். வயிற்றோட்டம் ஏற்படும் போது ஒருவரின் உடலிலிருந்து நீர், உப்புக்கள், சீனிச்சத்து ஆகியன அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படுதலானது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துகின்றது. இந்த ஆபத்தை தடுக்க வெளியேறிய நீர், உப்புக்கள், சீனிச்சத்து ஆகியன மறுபடியும் உடலுக்குள் சேர்க்கப்பட வேண்டும்.

நோய்க்கிருமிகள் உடலினுள் செல்வது வயிற்றோட்டம் வருவதற்கு ஒரு முக்கிய காரணியாகும்.

**கிருமிகள் உடலுக்குள் செல்லும் முறைகள்**

- அழுக்கடைந்த கைகள்
- அழுக்கடைந்த தண்ணீர்
- அழுக்கடைந்த உணவு
- முறையாகவும் போதியளவும் சமைக்கப்படாத உணவுகள்

**வயிற்றோட்டத்தைத் தவிர்க்கும் முறைகள்**

- கொதித்தாறிய நீரைக் குடிக்க வேண்டும்
- சுத்தமான நீரைப் பயன்படுத்தல்
- சாப்பாட்டிற்கு முன்னரும், மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
- சுத்தமாக நன்கு சமைத்த உணவை உண்ணுவதோடு சமைத்த உணவைப் பூச்சிகள் மொய்க்காமல் மூடிப் பாதுகாக்க வேண்டும்.

**வயிற்றோட்டத்திற்கான சிகிச்சை முறைகள்**

- தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகளுக்குத் தொடர்ந்து தாய்ப்பாலை கொடுக்க வேண்டும்
- உப்பு சேர் குளுக்கோசு நீர், உப்புசேர் கஞ்சி, பொரியரிசி நீர், தேசிக்காய்த் தண்ணீர், இளநீர் ஆகியவை எல்லா வயதுப் பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம்.
- உணவு - வயிற்றோட்டத்தின் போது உணவுகளைக் கொடுக்கலாம். ஒரு பகுதியாவது சேமித்து உடலிற்குச் சத்தைக் கொடுக்கும்.
- வயிற்றோட்டம் குறைந்து வரும்போது கட்டாயமாக உணவுகளைத் திரும்பவும் கொடுக்க வேண்டும். வயிற்றோட்டத்தின் பின் ஒரு கிழமைக்காவது ஒரு மேலதிக உணவு கொடுக்க வேண்டும்.

**உப்புசேர் குளுக்கோசு நீர்**

உப்புசேர் குளுக்கோசு அடங்கிய சரைகளைக் கடைகளில் வாங்கலாம் (ஜீவனி) இதில் சோடியம் குளோரைட்டு, சோடியம் இருகாபனேற்று, பொற்றாசியம் குளோரைட்டு, குளுக்கோசு அடங்கியுள்ளன. இவற்றை ஒரு லீற்றர் கொதித்தாறிய நீரில் அல்லது சுத்தமான நீரில் கரைத்துப் பாவிக்கலாம். இதை வயிற்றோட்டம் இருக்கும் போது அடிக்கடி கொடுக்க வேண்டும். வாந்தி இருந்தாலும் கொடுக்கலாம்.

குழந்தைகளுக்கு இடையிடையே கொதித்தாறிய சுத்தமான நீரும் கொடுக்க வேண்டும். கரைத்த உப்புசேர் குளுக்கோசு 24 மணித்தியாலங்களுக்கு வைத்துப் பாவிக்கலாம்.

**உப்புசேர் கஞ்சி**

வயிற்றோட்டத்திற்கான உப்புக்கள் அடங்கிய சரைகளை கடைகளில் வாங்கலாம். இதில் சோடியம் குளோரைட்டு, சோடியம் இருகாபனேற்று, பொற்றாசியம் குளோரைட்டு அடங்கியுள்ளன. வறுத்த அரிசி மாவு 50 கிராம் எடுத்துச் சுத்தமான நீரில் 5 நிமிடத்திற்குக் கொதிக்க வைத்துத் தண்ணீரில் முழு அளவை ஒரு லீற்றர் வரும் வரை கொதித்தாறிய நீரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதற்குள் உப்புக்கள் அடங்கிய சரை ஒன்றைச் சேர்த்துக் கரைத்துவிட வேண்டும்.

இதனை 8-10 மணித்தியாலத்திற்குத்தான் வெளியில் வைக்கக்கூடியதாக இருக்கும். குளிர்சாதனப் பெட்டியானால் கூடிய நேரத்திற்கு வைக்கலாம்.

வீடுகளில் வயிற்றோட்டத்திற்கான உப்புக் கரைசலோ, உப்புசேர் குளுக்கோஸ் கரைசலோ (ஜீவனி) எப்போதும் வைத்திருப்பது நல்லது.

வயிற்றோட்டம், சத்தி என்பன கடுமையாக இருப்பின் வைத்தியர் ஒருவரின் ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

யாழ் மருத்துவக் குழு



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்